KALKI 29.3.92 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு

கல்கி



விருது பெற்ற அர்ச்சனா ஐ.பி.எஸ்.

வேலூர் நகரச் சிறப்பிதழ்

சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டுவது என்பது ஒரு குழந்தையின் விளையாட்டு அல்ல

அறிமுகப்படுத்துகிறோம்

ஜீவன் க்ருஹ

உங்கள் வீட்டுக் கடன் முழுமையாக உள்ளடங்கும் ஒரு கச்சிதமானத் திட்டம்



தேர்ந்தெடுக்க இரு திட்டங்கள் – டபுள் கவர் மற்றும் ட்ரிபிள் கவர் ★

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் வீட்டுக் கடன் தொகையின் ஒரு பாதி அல்லது மூன்றில் ஒரு பங்கிற்கு ஈடான அடிப்படைத் தொகைக்கு ஒரு காப்பீடு எடுக்க வேண்டும். உங்களுடைய சமப்படுத்தப்பட்ட மாதாந்திரத் தவணை, கடன் தொகை, வட்டி மற்றும் ப்ரீமியம் தொகையைத் திருப்பி அளிப்பதை ஈடு செய்யும் வண்ணம் இருக்க வேண்டும்.

முதிர்வடைந்ததும், காப்பீட்டிலிருந்து பெறப்படும் தொகை வீட்டுக் கடன் கணக்கில் மிஞ்சியுள்ள தொகையைக் கொடுக்க ஏதுவாக இருக்கும்.

மாதாந்திர செலவு மிகவும் குறைவானது. கடன் அமலில் இருக்கும் சமயத்தில் நிகழும் இறப்பிற்கு பூரண பாதுகாப்பு உண்டு.

மேற்கொண்டு விவரங்களுக்கு ஏதாவது ஒரு எல்ஐசி ஏஜண்ட் அல்லது அருகாமையிலுள்ள எல்ஐசி அல்லது எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., அலுவலகத்தை அணுகவும்.

★ எங்களிடமிருந்து வீட்டுக் கடன் பெற்றதும் அல்லது எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டில் வீட்டுக் கடன் கணக்கு வைத்துள்ளவர்களுக்குத் ட்ரிபிள் கவர் வசதி கிடைக்கும்.

RADEUS/LIC/LHF/419-91 TAM

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

வேலூர் ரத்னா சந்திரசேகரன்!



"எந்தவொரு நல்ல காரியத்துக்கும் பணம் தடையில்லை; மனம்தான் தடை'' என்று சொல்லும் சந்திரசேகரனைத் தெரியாதவர்கள் வேலூரில் கிடையாது. 'ரத்த தானம் சந்திரசேகரன்' என்றால், குழந்தைகள் கூட இவர் வீட்டுக்கு வழிகாட்டும்!

அரைக் கை கதர்ச் சட்டை, வேஷ்டி, ஆங்கிலக் கலப்பில்லாத பேச்சுத் தமிழ், அதிர்ந்து பேசியறியாத குரல்.... எல்லாமே இவருக்கு இயல்பாய் அமைந்திருப்பதால் பார்த்தவுடனேயே ஒரு மரியாதை ஏற்படுகிறது.

''நாங்கள் அண்ணன் தம்பிகள் நான்கு பேர். எங்கள் தந்தை படிக்காதவர். பீடி சுற்றும் ஒரு சாதாரணத் தொழிலாளியாகத்தான் இருந்தார். ஆயினும் எங்கள் அனைவரையும் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார். என் மூத்த அண்ணன், அண்ணா பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியர். இன்னொருவரும் பேராசிரியர். மூவருமே நன்கு படித்து வேலையிலிருப்பவர்கள். நான் மட்டும்தான் மூன்றாமாண்டு பட்டப் படிப்பின் போது படிப்பை நிறுத்தி விட்டேன்!''

''ஏன்?''

''அப்போது ஒரிஸாவில் வெள்ளம். அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய இளைஞர்களை அழைத்தபோது, நான் படிப்பை விட்டு விட்டு, வெள்ள நிவாரணப் பணிகளைச் செய்யப் போய் விட்டேன். படிப்பு தடைப்பட்டுப் போனது.''

''அதனால் வருத்தமேதும் இல்லையா?''

''இல்லை. படிப்பு என்பது வெறும் வேலைவாய்ப்புக்கான ஒரு விஷயம் என்று மட்டுமே நான் கருதவில்லை. எங்கள் தந்தையும் அப்படி வளர்க்கவில்லை. நேர்மையையும், பிறருக்கு உதவும் மனத்தையுமே அவர் எங்களிடம் எதிர்பார்த்தார். அதுதான் மனித வாழ்க்கைக்கு அவசியமானது என்று சொல்லுவார். அதனால், பிறருக்கு உதவுதல் என்பது எங்களின் வாழ்க்கையின் இயல்பான ஒன்றாகி விட்டது. சிறு வயதில் கூட, அம்மா கடைக்குப் போய்ப் பொருள்கள் வாங்கி வரச் சொன்னால், உடனே பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் ஏதாவது தேவையா என்று கேட்டு, அவர்களுக்கும் சேர்த்து வாங்கி வரும் குணம் ஏற்பட்டு விட்டது!'' என்று சொல்லும் சந்திரசேகரனுக்கு, குஜராத்திலிருந்து வந்து, சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற, பாரதிபட் என்ற பெண்மணிக்குச் செய்த ரத்ததானம்தான் துவக்கம்.

''அவருக்கு நான் ரத்ததானம் செய்த போது, அவர் என்னைத் தமது உறவினர்களுக்கு ''பிளட் ப்ரதர்'' என்று அறிமுகப் படுத்தி வைத்தார். அந்த வார்த்தை என்னை மிகவும் ஈர்த்துவிட்டது. அதன் பிறகுதான் ரத்ததானத்தில் மிகுந்த கவனம் செலுத்தி, முழு மூச்சுடன் செயல்பட்டுத் தானம் கொடுக்க முன் வருவோர் பலரையும் ஒருங்கிணைக்க ஆரம்பித்தேன்.

''பாரதிபட் என்ற அந்தச் சகோதரி

இறந்த போது வழங்கிய கண் தானம் தான், கண்தானத்திலும் நான் கவனம் செலுத்தக் காரணமாக இருந்தது!'' என்று சொல்லும் சந்திரசேகரன், இப்போது யாருக்கு ரத்தம் தேவைப்பட்டாலும், கண்கள் தேவைப்பட்டாலும் அணுகக் கூடிய முதல் நபராக இருக்கிறார். முன்பின் தெரியாத ஊரில் ஒருவர் தமக்கு ரத்தம் வழங்கினாரே என்கிற நன்றிக் கடனுக்காகப் பாரதிபட் வழங்கிய ஆயிரம் ரூபாயைத் தமது சொந்தத்துக்குப் பயன்படுத்தாமல், 'பாரதிபட் அறக்கட்டளை'யைத் துவக்கி, அதையும் பொது நலனுக்கே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் சந்திரசேகரன்.

''நீங்கள் முழுநேரமும் ரத்ததானம், கண்தானம், உடல் தானம் போன்ற பொதுப் பணிகளிலேயே ஈடுபட்டிருப்பதால், சொந்த வேலை பாதிக்கப்படவில்லையா?''

''பாதிப்பு இருப்பது உண்மைதான். மாட்டுத் தீவனங்களை விற்கும் கடை இருக்கிறது. அதில், முன்பு நான் வருமானவரி கட்டுகிற அளவுக்கு வருமானம் வந்தது. இப்போது இல்லை. ஆயினும் நான் வருத்தப்படவில்லை. என் துணைவியார் ஆசிரியையாக வேலை பார்ப்பதாலும், என்னைப் புரிந்து கொண்டவராக இருப்பதாலும் குடும்ப வண்டி சிக்கலில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது!'' என்று புன்னகை செய்யும் சந்திரசேகரன், இன்னொரு பணியையும் செய்து கொண்டிருக்கிறார்.

''உணவு விடுதிகளில் இரவில் மிஞ்சும் உணவுகளை அவர்கள் வீணாகத்தான் குப்பையில் போடுகிறார்கள். அதை ஏன் பிச்சைக்காரர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று கேட்டபோது, எல்லா நாட்களும் மிஞ்சாது என்கிற நிலையில், பிச்சைக்காரர்களுக்குப் போட்டுப் பழக்கப்படுத்தினால் அவர்கள் தினமும் வந்து தொந்தரவு செய்வார்கள் என்பதால்தான் குப்பையில் கொட்டுகிறோம் என்றார்கள். நான் யோசித்தேன். இரவில் ஒவ்வொரு உணவு விடுதிக்கும் சென்று, மிஞ்சியவற்றையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து ஒன்று சேர்த்து, நானே தினமும் பிச்சைக்காரர்களுக்கு வழங்க ஆரம்பித்தேன்!'' என்கிறார்.

இவருடைய சேவையைக் கண்ட ரோட்டரி சங்கத்தினர், இவரை அவர்களாகவே அணுகித் தங்கள் சங்கத்தில் கௌரவ உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டனர். இப்போது இவரைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

''என்னைக் கௌரவ உறுப்பினராகச் (சந்தா கட்டத் தேவையில்லை) சேர்த்துக் கொண்டபோது, எனக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால் எனது சுயமரியாதை பாதிக்கப்படுவதுபோல் உணர்ந்தேன். எனவே, கஷ்டத்தோடு கஷ்டமாகச் சந்தாக் கட்டும் உறுப்பினராகி விட்டேன். ரோட்டரி சங்கத்தில் இருப்பதன் மூலம், பல வசதியானவர்களின் தொடர்பும் உதவியும் பொதுப் பணிக்குத் துணையாக இருக்கிறது!'' என்கிறார்.

இவரிடம் இருக்கும் இன்னொரு மனப்பக்குவம் எந்தத் தொழிலும் கௌரவமானது என்பது. ''என் இரண்டாவது சகோதரர் கல்லூரியில் பேராசிரியராக வேலை பார்த்தபோது, எனக்கு வேலை இல்லை. அதனால் எனது அண்ணனுக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு போகும்போது, மற்றவர்களுக்கும் சேர்த்து எடுத்துக் கொண்டு போனால் வருமானம் கிடைக்குமே என்று எண்ணினேன். அப்படியே எடுத்துக் கொண்டும் போனேன். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், நான் இப்படி சாப்பாட்டுத் தூக்குகளை எடுத்துக் கொண்டு வந்து, தமது சக ஆசிரியர்களுக்குக் கொடுப்பது பற்றி என் அண்ணன் அசிங்கப்படாமல், கௌரவமாக நினைத்ததுதான்!'' என்கிற சந்திரசேகரன் கோணி, குப்பைக் காகித வியாபாரம் கூடச் செய்திருக்கிறார்.

இவர் தமது திருமணத்திற்கு ஜாதகப் பொருத்தம் பார்க்காமல் ரத்தப் பொருத்தம் பார்த்தது ஆச்சரியமானது மட்டுமல்ல; பாராட்டுக்கும் உரியது. ''பிறக்கப்போகும் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்குத் தம்பதிகளின் ரத்தப் பொருத்தமும் ஒரு காரணம் என்கிற விஞ்ஞான அடிப்படையிலேயே அப்படிச் செய்தேன்!''

தஞ்சை நகர வாசகர்களே!

கல்கி ஏப்ரல் 26 - தஞ்சை நகரச் சிறப்பிதழ்

மார்ச் 28 - ம் தேதி சனிக்கிழமை காலை 9 மணி முதல், மாலை 4 மணிவரை, தஞ்சை பஸ் நிலையம் அருகிலுள்ள வசந்தபவன் - ஈஸ்வரி லாட்ஜில், கல்கி ஆசிரியரையும் ஆசிரியர் குழுவினரையும் நேரில் சந்தித்துப் பேசலாம்.

- ஆசிரியர்

திருமணப் பத்திரிகை கூட வித்தியாசமானது. அது வெறும் திருமணப் பத்திரிகையாக இல்லாமல், செய்திப் பத்திரிகை போல் இருக்கிறது. இந்து திருமணச் சட்டம், பதிவுத் திருமணச் சட்டம், கலப்பு மணம் செய்து கொண்ட முன்னோடிகள் என்று திருமணத்தைப் பற்றி ஏராளமான தகவல்கள் அடங்கிய ஒரு சிறு புத்தகமாகவே அச்சிட்டிருக்கிறார். அதனால், இவரைப் பார்க்கும் பலரும் அந்த அழைப்பிதழ் தங்களுக்கும் வேண்டுமென்று இன்னமும் கேட்டுக் கொண்டிருப்பதால், தமது திருமண அழைப்பிதழை மீண்டும் மறு பதிப்புச் செய்ய இருக்கிறார் சந்திரசேகரன்.

இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான இவர், குடும்பக் கட்டுப்பாடு ஏதும் செய்து கொள்ளவில்லை. ''மனக்கட்டுப்பாடு இருக்கிற போது, செயற்கையான கட்டுப்பாடுகள் எதற்கு?'' என்கிறார்.

ரோடரி சங்கத்தின் தலைவராக இருந்தபோதிலும் சைக்கிளில்தான் செல்கிறார். ''பொதுப் பணி என்று வந்து விட்டால் எளிமை மிகவும் அவசியமானது. நான் எனது இல்லத்தில் தொலைபேசி வைத்திருப்பது கூட எனது சொந்த வியாபாரத்திற்கு உதவும் என்பதற்காக அல்ல; திடீரென்று யாருக்காவது உதவி தேவைப்பட்டால் என்னை அழைப்பதற்கு உதவியாக இருக்குமே என்பதற்காகத்தான்!'' என்று சொல்லும் சந்திரசேகரன், இவரது சேவையைப் பாராட்டி, யாராவது ஏதாவது கொண்டு வந்து மனமுவந்து கொடுக்கும் போதும் அவற்றைத் தீர்மானமாக மறுத்து விடுகிறார்.

''எனக்குக் கொடுக்கும் இவற்றை நீங்களே கொண்டு சென்று, அநாதைக் குழந்தைகளுக்கோ அல்லது எங்கோ தொலை தூரத்திலிருந்து வந்து சி. எம். சி.யில் மருத்துவம் பார்த்துக் கொள்பவர்களுக்கோ கொடுங்கள். அப்போது அவர்களுக்கு மட்டுமல்ல; உங்களுக்கும் ஏற்படும் மகிழ்ச்சிக்கு ஈடு இணையே கிடையாது என்பதை அனுபவபூர்வமாக உணர்வீர்கள்!'' என்று சொல்லுகிறார் சந்திரசேகரன்.

- சாருகேசி

அது 1963 ஆம் வருடம்.

ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள், வேலூரை அடுத்துள்ள கிராமப் பகுதிகளுக்குத் தொழு நோய்ச் சிகிச்சை அளிக்க வந்தார்கள். அதற்காகக் கரிகிரி என்ற கிராமத்தில் மருத்துவமனை ஒன்றை நிறுவியதோடு, வீடுகளுக்கும் நேரடியாகப் போனார்கள். பஸ் ஸ்டாண்டுகளில்



☛ போலியோ குழந்தைகளுக்குச் சிகிச்சை, கல்வி, பயிற்சி.

ஊனமுற்றால் என்ன? உலகுக்கே உதவலாமே!

வைத்தே ஆட்களைத் தெரிந்தெடுத்து, வீட்டிலேயே வைத்தியம் பார்த்துக் கொள்ளும் சிகிச்சை முறையைச் சொல்லிக் கொடுத்தார்கள்; மருந்துகளை வழங்கினார்கள்.

மருந்துகளை மட்டுமா வழங்கினார்கள்? அல்ல, மறு வாழ்வையும் வழங்கினார்கள்.

அவர்களுக்குத் தொழில் பயிற்சி அளிக்க மையங்கள் ஆரம்பித்தார்கள்.

☛ 'வேத்'தில் அநாயாசமாகப் பணிபுரியும் பார்வையற்ற ரோஷன்கான்.



ஒன்று, இரண்டு பேர் என்று ஆரம்பித்து 56 பேர் பயிற்சி பெறச் சேர்ந்தார்கள்.

கிராமப்புறப் பகுதிகளுக்குச் செல்லும் போது, அங்கே போலியோ நோய் தாக்கிப் பெற்றோருக்கு ஒரு சுமை என்று கருதப் பட்டு வந்த குழந்தைகளைப் பார்க்கையில், இவர்களுக்கும் ஒரு வழி கிடைக்க வேண்டாமா என்று தோன்றியது.

''கல்வியோ, தொழிலோ, வாழ்க்கைக்கு உதவுகிற மாதிரி செய்வதுதான் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டது!'' என்கிறார் WORTH (Workshop for Rehabilitation and Training of the Handicapped) Trust ன் இயக்குநர் போஸ் க்ருஸ்.

ஆனால் ஆரம்பத்தில், பயிற்சி பெற வந்தவர்களுக்குள்ளேயே கருத்து வேற்றுமைகள். தொழுநோய் குணமான நிலையிலும், அவர்கள் தொட்ட பொருட்களை, மற்ற பயிற்சியாளர்கள் தொடத் தயாராயில்லை. அதனால் மனங்களையும் தயார்ப் படுத்த வேண்டிய நிலை! பயிற்சி முடிந்து வெளியேறும் ஊழியரை, தொழிலகங்களும் அப்போது வரவேற்கவில்லை. அப்புறம்தான் மெல்ல மெல்லத் தொழிற்சாலைகள் அவர்களை ஏற்கத் தொடங்கின. அப்போதும் கூட, அவர்கள் தயாரிக்கிற பொருட்களைக் கை கொண்டு தொட்டுப் பரிசீலனை செய்யும் மனப்பக்குவம் வந்திருக்கவில்லை. இப்போது நிலைமை பெருமளவுக்கு மாறியிருக்கிறது.

ஸ்வீடன் நாட்டுத் தொண்டர்கள், 'இனி நீங்களே இந்தப் பயிற்சி மையத்தை ஒரு டிரஸ்ட்டாக ஏற்று நடத்துங்கள்!' என்று ஒப்படைத்த போது, அமைக்கப்பட்டது தான் 'வொர்த் டிரஸ்ட்' என்ற அமைப்பு. இதன் முதல் சேர்மன் பொறுப்பை ஏற்றவர் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் அதிபர் கே. வி. சீனிவாசன். அதாவது 76-ல்.

இப்போது டி. ஐ. குருப்பைச் சேர்ந்த எம். வி. சுப்பையாதான் இந்த அறக் கட்டளையின் தலைவர்.

''எந்தக் கொள்கைக்காக ஆரம்பித்தோமோ, அதை விட்டு விலகிச் செல்லாமல், தொடர்ந்து இந்தப் பயிற்சி மையத்தை நடத்தி வருகிறோம்!'' என்றார் போஸ் க்ரூஸ்.

ஐ. டி. ஐ. பயிற்சி முறைதான். பிற அமைப்புகளுக்கும் இவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள். திருச்சியிலும், பாண்டிச்சேரியிலும் உற்பத்தி மையங்களை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிறது வொர்த். ''திருச்சியில் டிராக்டர் ட்ரெயிலரெல்லாம் உற்பத்தியாகின்றன. அவர்களும் ஊனமுற்றோர்தான். இதுபோன்ற மையங்களின் மூலம் கிடைக்கும் வருவாய்தான் மற்ற மாணவர்களுக்கு உதவப் பயன்படுகிறது!''


டர்னர், மெஷினிஸ்ட், டிராஃப்ட்ஸ்மென் தொழில்களுக்கு இரண்டு வருடப் பயிற்சி அளிக்கிறார்கள். எல்லோருமே போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள்.

போஸ் க்ரூஸ்



''குறைந்தபட்சம் நான்கு மணி நேரமாவது மெஷின் அருகே நின்று கொண்டு வேலை பார்க்கும் உறுதி வேண்டும். பள்ளி இறுதி வகுப்பு தேறியிருக்க வேண்டும்.

ஊனமுற்ற மாணவர்களுக்கு ஐ. டி. ஐ. பயிற்சி.



டிராஃப்ட்ஸ்மென் பயிற்சிக்கு மட்டும், சற்று சீரியஸான ஊனம் இருந்தாலும் பரவாயில்லை. ஏனென்றால் நாற்காலியில் அமர்ந்தபடி வரைபடங்கள் தயாரிப்பது தான் இவர் வேலை என்பதால்தான் அப்படிச் சலுகை'' என்கிறார் போஸ். ''மிகச் சிறந்த டர்னர் அவார்டு எங்கள் மாணவருக்குக் கிடைத்திருக்கிறது. தொழிற்சாலையும் அகில இந்திய அவார்டு பெற்றிருக்கிறது!''

பிரம்மாண்டமான வளாகம். கண்கள் குளிரக் குளிர, பார்க்கும் இடமெல்லாம் செடிகள், புல்கள், புல்வெளிகள். தோட்டக்காரர் கூட குஷ்டத்தால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தவர்தான்!

பிளாஸ்டிக் பாக்டரிக்கு எதிரே கொத்துக் கொத்தாய்ப் புல் முளைத்து வளர்ந்திருக்கிறது. ''இது கொரியன் புல். புழுதி, தூசி ஒன்றும் பாக்டரிக்குள் எட்டியே பார்க்காது!'' என்கிறார் போஸ்.

பிளாஸ்டிக் தொழிற்சாலையில், ஸ்வீடிஷ் இன்டர்நேஷனல் ஏஜென்சி கொடுத்த இயந்திரம் இப்போதும் அருமையாக உழைக்கிறது. ''இது தவிர வேறு இயந்திரங்கள் சில வாங்க, IDBI ஒரு கோடி ரூபாய் கடன் தந்து உதவியது. இப் போது செலுத்த வேண்டிய கடன் பாக்கி 3 லட்ச ரூபாய்தான்!'' என்று நம்பிக்கையும், பெருமிதமும் தொனிக்கச் சொல்லுகிறார் போஸ்.



சிவப்புப் பார்வை

விபச்சார விடுதி நடத்தும் செந்தாமரை, சாராயத் தொழில் பிரபலம் ஒரு விரல் கிருஷ்ணாராவ், அமைச்சர் மகன் பப்லு என்கிற ப்ருத்திவிராஜ் மூவரும் ரோடு பொறுக்கிகள்!

இரவில் ஆட்டோவில் வரும் தம்பதியை வழிமடக்கி, சின்னப் பெண் முன்னாலேயே அப்பாவைக் கொன்று, அம்மாவைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் -

சின்னப் பெண் வளர்ந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் (டிஸ்கோ சாந்தி) ஆகிப் பழிவாங்குகிறாள். இதுதான் கதை. இதிலென்ன புதுமை?

மூன்று காட்சியில் மட்டுமே டிஸ்கோ சாந்திக்கு இன்ஸ்பெக்டர் டிரஸ்ஸையும் பிஸ்டலையும் தந்த டைரக்டர் செல்வா ('நீலா மாலா' செல்வா இல்லை) மீதிப் படம் முழுக்க டிஸ்கோ சாந்தியின் கவர்ச்சியைத்தான் நம்பியிருக்கிறார். செந்தாமரையும் ஒருவிரல் கிருஷ்ணாராவும் பக்கபலத்துக்கு!

இப்படி ஒரு அபத்தக் களஞ்சியத்தைப் படம் என்ற பெயரில் எடுத்திருக்கும் தயாரிப்பாளரின் தைரியத்தையும் டைரக்டரின் தைரியத்தையும் என்ன சொல்லிப் பாராட்டுவது?

இதெல்லாமா சினிமா?

- ராகவ்

டைட்டன் கைக்கடிகாரப் பட்டை, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்துக்கான பிலிம் ரோல்கள் சுற்றும் ஸ்பூல், சைக்கிள் பெடல் எல்லாம் தயாராகிக் கொண்டிருந்தன.

"இட்டிலி சாப்பிட்டியா? எத்தனை சாப்பிட்டே?'' என்று அன்பொழுகக் கேட்கிறார் போஸ், கட்டிலில் சற்று வெட்கத்தோடு உட்கார்ந்திருக்கும் போலியோ தாக்கிய குழந்தையிடம்.

போலியோ குழந்தைகள் ''குட்மார்னிங் அங்க்கிள்'' சொல்லி வரவேற்கின்றன.

சிலருக்கு அறுவைச் சிகிச்சைக்கான நாள் குறிக்கப்பட்டிருக்கின்றன. சிலருக்கு காலிபர் பூட்சுகள் தயாராகிக் கொண்டிருந்தன. அத்தனை பேருக்கும் கல்வியளிக்க, பள்ளிக்கூடம். ஆஸ்பெஸ்டாஸ் கூரை மீது மஞ்சம்புல், மெத்தை மாதிரி விரிக்கப்பட்டிருந்தது - வெயில் தாக்காமல், குளுகுளு என்றிருக்க!

''இவர்களுக்கெல்லாம் உணவு, தங்குமிடம், சிகிச்சை எல்லாமே இலவசம் தானா?''

''இலவசம் என்று சொல்ல முடியாது. இந்தக் குழந்தைகளின் பெற்றோர்களால் எவ்வளவு தர முடியுமோ, அவ்வளவு தந்துதான் ஆக வேண்டும். அது பத்து ரூபாயாக இருந்தாலும் சரி, சந்தோஷமாக வாங்கிக் கொள்வோம். முழு இலவசம் என்றால், பெற்றோருக்கு ஒரு பொறுப்புணர்ச்சி இல்லாமல் போய் விட வாய்ப்பிருக்கிறதே, அதனால்தான்!''

காட்பாடியில் இவர்கள் அமைத்திருக்கும் தொழிற்பேட்டையில் இயங்கும் தொழிற்சாலையில் தமிழகத்தின் புகழ் பெற்ற நிறுவனங்களின் தயாரிப்புக்கள் சிலவற்றுக்கு உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சக்கர நாற்காலிகளுக்கு நல்ல டிமாண்ட் இருப்பதால், நிறையவே தயாராகின்றன.

''ஏற்றுமதி ஆர்டர்கள் கூட வரத் தொடங்கியிருக்கின்றன!'' என்கிறார் போஸ்.

வேலூருக்குப் பெருமை சேர்க்கும் அமைப்பு.

- எஸ். வி. என்.

ஜெ.யின் ஆசி

விசுவநாதன் தயவு

வேலூரின் வளர்ச்சி!

அவர் சொல்வதும் உண்மைதான் என்பதற்குப் பஸ் நிலையத்தை ஒட்டியுள்ள அண்ணா பஜார் மாட்டு வண்டி நிலையமும், சென்ட்ரல் சர்ச்சை ஒட்டியுள்ள மீன் மார்க்கெட்டுமே உதாரணங்கள். மார்க்கெட்டிலுள்ள அத்தனை குப்பைகளையும் மாட்டு வண்டிகளை நிறுத்தும் நிலையத்திலேயே கொண்டு வந்து கொட்டுவார்களோ என்று நினைக்கும் அளவுக்குக் குப்பைகள்! மீன் மார்க்கெட்டின் அத்தனை அசுத்தங்களும் அகற்றப் படுவதேயில்லை என்கிற மாதிரி துர்நாற்றம்!



☛ அய்யாவு

எந்த நகரமாக இருந்தால் என்ன, புறநகர் என்றாலே புறக்கணிக்கப்பட்ட நகர்தான் என்பதற்கு வேலூரை ஒட்டியுள்ள வி. ஜி. ராவ் நகரிலுள்ள பாங்க் காலனியும் ஓர் உதாரணம். இந்த ஆண்டு, வருண தேவன் கருணையில் வேலூருக்குள் தண்ணீர்ப் பஞ்சமே தலைகாட்ட முடியவில்லை என்றாலும், பாங்க் காலனி மட்டும் விதிவிலக்கு. ''குடிநீரைத் தினமும் குடத்துக்கு இவ்வளவு என்று காசு கொடுத்துத்தான் வாங்கிக் கொண்டிருக்கிறோம். வீதிகள் கூடச் செப்பனிடப்படவில்லை என்பதால் அவசரத்திற்கு ஆட்டோ கூட உள்ளே வர முடியாது!'' என்கிறார் அங்கு வசிக்கும் திருமதி கமலா ஆராவமுதன்.

காரணம் என்ன? அது இன்னமும் தாராப்படவேடு பஞ்சாயத்தைச் சேர்ந்ததாகவே இருப்பதுதான். அங்கு வீடு கட்டியிருப்பவர்களெல்லாம் அசோசியேஷனாக ஒன்று சேர்ந்து, நகராட்சியிடம் ஒப்படைக்குமாறு பஞ்சாயத்தை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்து அசைந்து கொடுப்பதாகவே தெரியவில்லை.

''நகராட்சி எல்லைக்குள் இருந்தால் மட்டும் எல்லா வசதிகளும் கிடைத்து விடுகிறதா? சாக்கடைக் கால்வாய்களெல்லாம் சரிவரத் தூர் எடுக்கப்படுவதேயில்லை. அதனால் சாக்கடைத் தேக்கம்; கொசுக்களின் உற்பத்தி என்று ஏராளப் பிரச்னைகள்தான்'' என்கிறார் மேலப்பாடி பகுதியில் வசிக்கும் செல்வி உத்ரா.

மீன் மார்க்கெட் என்றால் துர்நாற்றம் இருக்கத்தான் செய்யும்! சரி, பூங்காவில் கூடவா துர்நாற்றம் வீசும்? ஈ. வே. ரா. பெரியார் பூங்காவில் வீசுகிறதே! 17.3.74-ல் கருணாநிதி திறந்து வைத்த பூங்கா, இன்று மலஜலம் கழிக்கும் இடமாகத்தான் இருக்கிறதே தவிர, இளைப்பாறும் இடமாக இல்லை.

''இது நாள்வரை நாங்கள்தான் நல்லபடியாகப் பராமரித்து வந்தோம். அந்த இடம் முழுக்க முழுக்க தொல்பொருள் ஆய்வுத் துறைக்குச் சொந்தமானது என்பதால், இனி தாங்களே பூங்காவைப் பராமரிக்கப் போவதாகச் சொல்லி, எங்களிடமிருந்து பூங்காவை வாங்கிக் கொண்டு விட்டார்கள். அதனால் நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்கிறார் நகராட்சி ஆணையர் அய்யாவு.

மேலும் இப்போது மீன் மார்க்கெட்டு உள்ள இடத்தில் அழகான ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டப்படவிருப்பதாகச் சொல்கிறார் ஆணையர். பஸ் நிலையமும் மாற்றப்படவுள்ளதாம்.

''சாக்கடைகள் பராமரிப்பு என்பதில் பொது மக்களின் ஒத்துழைப்பும் தேவை. இதற்கான நிரந்தரத் தீர்வு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்படும் போதுதான் கிடைக்கும்'' என்கிறார் ஆணையர்.



☛ செல்வி உத்ரா

இன்னொரு முக்கியமான விஷயம் நகராட்சியின் வரவு -

''இதே போல் வேலூர் மக்களின் குடிநீர் வசதிக்கும் இப்போதுள்ள ஆதாரங்கள் போதாது. வேலூரிலிருந்து சுமார் 20 கி. மீ. தொலைவிலுள்ள பொன்னையாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் செயல்படுத்தப் பட்டால்தான், வேலூர் மக்களின் குடிநீர்ப் பிரச்னை தீரும்!'' என்று நகராட்சி ஆணையர் மட்டுமல்ல; கலெக்டரும் அதையேதான் சொல்லுகிறார்.

அரசு இதற்கான முயற்சிகளை



☛ கமலா ஆராவமுதன்



☛ பெரியார் பூங்கா : பூங்காவா இது?



☛ மாட்டு வண்டி நிலையம்

செலவு. ''நகராட்சி ஊழியர்களுக்கு அவ்வப்போது சம்பளம் ஏற்றப்படுகிறது. ஆனால், அதற்குத் தகுந்த மாதிரி நகராட்சியும் அவ்வப்போது வரிகளை உயர்த்த முடியாது. அதனால் வரவை விடச் செலவினங்கள் அதிகமாகி விடுகின்றன. நகராட்சியிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான சேம நலநிதி போன்று ஏறத்தாழ இரண்டரைக் கோடி ரூபாய் இன்னும் வழங்கப்படாமல்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் அரசு நிதியுதவி செய்யாமல் விடிவே இல்லை!'' என்கிறார் ஆணையர் அய்யாவு.

எடுக்குமா? வேலூர்க்காரரான ஜி. விசுவநாதன் அமைச்சராகவும் இருப்பதால், நிச்சயம் ஆவன செய்வார் என்று பலரும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இனி புரட்சித் தலைவியின் ஆசியைப் பெறுவதில் ஜி. விசுவநாதன் எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறார் என்பதைப் பொறுத்துத்தான் வேலூரின் முன்னேற்றம் அடங்கியிருக்கிறது!

- எஸ். ஐ.

வேலூர் தொடர்பான வண்ணப்படமும் படங்களும் : யோகா


என்னய்யா போர்ட்டர் நீ... இதைக் கூடவா தூக்க முடியாது!
ஜாபர் ஷெரீப்..
அதான் கோஸ்டைக் குறைச்சிட்டேன்ய... வெரசவா நடக்கக் கூடாது?
நான் குற்றம் சாட்டுறேன்... உள்ள விதிமுறைகள் மீறப் பட்டுள்ளன!
கருணாநிதி
இவரு பெரிய வக்கீலாக்கும்! பெரிசாதான் அலட்டிக்கிறாரு... நீங்க கவலைப் படாதீங்கம்மா, நான் இருக்கேன்...
ஜெயலலிதா
பஞ்சாப் பயங்கரவாதம்
அய்... இவ்ளோ பெரிய பூதமா இருக்கியே...! இத்தனூண்டு பாட்டில்லே எப்படி அடங்கிக் கிடந்தே? எங்கே மறுபடி உள்ளே போ, பார்க்கலாம்...
அது பழைய கதை... ஏதாவது சொல்லு!



கல்கி

1992
மார்ச் 29
மலர் : 50
இதழ் : 35
பிரஜோத்பத்தி
பங்குனி 16

பஞ்சாப் பூதம்

பஞ்சாபில் தற்போது நடந்துவரும் அர்த்தமற்ற கொலைகள், மிகுந்த மனவேதனை அளிப்பன. சமீபத்தில்தான் அங்கு தேர்தல்கள் வன்முறையின்றி நடந்து முடிந்தது மன நிறைவை அளித்திருந்தது. குறைந்த சதவித வாக்காளர்கள்தாம் வாக்கெடுப்பில் பங்கேற்றனர் என்றாலும் பொதுவாகவே இந்தியாவில் வாக்குச் சாவடிக்குச் செல்லும் மக்களின் எண்ணிக்கை, அப்படி ஒன்றும் அதிகம் இல்லை என்று எண்ணி, ஓரளவு ஆறுதல் அடையவும் முடிந்தது. ஜனநாயகம் திரும்பி விட்டதால் இனி பிரச்னைகளும் பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்க்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியது.

ஆனால் அந்தக் கருத்துக்களையெல்லாம் பொய்யாக்கிக் கொண்டு, பஞ்சாப் பயங்கரவாதிகள் முன்னெப்போதையும் விட கோர தாண்டவம் ஆட ஆரம்பித்து விட்டனர். முன்பும் கொலைகள் நடந்தன என்பது உண்மைதான். கல்யாண வீட்டில் மரண ஓலம் கேட்டிருக்கிறது. பஸ் பயணிகளை இறக்கி வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளியிருக்கின்றனர். ஆனால் பெரும்பாலும் பஞ்சாபியர்தான் இவ்வாறு கொல்லப்பட்டார்கள். இப்போதோ, பிற மாநிலங்களில் இருந்து வந்து பணியாற்றுவோரையும் கொன்று குவிக்க ஆரம்பித் திருக்கிறார்கள். அதாவது பஞ்சாப் பிரச்னைகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாத, பஞ்சாபின் வளர்ச்சிக்கு மட்டுமே பாடுபட்டு, திறமைக்கேற்ற ஊதியம் பெறும் நோக் கத்துடன் வந்துள்ளவர்களையும் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். இவ்வாறு இளம் இன்ஜினியர்களும், விஞ்ஞானிகளும் மரணம் அடைவது பஞ்சாபுக்கு மட்டுமல்ல, பாரத தேசத்துக்கே பெரு நஷ்டம். சிறிய, பெரிய தொழிலகங்களில் பணியாற்றும் உயர்மட்ட அதிகாரிகளையும், விஞ்ஞானிகளையும் கொல்வது, பஞ்சாபின் வளர்ச்சியையே பாதிக்கும் என்பதை பயங்கரவாதிகள் எண்ணிப் பார்க்கவில்லை. வேறு மாநிலத்தவருக்கு இங்கே என்ன வேலை என்று கேட்பது போல் செயல்பட்டு இருக்கிறார்கள். இந்தப் போக்கு பஞ்சாபின் எதிர்காலத்தைப் பாழ்படுத்தும்.

பஞ்சாபியரோ, வேறு மாநிலத்தவரோ, சாமான்யனோ அல்லது அறிவாளியோ யார் மடிந்தாலும் சோகம்தான். பஞ்சாப் மாநில அரசோ இறந்தவர்கள் குடும்பங்களுக்கு நஷ்டஈடு இனி ஒரு லட்சம் என்று உயர்த்துவதற்கு அதிகமாக ஏதும் செய்ய இயலாமல், கைகளைப் பிசைந்து கொண்டிருக்கிறது. இந் நிலையில் மத்திய அரசின் பொறுப்பு மிக அதிகமாகிறது.

பயங்கரவாதிகளை வளைத்துப் பிடிப்பதும் வெற்றி கொள்வதும் ரொம்பக் கஷ்டம். எதிரிகள் படையெடுத்து வந்து நேருக்கு நேர் நின்றால் போரிடலாம். மறைந்திருந்தும் சகஜ வாழ்வில் கலந்து இருந்தும் திமர் என்று தாக்குவோரை எப்படி இனம் கண்டு சுற்றி வளைப்பது? மாபெரும் வல்லரசான அமெரிக்காவே வியட்நாமில் கொரில்லாக்கள் முன் தடுமாறிப் போய் விடவில்லையா?

எனவே அரசியல் தீர்வு அவசியமும், அவசரமும் ஆகிறது. பயங்கரவாதிகளை எதிர்த்துப் போரிடுவதாகக் காட்டிக் கொண்டே அரசியல் தீர்வுக்கு முயற்சி செய்ய வேண்டும். ராஜீவ்-லோங்கோவால் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது ஓர் ஆரம்பமாக இருக்கக்கூடும். சில பல பிரச்னைகளில் தீவிரவாதிகள் கருத்தை ஏற்பது பயங்கரவாதிகளை வெல்லவும், மிதவாதிகளை ஊக்குவிக்கவும் உதவும். மத்திய அரசு வறட்டு கௌரவத்தில் நிற்காமல், வளைந்து கொடுக்கட்டும். பாட்டிலை விட்டு வெளியே விடப்பட்ட பயங்கரவாத பஞ்சாப் பூதத்தை, வலிமை காட்டி வெல்ல முடியாத போது, தந்திரத்தால்தான் மறுபடி பாட்டிலுக்குள் அடைக்க வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.



வேலூரைச் சுற்றி...

☛ பஸ் நிலையம்

●● வேலூர் பஸ் நிலையம் மாதிரி பயணிகளைக் குழப்புகிற இடம் உலகில் வேறு எங்குமே இருக்க முடியாது. சுருக்க மாகச் சொன்னால் அது பஸ் நிலையம் மாதிரியே இல்லை. கிடைக்கிற சந்து பொந்துகளிலெல்லாம் பஸ்களை நிறுத்திய மாதிரிதான் காட்சியளிக்கும். சில பஸ்கள் அண்ணா கலையரங்கம் அருகிலும், சில பஸ்கள் நேஷனல் தியேட்டர் அருகிலும் நிறுத்தப்பட்டுப் புறப்படுவதால், வெளியூர் வாசிகளின் பாடு திண்டாட்டம்தான். ஆனா லும் ஒரு வசதி. வேலூரிலுள்ள ஆட்டோக் கள் இன்னின்ன இடங்களிலிருந்து இன் னின்ன இடங்கள் வரை இவ்வளவுதான் கட்டணம் வாங்க வேண்டும் என்று நிர்ண யிக்கப்பட்டி ருப்பதால், பயணிகள் தைரியமாக ஆட்டோ வில் பயணம் செய்ய லாம். ''நிர்ணயித்தபடிதான் கட்டணம் வாங்குகிறீர்களா?'' என்று ஆட்டோ டிரை வர் தேவேந்திரனிடம் கேட்ட போது, ''நான் அப்படித்தான் வாங்குகிறேன்!'' என் றார்.




☛ தேவேந்திரன்

●● வேலூர் சி. எம். சி. மருத்துவ மனை பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடி யாது. ஆனால் எம். எஸ்ஸி. உயிர்ப் புள்ளி யியல் (Biostatistics) படிப்பு இந்தியாவி லேயே சி. எம். சி. யில்தான் இருக்கிறது என்பது நிறையப் பேருக்குத் தெரியாதது!

●● ஒவ்வொரு ஷஷ்டியின் போதும் ஆறு ஆறு மரங்கள் என்று தமது சொந்தச் செலவில் வைத்துக் கொண்டிருக்கிறார், முப்பது வயது இளைஞர் ராமமூர்த்தி. கடந்த பன்னிரண்டு வருடங்களாகச் செய்து வருகிறாராம். ''இது மட்டுமல்லாமல் அவ் வப்போது காடுகளின் பயன்களைப் பற்றி நோட்டீஸ் அச்சடித்து மாணவ மாணவிய ருக்கு வழங்குவேன்; பள்ளிகளிலும் சென்று எடுத்துச் சொல்லுவேன்'' என்கிறார் ராம மூர்த்தி.

●● வேலூரிலுள்ள மாணவர்கள் ஏதாவது சாதிக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு 'விழுதுகள்' இலக்கிய மன்றத்தையும், EYES (Educated Youth Enlightened Society) அமைப்பையும் சொல்லலாம். விழுதுகள்



☛ ராமமூர்த்தி

இலக்கிய மன்றத்தை முன்னின்று நடத்தி வரும் மாணவர்கள் செழியனும் அன்பும், மற்ற மொழி இலக்கியங்களைப் பற்றி அறிந்திருக்கும் அறிஞர்களை அழைத்து வந்து பேசச் செய்து, பிறமொழி இலக்கியங்களை நம்மவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால், சத்துவாச்சேரியில் உள்ள EYES மாணவர்கள், பொது மக்களின் அன்றாடப் பிரச்னைகளுக்குத் தங்களால் முடிந்த அளவு உதவிக் கொண்டிருக்கிறார்கள். ''எங்க ளால் காசு, பணம் செலவழிக்க முடியாது. ஆனால், பொதுக் காரியங்களுக்கு எங்கள் உடல் உழைப்பைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம்'' என்று மனப்பூர்வமாகச் சொல்கிறார்கள்.

●● இப்போதைய அமைச்சர் ஜி. விசுவநாதனின் பொறியியற் கல்லூரிக்கு எதிராகத்தான் தி. மு. க. அரசு 90-ல் தந்தை பெரியார் அரசு பொறியியற் கல்லூரியை ஆரம்பித்தது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இதனால் மாணவர்கள் பலர் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள் என்பது பலருக்குத் தெரியாது. அரசு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டவுடன், அதில் அனைவரும் வந்து சேரலாம் என்று தி. மு. க. அரசு அறிவிப்புச் செய்தது. தனியார் கல்லூரியை விட அரசு கல்லூரியில் கட்டணங்கள் மிக மிகக் குறைவு என்பதால், ஜி. விசுவநாதனின் வேலூர் எஞ்ஜினியரிங் கல்லூரியில் படித்த மாணவர்களும் அரசு கல்லூரியில் போய்ச் சேர டி. சி. கேட்டனர். நிர்வாகம் டி. சி. தர மறுத்து விட்டது. இந்த நிலையில் 'டி. சி. இல்லாமலே வந்து சேரலாம். படிப்பை முடித்து விட்டுப் போவதற்குள் டி. சி. யை வாங்கி வந்து கொடுத்து விட்டால் போதும்' என்று தி. மு. க. அரசு அறிவித்தது. மாணவர்களும் அப்படியே போய்ச் சேர்ந்தனர். தனியார் கல்லூரி நிர்வாகம் சும்மா இருக்குமா? டி. சி. வாங்க வேண்டுமானால் ஐம்பதாயிரம் கொடு, ஒரு லட்சம் கொடு என்றெல்லாம் பேரம் பேசியதால், மாணவர்கள் பயந்து போய்க் கிடந்தார்கள். நல்ல வேளையாக, இப்போது அமைச்சரானதும் பழையவற்றை மறந்து, அனைத்துப் பழைய மாணவர்களுக்கும் டி. சி. வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய விஷயம்தான்!

– நிருபர்

அடுத்த இதழில்...

● ரன்களைக் குவிக்கும் ராமன்!


– தமிழ்நாடு அணி காப்டனுடன் ஒரு சந்திப்பு



'லில்லி' உள்பாவாடைகள் தயாரிப்பாளர்

கரூர் P.R.C. கார்மெண்ட்ஸ்ஸாரின்

இரட்டிப்புப் பயன் தரும் புதுமையான திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.

டிசைன் நெ. 1	டிசைன் நெ. 2
	

திட்டத்தின் விவரம் :

ரூபாய் 210/- செலுத்தியவுடன் ஐந்து லில்லி, உள்பாவாடைகள் (Normal Size, இடுப்புச் சுற்றளவு அதிகபட்சம் 35"/88 cms., உயரம் 36"/90 cms., 38"/95 cms., 40"/100 cms., 42"/105 cms.)

(அல்லது)

ரூபாய் 250/- செலுத்தியவுடன் ஐந்து லில்லி உள்பாவாடைகள் (Spl. Size : இடுப்புச் சுற்றளவு : 40"/102 cms, உயரம் : 36"/90 cms., 38"/95 cms., 40"/100 cms., 42"/105 cms.) உங்களுக்கு விருப்பமான கலரில், தேவையான அளவுகளில் பதிவுத் தபால் மூலம் பெற்றுக் கொள்கிறீர்கள். வெளிமார்க்கெட்டில் கிடைக்கும் அதே விலையில் ஒன்றின் விலை (Normal Size : ரூ. 42/ Spl. Size : ரூ. 50/).

இவ்வாறு குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு இரண்டு முறை மொத்தம் 10 லில்லி உள்பாவாடைகள் வீதம் ஐந்து வருடத்திற்கு நீங்கள் பணம் செலுத்தியவுடன் எங்களிடமிருந்து லில்லி உள்பாவாடைகள் பெற்றுக் கொள்கிறீர்கள்.

மேற்படி ஐந்து ஆண்டுகளில் நீங்கள் பெற்றுக் கொண்ட லில்லி உள்பாவாடைகளுக்காக செலுத்திய பணம் முழுவதையும் (அதாவது ஒவ்வொரு முறையும் நீங்கள் செலுத்திய பணம் ரூ. 210/- அல்லது ரூ. 250/- வீதம் ஐந்து ஆண்டுகளில் 10 முறை செலுத்திய தொகை ரூபாய் 2,100/- அல்லது ரூபாய் 2,500/-) ஆறாவது ஆண்டு துவக்கத்தில் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறீர்கள்.

இத்திட்டத்தின் மூலம் உங்கள் தேவைக்கு தரத்தில் சிறந்த, வண்ணம் கலையாத வடிவமைப்பில் சிறந்த மற்றும் தேவையான அளவுகளில் லில்லி உள்பாவா டைகள் பெற்றுக் கொள்வதுடன் நீங்கள் செலுத்திய பணத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்கிறீர்கள்.

இத்திட்டத்தில் இந்தியாவில் எந்தப் பகுதியில் உள்ளவரும் சேர்ந்து பயனடையலாம். Normal Size ரூ. 210/-; Spl. Size ரூ. 250/-. உங்கள் தேவைக்கு D.D. அல்லது M.O. கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

P.R.C. கார்மெண்ட்ஸ்,

லில்லி உள்பாவாடைகள் தயாரிப்பாளர்,

26, பிரதட்சணம் ரோடு, 'ஏ' பிளாட்,
கரூர் - 639 002. தொ.பே.: 21946.

குறிப்பு : 1) தபால் செலவை எங்கள் நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது. 2) Normal Size டிசைன் நெ. 1 & 2 ல் கிடைக்கிறது. Spl. Size டிசைன் நெ. 1 ல் மட்டும் கிடைக்கிறது. 3) இத் திட்டத்தில் வியாபாரிகளும் கலந்து கொள்ளலாம். விவரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். உடனடியாக வழங்கப்படும்.

“மனிதாபிமானச் செயலைக் குறை கூறாதீர்கள்!”



கல்கி ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம்.

கல்கி 15.3.92 இதழில் வெளிவந்த கேள்வி - பதில் பகுதியில் சில ஆயுள் தண்டனை சிறைவாசிகளுக்குத் தண்டனையில் தள்ளுபடி அளித்த அரசின் உத்தரவைக் குறித்துத் தராசு பதிலைக் கண்டேன்.

சட்ட அமைச்சர் என்ற முறையில் மட்டுமின்றி, புகழ்மிக்க கல்கி தமிழ் வார இதழின் வாசகன் என்ற முறையிலும் தராசு பதிலில் காணப்படும் சில முரண்பாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1. தண்டனையைத் தள்ளுபடி செய்து விடுதலை செய்யும் அதிகாரம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இருப்பதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் அந்த அதிகாரம் அரசியல் சட்டத்தின் 161வது பிரிவின்படி ஆளுநரிடம் உள்ளது. அரசின் பரிந்துரையின்படி ஆளுநர்தான் உத்தரவிட வேண்டும்.

2. மிக மிக விழிப்புடன் அந்தப் பிரிவு கையாளப்படவில்லை என்று தாங்கள் கருதுவதும் ஏற்புடையது அல்ல. சில சட்ட விதிகளின் அடிப்படைகளைக் கொண்டே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி 18.12.1978-க்கு முன்பு ஆயுள் தண்டனை அடைந்த சிறைவாசிகளில், கொள்ளை மற்றும் பணத்துக் காகக் கொலை, கற்பழிப்பு போன்ற கடுமையான குற்றவாளிகளைத் தவிர்த்து, மற்ற அனைவரையும் விடுதலை செய்யவும், அவ்வாறே 18.12.1978- அன்றோ, அல்லது அதற்குப் பின்னரோ ஆயுள் தண்டனை பெற்று, 12 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத் தண்டனை அனுபவித்த ஆயுள் சிறைவாசிகளை மன்னித்து முன்விடுதலை செய்யவும் அரசு ஆணையிட்டது.

18.12.1978-க்குப் பின் ஆயுள் தண்டனை பெற்று, பத்து வருடம் முழுமையாகச் சிறைத் தண்டனை அனுபவித்த பெண் கைதிகளை மன்னித்து, முன் விடுதலை செய்யவும் அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வாறு விடுதலை ஆனவர்களின் எண்ணிக்கை 242தான்.

மிக விழிப்புடன், சட்டபூர்வமாக உள்ள அனைத்து வழிகளையும் யோசித்து, அதன் பிறகே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கைதிகள் பற்றிய தனித் தனிப் பரிசீலனையும் இதில் அடங்கும்.

சிறையில் நன்னடத்தைக்காக, பொதுவாகச் சில சலுகைகள், தண்டனைக் குறைப்பு ஆகியவை வழங்குவதுண்டு. கைதிகளின் முதுமையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவது உண்டு.

மேலும் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கும் போது, மற்றவர்கள் குற்றம் செய்யாமல் இருக்க ஒரு எச்சரிக்கையாக இருக்குமாறு தண்டனைகள் அமைவது உண்டு. அதே போல ஒருமுறை குற்றம் செய்து தண்டனை பெறுகிறவன், எப்போதும் குற்றவாளியாக இருக்க வேண்டும் என்று கருதக் கூடாது. இந்திய மற்றும் தமிழகத்தின் அடிப்படைப் பண்பும் அது அல்ல.

எவ்வளவு கடுமையான குற்றவாளியாக இருந்தாலும் அவன் திருந்தலாம், திருந்த வாய்ப்புத் தந்திட வேண்டும் என்பதே நமது சட்டங்களின், நமது தர்மங்களின் உண்மையான நோக்கம்.

இந்த அடிப்படையில், கடுமையான குற்றங்கள் தவிர, பிற குற்றங்களில் தண்டனை பெற்றுக் கணிசமான காலம் தண்டனை அனுபவித்தவர்கள் பற்றி விழிப்புடன் பரிசீலனை செய்து, மன்னிப்பு வழங்கி, தண்டனையில் தள்ளுபடி செய்வது என்பது காலம் காலமாகக் கையாளப்பட்டு வரும் சட்டபூர்வமான ஒரு நடவடிக்கையாகும். இதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. ஏதோ 1992, பிப்ரவரியில் போற்றுதற்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது அல்ல என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மேலும் இவ்வாறு விடுதலை ஆகிற யாரோ ஒருவன் மீண்டும் பழைய தொழிலில் ஈடுபட்டான் என்பதற்காக மன்னிப்பு அளிக்கும் மனிதாபிமானச் செயலையே குற்றம் சொல்வது சரியல்ல.

தண்டனைக் குறைப்பு - மன்னிப்பு போன்ற அம்சங்கள் மிக ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்யப்பட்டன. எல்லா மட்டத்திலும் பரிசீலனை செய்யப்பட்டன. ஆக 'சகட்டுமேனிக்கு' என்கிற பதப் பிரயோகம் பொருத்தமற்றது.

எனது இந்த விளக்கக் கடிதத்தை உரிய முறையில் வெளியிட்டு கல்கி வாசகர்கள் உண்மையான நிலைமையை அறிந்திட உதவி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,
தலைமைச் செயலகம், சென்னை - 9.
கே. ஏ. கிருஷ்ணசாமி.

தராசு பதிலுக்கு அமைச்சர் கே. ஏ. கே. விளக்கம் :



நாலு மாவட்டங்களை உள்ளடக்கிய வேலூர்க் கோட்டத்தில் இதுவரை 14 பேர் கள்ளச் சாராயம் தொடர்பான குற்றங்களுக்காகக் குண்டர்கள் சட்டத்தில் உள்ளே தள்ளப்பட்டிருக்கிறார்கள். 40 லட்சம் மதிப்புள்ள கள்ளச் சாராயம் அழிக்கப்பட்டிருக்கிறது. பிப்ரவரி மாதத்தில் மட்டும் கள்ளச்சாராயம் சம்பந்தமாக 3,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இத்தனை சுறுசுறுப்புக்குக் காரணம் அர்ச்சனா ஐ. பி. எஸ்.

காவல்துறை மதுவிலக்கு அமல் பிரிவு வேலூர்க் கோட்ட கண்காணிப்பாளர் திரு

விருது பெற்ற
அர்ச்சனா ஐ. பி. எஸ்.

''கள்ளச்சாராய ஒழிப்பு ஒரு தொடர் போராட்டம்!''

மதி அர்ச்சனா ராமசுந்தரம் (கணவர் ராமசுந்தரம், வடார்க்காடு மாவட்ட கலெக்டர்) மிகவும் உற்சாகமாக இருக்கிறார். சிறந்த பணிக்காகக் காவல் துறைத் தலைவரின் (D.G.P.) கோப்பையைப் பரிசாகப் பெற்றிருக்கிறது இந்தக் கோட்டம்.

''இந்தக் கோட்டத்தில் கள்ளச் சாராய ஒழிப்புப் பணி இவ்வளவு சிறப்பாக நடைபெறக் காரணம், என்னுடைய சக அலுவலர்கள்தான். பல சிரமங்களிடையே அவர்கள் கொடுக்கும் ஒத்துழைப்பைக் கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும்'' என்று அடக்கத்துடன் சொல்கிறார் அர்ச்சனா.

வாரம் இருமுறை அர்ச்சனாவே 'ரெய்டு'க்குப் புறப்பட்டுப் போகிறார். இரவு பத்து மணிக்கு ஆரம்பித்தால், விடிய விடியத் தொடருமாம் ரெய்டு. ''கிராமப் புறங்களில் கள்ளச் சாராய உற்பத்தியும், நகரங்களில் விற்பனையும் நடக்கிறது. இந்தக் குற்றம் சம்பந்தமாகக் கைதாகிறவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள்'' என 'ஷாக்'கான தகவல் சொல்கிறார் அர்ச்சனா.

இவருக்குத் தினமும் பொது மக்களிடமிருந்து கடிதங்கள் வருகின்றனவாம். ''எங்கள் ஊரில் சாராயம் காய்ச்சுகிறார்கள்; விற்கிறார்கள் என்று பொது மக்கள் கொடுக்கும் தகவல்களின் அடிப்படையில்தான் ரெய்டுகள் நடக்கின்றன. பெரும்பாலும் அத் தகவல்கள் உண்மையாகவே இருக்கும்.''

வேலூர்க் கோட்டத்தை ஒட்டி, அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா எல்லைகள் வருவதால் அங்கிருந்தும் சாராய பாக்கெட்டுகள் கடத்தப்பட்டு வருகின்றன. பிப்ரவரி மாதத்தில் மட்டும் 13,000 பாக்கெட்டுகள் பிடிக்கப்பட்டனவாம். ஒருமுறை, ஆந்திர எல்லை அருகே கள்ளச் சாராய பாக்கெட்டுகளோடு பிடிபட்ட ஜீப்பை விடுவிக்கக் கோரி, ஆந்திர கலால் பிரிவு அதிகாரிகள் தமிழக போலீஸாரிடம் சிபாரிசுக்கு வந்தார்களாம்! ஆனால் தமிழக போலீஸ் அந்த சிபாரிசை ஏற்கவில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

ஒயின் கடைகள் 'பார்'களாக செயல்படுவதையும் தடுத்து நிறுத்தி இருக்கிறார் இவர். இரவு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு ஒயின் கடைகள் மூடப்பட வேண்டும் என்றும் கண்டித்திருக்கிறார்.

''எங்கள் விற்பனை குறைந்து போய் விடும்'' என்று ஒயின் கடை உரிமையாளர்கள் முணுமுணுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆயினும் ''என்னுடைய பணியில் இதுவரை அரசியல் தலையீடு இல்லை'' என்கிறார் அர்ச்சனா.

அர்ச்சனா தண்டப் பிரயோகத்துடன் நிற்பதில்லை. கருணையும் காட்டுகிறார். ''கள்ளச்சாராயத் தொழிலில் நீண்ட காலம் ஈடுபட்டு வந்தவர்கள் மனம் திருந்தி நல்ல தொரு மாற்றுத் தொழிலில் ஈடுபட விரும்பினால், அவர்களுக்கு அரசு உதவும்படியான ஒரு புனர்வாழ்வுத் திட்டத்தை அரசுக்குக் கொடுத்திருக்கிறோம். தவிர, கள்ளச் சாராய ஒழிப்புப் பணியில் பிரசாரம் செய்ய மாணவர்களின் ஒத்துழைப்பையும் நாட இருக்கிறோம். இது ஆரம்பம்தான். ஆனால் முடிவே இல்லா தொடர் போராட்டம்'' என்கிறார் அர்ச்சனா.

சந்திப்பு : ப்ரியன்

அட்டையில் (பரிசாகப் பெற்ற கோப்பையுடனும் கணவருடனும்) : அர்ச்சனா

வண்ணப்படம் : உத்ரா

அவன் உள்ளே பிரவேசித்ததும் அறையின் ஆட்டோமாடிக் வாசற்கதவு தானாகச் சாத்திக் கொண்டது. அவனுக்கு நடுத்தர வயதிருக்கும்; அவன் இடுப்பில் உறையில் துப்பாக்கி; கையில் ஒரு ட்ரே - அடர் நீலநிற பேண்ட், சட்டை அணிந்திருந்தான். சட்டையில் பொன்னிற சிங்க முகம் பிரகாசித்ததைக் கவனித்தான் பிரகாஷ். இதுதான் டான் அடியாட்களின் உடுப்பு போல...

''எங்கே என் சிந்து?'' என்றான் சட்டென்று உணர்ச்சிவசப்பட்டு.

அந்தச் சேவகன் ஓர் இயந்திரன். அழுத்தமான மௌனத்துடன் மூலையிலிருந்த டீப்பாயை இழுத்துப் போட்டான்.

''பதில் சொல்லுடா!''

டான் கலைஞா

12

டீப்பாய் மேல் ட்ரே வைத்தான்.

''டான் சோமையாவின் சாவு என் கைலதான்னு போய்ச் சொல்லுடா.''

ட்ரேயில் ஒரு பிளாஸ்டிக் பிளேட்டில் முந்திரி பக்கோடா, கப்பில் தேநீர். மனைவியைக் கடத்தியவனின் உபசரிப்பு ஆத்திர மூட்டியது. சூடான டீயை அவன் முகத்தில் விசிற வேண்டும் என்ற எண்ணத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். ம்கூம். இன்னமும் சரியான சமயம் வாய்க்கவில்லை.

''சும்மா அலட்டிக்காதே தம்பி. உன் நன்மைக்காகச் சொல்றேன். கேட்டுக்க. இந்த மாளிகை ஒரு கோட்டை. பாஸுக்குத் தெரியாம ஒரு துரும்பு கூட வெளியேற முடியாது. அதனாலே தப்பிச்சுறலாம்னு அசட்டுத்தனமா முயற்சி ஏதும் செய்யாதே. அவ்வளவு ஏன்? இந்த அறையைக் கூட உன்னால தாண்ட முடியாது. வாசல்ல ஒரு ஆசாமி துப்பாக்கியோட காவல். உன்னைக் கூசாம சல்லடையாக்கிடுவான். நான் கொண்டு வர்றதைச் சாப்பிட்டுட்டு கம்முனு இரு, என்ன?''

அவன் போனதும் அமைதியாகச் சாப்பிடத் தொடங்கினான் பிரகாஷ். வீணாய்ப் பட்டினி கிடப்பதில் பயனில்லை. இந்தத் தடியர்களைச் சமாளிக்க ஒவ்வொரு அவுன்ஸ் சக்தியும் தேவைப்படும்.

உணவை முடித்து விட்டு எழுந்து சென்று ஜன்னல் அடைந்தான். கர்ட்டனை ஓரமாக ஒதுக்கினான். காற்று சிலுசிலுத்தது. பெரிய ஜன்னல்தான். நெருக்கமான டயமண்டு டிசைன் சூழ்ந்த கிரில் சட்டம் மகா உறுதியாக இருந்தது. சத்தியமாக ஜன்னல் வழியே குதித்து வெளியேற முடியாது.



வெளியே விரைவாய் மங்கும் மாலை. பிரதேசத்தின் எல்லை தெரியவில்லை. இருள் பிசாசுகளாய் மரங்கள். விஸ்தாரமான தோப்பின் - மறைவில் - மத்தியில் - மர்ம மாளிகை போலும். வெகு தொலைவில் உலவிய ஒரு காவலாளி. அவன் கையில் ஒரு ஏகே 47! அவனைப் பின் தொடர்ந்த ஓர் ஆக்ரோஷ டாபர்மேன். திகைத்தான். எப்படி சிந்துவுடன் தப்பிப்பது?

சாத்திய அறைக் கதவுக்கு அப்பால் ஒரு காவலன், துப்பாக்கி சகிதம். உணவு வழங்க வரும் ராஸ்கலிடமும் பாழாய்ப் போன ரிவால்வர். மயங்கிக் கிடந்த நிலையில் தன் வசமிருந்த அனைத்து ஆயுதங்களையும் பறிகொடுத்தாயிற்று; கால் சாக்ஸிலிருந்த ஹாக்சாவைக் கூட அறிந்து கொண்டு அகற்றியிருக்கிறார்கள், பாவிகள்...

உணவு எடுத்து வருபவன்தான் பிரகாஷின் முதல் குறி. கொஞ்சம் தந்திரமும், சிறு ஆயுதமும் இருந்தால் போதும். ஒரு ஸ்க்ரு டிரைவர், உலோகத் தடி... இப்படி ஏதும் கிடைக்கும் என்ற நப்பாசையுடன் அறையை அலசிப் பார்த்தது வீணாயிற்று. பாத்ரூமில் ஒரு சவரப் பிளேடு கூடக் கிடைக்கவில்லை. சே! டானின் முன்னெச்சரிக்கை!

வேண்டிய அளவு அப்பாவிடமிருந்து பணம் கறந்ததும் சிந்துவையும், தன்னையும் தீர்த்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. தன் உருவத்தையும் இருப்பிடத்தையும் பார்த்த ஒருவனைச் சுதந்திரமாக வெளியே அனுப்ப டான் ஒன்றும் முட்டாளில்லை. இந் நேரம் தன் தந்தையைத் தொடர்பு கொண்டிருப்பார்கள்... தன்



சாவிற்குத் தேதி குறித்திருப்பார்கள்... விரைவில்... வெகுவிரைவில், அவன் ஏதாவது சாகஸம் செய்து எப்படியாவது சிந்துவுடன் தப்பிக்க வேண்டும்... இந்த மர்ம மாளிகையில் மற்றொரு அறையில் பிறிதொரு பிணைக் கைதியாக சிந்துஜா...

தவிப்பாக உணர்ந்தான். ஒரு வாரமாக உன்னைப் பார்க்காமல் பைத்தியம் பிடித்து விட்டது டியர். 'சிந்து... சிந்து...' என்று என் இதயம் துடிப்பது உனக்குக் கேட்கிறதா? பொறுத்துக் கொள் கண்ணம்மமா. சில சுவர்களும், சில இயந்திரத் துப்பாக்கிகளும் நம்மைப் பிரித்து விட முடியாது. இருக்கட்டும். நாளை இவர்களை... அவன் நரம்பு முறுக்கேறியது.

புதன் காலை. அமைதியாகக் குளித்தான்; உடுத்தான்; உண்டான். ஆனால் அவனுள் கனன்று கொண்டிருந்த ஒரு எரிமலை வெடிக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது...

எதேச்சையாக அவன் பார்வை அறை மூலை டீவியில் பட்டதும் திடுக்கிடலுடன் நிமிர்ந்தான். இதை எப்படி மறந்தேன்? அறையில் ஒரு துரோக காமெராக் கண்ணை வைத்துக் கொண்டு தாக்குதல் நடத்தினால்... வேறு வினையே வேண்டாம். டான் ஆசாமிகள் அனைவரும் அவன் அறைக்கு வந்து அம்மி விடு வார்கள்...

அலமாரி, கட்டில், ஸ்விட்சு போர்டு, விட்டம் என ஒவ்வோர் இடமாக, நுணுக்கமாக ஆராய்ந்தான். எங்கே வைத்துத் தொலைத்திருக்கிறான் டான், காமிராக் கண்ணை?

எதிர்ச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த பிரும்மாண்ட வால் போஸ்டரை வெறித்தான். அந்த இயற்கைக் காட்சிப் போஸ்டரில் பச்சையாகப் பரவிய புல்வெளியில் திமிறும் இரு வெண் புரவிகள்; சிறகு விரித்த சில பறவைகள்; வானத்தில் ஆங்காங்கே மேகத் தீற்றல்கள். அவனுடைய ஓவிய அறிவு அனிச்சைச் செயலாகப் போஸ்டரில் லயித்து ஆராய, சட்டென்று ஒரு குறை தென்பட்டது.

வெளிர் சாம்பல் நிறத்தில் தீற்றப்பட்ட மேகத் திட்டுக்களில் ஒரு துணுக்கு மேகத்திற்கு மட்டும் கறுப்புக் கலர் கொடுத்திருப்பது சரியில்லாமல் உறுத்தியது; பொருந்தவில்லை என்று பட்டது. மேலும் அதை உற்றுப் பார்க்கவும் சந்தேகம் தட்டியது.

பத்மா ரவிசங்கர்



"மாப்பிள்ளை வரப் பத்திரிகைகளுக்கு நிறைய வாசகர் கடிதம் எழுதுறவர்னு எதை வெச்சுச் சொல்றீங்க?"

"அவர் தாலி கட்டினதும் மாப்பிள்ளைத் தோழர்கள் 'அட்டகாசம்', 'சிம்ப்ளி சூபர்ப்', 'தூள்' என்றெல்லாம் வாழ்த்தினாங்களே."

- ஆம்பூர் பரந்தாமன்

எழுந்து போய் அதன் அருகே நின்றான் ஆறடி உயர பிரகாஷ். அவன் தலைக்கும் மேலாக ஓர் அடி உயரத்திலிருந்து அந்த மேகத் தீற்றல்கள்; அதில் கறுப்பாகக் காட்சியளித்தது மேகமே அல்ல.

மைகாட். மேக வடிவில் சுவரில் ஓட்டை! 'கண்டேன் காமெராவின் கண்ணை!' என்று கூவ வேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஐந்து நிமிடம் கழித்து மற்றொரு அதிர்ஷ்டம் அடித்தது.

வெளிச்சத்தில் வெளியே நிலைமை எப்படி எனப் பார்க்க விரும்பி ஜன்னலை அடைந்து திரைச் சீலையை ஒதுக்குவதற்காகக் கை வைத்ததும் திடீரென்று அவனுள் ஒரு ஐடியா மின்னல் வெட்டியது. ஆயுதமும் தயார்...'

தனக்கு உணவு வழங்கப்படுவதில் ஒரு துல்லிய நேர ஒழுங்கு இருந்ததைக் கவனித்திருந்தான். மாலை ஆறு மணி அளவில் தேநீர் வரும். அப்போதுதான்...

பிரகாஷ் கட்டிலில் படுத்துச் சிறிது நேரம் உறங்கி ஓய்வெடுத்தான் - அது அவசியம் என்று உணர்ந்து.

மாலை 5:15. எழுந்த போது புத்துணர்ச்சி உணர்ந்தான். முகம் கழுவித் தயாரானான். இன்னும் சில சாகஸ நிமிடங்கள் கழித்துச் சிந்துவின் விடுதலை... அவனுள்ளிருந்த அபரிமித சக்தியும், வெறியும் விடுபடத் துடித்தன. எந்த ராஸ்கல் என்னைத் தடுக்கிறான் பார்ப்போம்...

5:30 கர்ச்சிப் எடுத்துப் பந்து போல் சுருட்டி சுவர் ஓட்டையில் அடைத்துக் காமெரா லென்ஸை மூடினான். அடுத்துத் தன் கவனத்தைக் கட்டிலுக்குத் திருப்பினான். தலையணைகளை யோசனையுடன் நகர்த்தினான்; அடுக்கினான்; அமைத்தான்.

நிமிர்ந்த போது 5:40. கட்டிலில் ஓர் ஆள் - அதாவது 'பிரகாஷ்' முழுவதுமாகப் போர்த்திக் கொண்டு படுத்திருப்பது போலிருந்தது.

5:45. ஜன்னலிலிருந்து கர்ட்டனைக் கழற்றியதில் நான்கடி நீள ஸ்பிரிங் கிடைத்தது. உறுதியான ஸ்பிரிங். அருமையான ஆயுதம்தான்.

5:50. வாசல் கதவில் காதை வைத்துக் காத்திருந்தான்.

5:55. காலணி ஓசை கேட்டது. தொடர்ந்து காவலாளியுடன் அவன் பேசுவது முணுமுணுப்பாய்க் கேட்டது. அவசரமாக ஓடி பாத்ரூமிற்குள் புகுந்து கொண்டான்.

ஒருக்களித்துச் சாத்திய பாத்ரூம் கதவின் பின்னால் பிரகாஷ். அவன் கையில் சோம்பலாக வளைந்த நீள ஸ்பிரிங். கூர்மையாகக் கவனித்தான். கதவு மூடிக் கொள்ளும் ஒலி... பிரவேசிக்கிறான்... டீப்பாய் மீது ட்ரே வைக்கிறான்...

''ஏய் சோம்பேறி! எழுந்திரு. என்னய்யா அப்படி ஒரு தூக்கம்!'' - அடியாளின் குரலில் ஆச்சரியம் தொனிக்கிறது. இதோ... இப்போது...

கதவைச் சன்னமாகத் திறந்தான். இவனுக்கு முதுகு காட்டியபடி கட்டிலைப் பார்த்தவாறிருந்தான் அந்த டான் ஆள். தன்னுடைய, சிந்துவுடைய வாழ்வின் கடைசி சந்தர்ப்பம் இது...

இரண்டெட்டில் பாய்ந்து அவன் மீது மோதினான் பிரகாஷ். மின்னல் வேகத்தில் இயங்கினான். ஸ்பிரிங் கம்பியைச் சுழற்றி மாலை போல் அடியாளின் கழுத்திற்கு வீசினான்; இழுத்தான்; இரு கைகளாலும் இறுக்கினான். கட்டிலில் விழுந்திருந்தவன் மீது தன் உடல் பாரம் முழுவதையும் செலுத்தி அசைய விடாமல் செய்தான்.

சில வினாடிகளில் மூச்சுக் காற்றுக்கு ஏங்கித் தவித்து விட்டு அவன் துவளுவதைப் பார்த்ததும் அவசரமாக ஸ்பிரிங் தளர்த்திப் பிடி விலக்கினான். மயக்கம் தான். ஆனால் சுவாசம் சீரானதும் சில நொடிகளில் மயக்கம் தெளிந்து அவன் எழுந்து விடும் அபாயம் இருக்கிறது.

அவனிடமிருந்து கவர்ந்து கொண்ட துப்பாக்கியின் பின்புறத்தால் அவன் சோலார் ப்ளெக்ஸஸ்ஸில் அடித்தான். இனிக் கவலையில்லை. 'நான் எங்கிருக்கிறேன்' என்ற வசனமுடன் அவன் எழுந்து உட்கார ஒரு மணி நேரமாவது ஆகும்.... அவசரமாக அவன் ஆடை அவிழ்த்து...

கதவு திறந்து அடியாள் உடையில் கையில் துப்பாக்கியுடன் பிரகாஷ் வெளிப்பட, வாய் பிளந்தான் அந்தக் காவலாளி. சற்றும் அவகாசம் தராமல், ஆவேசமாய்த் தாக்கினான் பிரகாஷ். எகிறி, ஒரு ஃபுட்பாலர் பாணியில் முழங்காலை உயர்த்தி, அவன் முகவாய்க் கட்டையில் நச்சென்று அடித்தான்.

மயங்கிய காவலாளியை இழுத்து, அறையினுள் கிடத்தி விட்டுக் கிளம்பினான். மேலே ஒரு குழல் விளக்கு வெளிச்சம் சிந்த, அது ஒரு காரிடார். இரு பக்கமும் வரிசையாக இருண்ட அறைகள். பரபரப்பாகத் தேடினான். எதிலும் யாரும் இல்லை. எங்கே என் சிந்து...

அந்த மாளிகை விரிவடைந்து கொண்டே போவது போல் பிரமை தட்டிற்று. பிரகாஷ் சமயங்களில் மின்னலாய் ஓடினான்; மெதுவாய் நடந்தான்; நத்தையாய் நகர்ந்தான்; இருளில் பதுங்கினான். எதிர்பாராது எதிர்ப்பட்டவர்களில் இருவர் இவன் உடுப்பு கண்டு இவனைச் சட்டை செய்யாமலே சென்றனர்; சந்தேகம் கொண்டு பின்வந்த வேறொருவன் சடுதியில் சாய்க்கப்பட்டான்... தேடல் தொடர்ந்தது.

காதலின் சக்திதான் தன்னை விரட்டுகிறது என்பதில் அவனுக்கு ஐயமில்லை. இருப்பினும், கடந்த சில நிமிடங்களாகத் தான் நிகழ்த்தும் சாகஸமும், சமயோசிதமாகத் திட்டமிடும் தன் கிரிமினல் மூளையும் அவனை மிகவும் ஆச்சரியப்படுத்தின. இதெல்லாம் இவனுள் இயல்பு போலவும், இந் நாள் வரை உறங்கியிருந்த உணர்வுகள் போலவும் பிரகாஷுக்குத் தோன்றியது.

மாடியில் ஓர் அறை வாசலில் காவலாளியைப் பார்த்ததும் அவனுக்குள் சிலிர்ப்பு. இந்த அறையில்தான் சிந்துஜா இருக்க வேண்டும்...?

ஒரு தேர்ந்த 'பாலே' நடனமணி போல் நுனிக் கால் பதித்து, ஓசையின்றி நடந்து, அந்த அடியாளைப் பின்னால் அணுகினான்.

சரமாரியான சில குத்துக்களில் அவனைச் சாய்த்து, அவன் மீது அமர்ந்து கொண்டு, உருவிய துப்பாக்கியை அவன் நெற்றியில் பதித்து, ''சிந்துஜா இந்த ரூம்லதானே இருக்கா? சொல்லுடா நாயே! உன்னைக் கூசாமக் கொன்னுடுவேன்டா!'' என்றான் உறுமலாக.

பிரகாஷ் கண்களிலிருந்த கொலை வெறியைப் பார்த்துப் பயந்த அந்த அடியாள், ''ஆ... ஆமாங்க'' என்றான் முனகலாக.

''சாவி எடு!''

''டான் வெச்சிருக்காருங்க!''

''உன் டான் எங்கேடா இருக்கான்?''

''பக்கத்துலதான். காரிடார் கார்னர் ரூம்ல.''

சொன்னவன் தலையில் தட்டி மயக்கப்படுத்தி விட்டு எழுந்தான். யோசித்தான். துப்பாக்கியால் சுட்டு அந்தப் பூட்டை உடைத்து விடலாமா? வேண்டாம். ஓசை கேட்டு டான் ஓடி வந்து விடுவான். அவனுடன் காவலர்கள். அப்புறம் சிந்துவுடன் தப்பிப்பது நடவாத காரியம். டான் அறியாமல் அவனிடமிருந்து சாவி கிளப்பவும் முடியாது. கலிலியோவைத் தீர்த்து விட்டுத்தான் சாவி எடுத்து வர வேண்டும். தலைவனைத் தீர்த்தால்தான் தப்பிக்கும் சாத்தியக்கூறும் அதிகரிக்கும். ஆம். இந்தச் சிக்கல்கள் தீர அதுதான் சிறந்த வழி...

தீர்மானமுடன் நடந்து, இதயம் படபடக்க டான் அறைக் கதவை உள்ளுக்குத் தள்ளினான். ஓசையின்றித் திறந்ததும் பூனை போல் நுழைந்தான். அந்த அறை விசாலமாயிருந்தது. மத்தியில் அகல அலங்கார மேசை. அதன் பின்னே ஒரு சுழலும் நாற்காலி.

அதில் டான்கலிலியோ! இவனுக்கு முதுகு காண்பித்தபடி. 'டான் சோமையா... இன்றோடு உன் கதை முடிந்தது!' பற்களைக் கடித்தபடி பிரகாஷ் தயங்காமல் துப்பாக்கி உயர்த்தினான். டானுடைய செம்பட்டைத் தலைக்குக் குறி வைத்தான்.

''வெல்கம் மை சன்!''

சுழலும் நாற்காலி சுற்றித் திரும்பியது. பிரகாஷுக்குத் தலை சுற்றியது.

நாற்காலியில் அமர்ந்திருந்த ராஜசேகர் தம் தலையிலிருந்து சிவப்பு விக்கைக் கழற்றிக் கொண்டிருந்தார்...!

(தொடரும்)

''இந்த ஸ்டவ் நூறு ரூபாதான். அது ஆயிரம் ரூபா...!''

''அதுல என்ன அப்படி விசேஷம்...?''

''அது பற்ற வச்ச உடனே வெடிக்கும்!''

- கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



"தண்ணீர் வைக்கும் இந்த கூஜாவில் நான் செய்யப் போகும் மாஜிக்கைப் பாருங்கள்..." என்று அந்த கூஜாவைத் தலைகீழாகப் பிடிக்கிறார் வெங்கடேசன். அதன் பின்பகுதியில் தண்ணீரை ஊற்றி, கூஜாவை நேராகப் பிடிக்கத் தண்ணீர் சிறிதளவும் கீழ்ப்புறம் ஒழுகவில்லை!

"இனி இதிலுள்ள தண்ணீரை மேல் பகுதியிலுள்ள வாயின் வழியாகத்தான் எடுக்க முடியும். இதன் காரணமாகவே இதற்கு 'மாஜிக் பாட்' என்று பெயர். இது



☛ வெங்கடேசன்

ஒரு பாரம்பரியக் கலை அழிந்து கொண்டிருக்கிறது!

போன்ற வித்தியாசமான மண்பாண்டங்களைத் தயாரித்ததால்தான் எங்கள் மூதாதையர்களைச் செஞ்சி பகுதியிலிருந்து அழைத்து வந்து, இந்த கரிகிரி கிராமத்தில் குடியேற்றினார் அப்போது வேலூரை ஆண்ட நவாப். அதன் பிறகு எங்கள் மூதாதையர்கள் செய்து கொடுத்த மண்பாண்டங்கள்தான் நவாப்களின் அரண்மனையை அலங்கரித்தன... ம்... அதெல்லாம் பழைய காலம். எங்களின் இப்போதைய நிலை ரொம்பவும் பரிதாபகரமாகி விட்டது..." என்று பெருமூச்சு விடுகிறார் வெங்கடேசன்.

"நாங்கள் வெறும் மண்பாண்டக் கலைஞர்கள் மட்டுமல்ல. நாங்கள் செய்வது மெருகிட்ட மண்பாண்டங்கள்" என்று சாதாரண மண்பாண்டங்களுக்கும் தாங்கள் செய்யும் மண்பாண்டங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை விளக்குகிறார் அவர்.

"முதலில் நாங்களும் வழக்கம்போல் தான் மண்பாண்டங்களைச் செய்கிறோம்; சூளையிலிட்டுச் சுட்டு எடுக்கிறோம். அதன் பிறகு நாங்கள் சில இரசாயனப் பொருள்களைக் கொண்டு மெருகேற்றிப் பீங்கான் பாத்திரங்களைப் போல் வண்ணமயமானதாகவும், சாதாரண மண்பாத்திரங்களை விட உறுதியானதாகவும் செய்கிறோம். இப்படிப்பட்ட மெருகிட்ட மண்பாண்டங்களைச் செய்வது இந்தியாவிலேயே வேறெங்கும் கிடையாது. இங்கிருக்கும் ஐந்து குடும்பங்களான நாங்கள் மட்டும்தான்!" என்கிறார் வெங்கடேசன்.

"ராஜஸ்தான் போன்ற வடமாநிலங்களிலும் இதுபோன்ற மெருகிட்ட மண்பாண்டங்களைச் செய்கிறார்கள் போலிருக்கிறதே?" என்று நாம் கேட்ட போது, "அவை செராமிக்கில் செய்யப்படுபவை. நாங்கள் செய்வது முழுக்க முழுக்கக் களிமண்ணால் ஆன பாண்டங்கள்" என்று விளக்குகிறார் அவர்.

"எங்களின் இந்தச் சிறப்புக் கருதித்தான் அரசு எங்களுக்கு உதவி செய்தது. 'கரிகிரி மெருகிட்ட மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' என்று ஒரு சங்கத்தை ஆரம்பித்தோம். அரசு உதவியில் சங்கத்திற்குக் கட்டடமெல்லாம் கட்டி, எங்கள் பாண்டங்களைச் சுட்டெடுப்பதற்குப் பக்காவான சூளையெல்லாம் கட்டினோம். 28.8.59-ல் ஆர். வெங்கடராமன் அவர்கள் வந்து எங்கள் சங்கத்தைத் திறந்தும் வைத்தார். சுமார் இருபது ஆண்டுகள் எங்கள் சங்கமும் மிக நன்றாக இயங்கியது.

நான்தான் சங்கத்தின் செயலாள ராக இருந்தேன்.

''அதன் பிறகு, எங்கள் தொழில், வெறும் கைத் தொழில்தான் என்று சொல்லி, 'இண்டஸ்ட்ரியல் அண்ட் காமர்ஸ்' துறையிலிருந்த எங்கள் சங்கத்தைக் கதர்த் துறைக்கு மாற்றினார்கள். அவ்வளவுதான்! கதர்த் துறை எங்களைக் கண்டுகொள்ளாததால் எங்கள் சங்கம் மூடப்பட்டு விட்டது. நீங்களே வந்து பாருங்கள்!'' என்று சொல்லிப் பாழடைந்து கொண்டிருந்த சங்கக் கட்டடத்தையும், சூளையையும் காட்டினார் வெங்கடேசன்.



☛ மாஜிக் பாட்டும் மற்ற மெருகிட்ட பாண்டங்களும்

''கதர்த் துறை உங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டதற்கு என்ன காரணம்? ஒருவேளை நீங்கள் செய்யும் மெருகிட்ட மண்பாண்டங்களுக்குக் கிராக்கி இல்லாமல் போனதாலோ?''

''இடையவே இடையாது. எங்களுடைய பாண்டங்களுக்கு இன்றைக்கு ஏக கிராக்கி. நாங்கள் செய்யும் மாஜிக் பாட், ஃப்ளவர் வாஸ், கிருஷ்ணன் பொம்மை, ஆஷ்ட்ரே... என்று பல்வேறு விதமான பாண்டங்களும் கலைநயம் மிக்கவை. சென்னையிலுள்ள வி.டி.ஐ. நிறுவனத்தில் எங்கள் பாண்டங்கள் ஏராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. ஒன்று மட்டும் சொல்லலாம். நாங்கள் செய்பவை அலங்காரப் பொருள்கள் என்பதாலும் விலையும் நூற்றுக்கணக்கில் என்பதாலும் சாதாரண ஏழைகளால் வாங்க முடியாது. பணக்காரர்களால்தான் வாங்க முடியும்!''

''இந்த நிலையில் அரசு எப்படி உங்களை ஊக்குவிக்காமல் இருக்கிறது?''

''அதுதான் எங்களுக்கும் புரியவில்லை. இப்போது கூடப் பாருங்கள்... டெல்லியில் நடக்கவிருக்கும் அனைத்திந்திய கலைப்பொருள் கண்காட்சியில் கலந்து கொள்ளச் சொல்லி டெல்லியிலிருந்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் கலந்து கொள்வதற்காகத்தான் இப்போது நான் புதிய பாண்டங்களைச் செய்து கொண்டிருக்கிறேன். மேலும் பிரான்ஸிலுள்ளவர்கள் இதுபற்றிக் கேள்விப்பட்டு, அங்கு வந்து, இந்தக் கலைப் பொருள்களைச் செய்து காட்டச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.... இதோ பாருங்கள் கடிதம்... வி. டி. ஐ. தான் எனது வெளிநாட்டுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஆனால், தமிழக அரசுதான் மனமிரங்க மாட்டேன் என்கிறது.''

''உங்களுக்கு இவ்வளவு வாய்ப்புகள் இருக்கும்போது, எதற்காக அரசின் உதவியை எதிர்பார்க்க வேண்டும்?''

''வாய்ப்பு இருப்பது உண்மைதான். ஆனால் வசதி வேண்டாமா? உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். நடுத்தரமான மாஜிக்பாட்டுகள் நூறு செய்ய வேண்டுமானால், அதற்கு முதலீடாகச் சுமார் எட்டாயிரம் ரூபாயாவது தேவைப்படும். காரணம், மெருகூட்டலுக்குத் தேவைப்படும் கெமிகல்ஸ் எல்லாம் அத்தனை விலையுயர்ந்தவை! ஆனால், அரசு இதைக் கைத்தொழில் என்றுதான் கருதுகிறது. கடன் கேட்ட போது 'மூவாயிரம் ரூபாய்தான் தர முடியும்' என்று சொன்னார்கள். நான் அதை வேண்டாமென்று சொல்லி விட்டேன். அதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?'' என்ற வெங்கடேசன் மேலும் சில விஷயங்களைச் சொன்னார்.

''இப்போது நாங்கள் பயன்படுத்தும் சூளை சாதாரணமானது.

☛ மூடப்பட்ட சங்கத்துக்குள் பாழடைந்து கிடக்கும் பாண்டங்கள்.




இதில் 700 டிகிரி செண்டிகிரேட் வெப்பம் தான் பெற முடியும். ஆனால் பாழடைந்து கிடக்கும் எங்கள் சங்கத்தின் சூளையைப் பயன்படுத்தினால் 1200 டிகிரி செண்டி கிரேட் வெப்பம் பெற முடியும். அதில் சுடப்படும் பாண்டங்கள் இன்னும் மெரு கேறியவையாகவும், கெட்டியானவையாக வும் இருக்கும். ஆனால், அந்தச் சூளை யைப் பயன்படுத்த எங்களுக்கு நிலக்கரி தேவை. அதற்கு முதலீடு வேண்டுமே! அதற்குத்தான் அரசின் உதவி வேண்டும் என்கிறேன்...

''இந்தக் கலையைத் தெரிந்து வைத் திருப்பது இந்தியாவிலேயே எங்கள் ஐந்து குடும்பம் மட்டும்தான். அரசின் உதவி யேதும் இல்லாததால் எங்கள் பிள்ளைகள் இதில் ஆர்வம் காட்டாமல் இருக்கிறார் கள். ஆக, எங்களுக்குப் பிறகு இந்தக் கலையே மறைந்து போகவும் வாய்ப்பிருக் கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அரசு எங்களுக்கு முழுமையாக உதவ முன்வந்தால், எங்களுடைய மெரு கிட்ட மண்பாண்டங்களை உலகளாவ ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணி யையும் பெற்றுத் தருவோம்!'' என்கிறார் வெங்கடேசன்.

ஆக, நமது பாரம்பரியம் மிக்க அரிய கலையொன்று அழிந்து கொண்டிருக்கிறது. அவசரமாகவும் அக்கறையுடனும் அரசு உதவினாலன்றி, அதைக் காப்பாற்ற முடி யாமல் போய் விடும். அது ஈடுகட்ட முடி யாத ஒரு கலாசார நஷ்டமாகி விடும்!

- பிரின்ஸ்

பாழடைந்து வரும் முத்துமண்டபம்!



வேலூரை ஒட்டியிருக்கும் பாலாற் றங்கரையில் அமைந்துள்ளது முத்து மண்ட பம். முத்துச் சிப்பி வடிவத்தில் கட்டப் பட்டுள்ளதால் இப் பெயர். எதற்காகக் கட்டப்பட்டது?

இலங்கையிலுள்ள கண்டியை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் விக்கிரம ராஜ சிங்கன். அவரது ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் அவரையும் சிறைப் பிடித்து வந்து வேலூர்க் கோட்டையில் வைத்தனர். தமது மூன்று பட்டத்து ராணி களோடும், நெருங்கிய உறவினர்களோடும் பதினேழு ஆண்டுகள் வேலூரில் சிறையி ருந்த விக்கிரமராஜ சிங்கனின் கல்லறை யையும், அவரது பட்டத்து ராணிகளின் கல் லறைகளையும் உள்ளடக்கிக் கட்டப் பட்டதுதான் முத்து மண்டபம்.

முழுக்க முழுக்க சலவைக் கற்களால் கட்டப்பட்ட இந்த முத்து மண்டபம், தி. மு. க. ஆட்சியில் கட்டப்பட்டதாலோ என்னவோ, இந்த அரசு அதைக் கண்டு கொள்ளாமலேயே விட்டு விட்டது. கூடிய சீக்கிரம், அது அப்பகுதி மக்களின் பொதுக் கழிப்பிடமாக மாறினாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை!

ஆற்காடு சாலையில் ஓர் அழகிய இடம்


ஆற்காடு சாலையில், 'நவாப் சமாதி' என்று பொதுவாக அழைக் கப்படும் காம்பவுண்டுக்குள் திப்பு சுல்தானின் பிள்ளைகள், மகள், மரு மகன், மற்றும் மந்திரிகளுக்கான சமாதிகள் உள்ளன. ஹைதர் அலி யின் இரண்டு மனைவியர் கல்லறை



களும் இங்குதான் உள்ளன. சுதை யாலும் செங்கற்களாலும் பீஜப்பூர் கட்டடப் பாணியில் கட்டப்பட்ட இந்த நினைவுச் சின்னங்கள் அற்புத மான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளே தென்னை மரங்களும் பூச்செடிகளுமாக இருப் பதால், கல்லறைகள் ஞாபகம் வரா மல் பூங்காவுக்குள் நுழைந்த மாதிரி இருக்கிறது. இதன் பராமரிப்புக்கு, இந்தக் காம்பவுண்டுக்கு வெளியி லுள்ள கடைகளின் வாடகை வரு மானம்தான் பயன்படுத்தப்படுகிற தாம். நிர்வாகப் பொறுப்பை ஒரு குழு ஏற்றுக் கொண்டு செம்மை யாகச் செய்கிறது.

ஓடி விளையாடவும்; ஸ்டைலாக நடக்கவும்...

ஃபாஷன் பக்கம் :




'ஸ்னீக்கர்ஸ்' என்றழைக்கப்படும் ஷூக்களின் ஆரம்ப விலையே ஐந்நூறு ரூபாய். ஆயிரக்கணக்கான ஷூக்கள் வாங்கவும் பலர் தயாராயிருக்கிறார்கள்.

அப்படி என்ன சிறப்பு இந்த ஷூவில்?

- பார்க்க குண்டாக, கனமாகத் தோன்றினாலும் மிக இலேசானது. இதை அணிந்து நடப்பதும் ஓடுவதும் சுலபம்.
- உயர்ந்த suede leather மற்றும் நைலான் நுரை (foam) கொண்டு தயாரிக்கப்பட்டது. அதனால் காலைக் கவ்விப் பொருந்தும்.
- இதன் லேஸ் பாலியஸ்டர் இழைகளால் ஆனது - இலேசில் முடிச்சு அவிழாது; நெகிழாது.
- ஷூவின் நாக்கு கனமாக இருப்பதால் லேஸை இழுத்துக் கட்டும் போது சுருங்கி நெகிழாது.
- குதிகால் பகுதி அழுத்தமாக இருப்பதாலும் பாதத்தில் அதிர்வுகளைத் தாங்க கனமான ரப்பர் sole பொருத்தப்பட்டிருப்பதாலும் குதித்து, ஓடி, ஆடச் சௌகரியமானது. வழுக்காது.
- விளையாட்டு வீரர்களின் ஷூ என்பதால் அவர்களின் ரசிகர்களையும் கவர்கிறது. (டென்னிஸ், கிரிக்கெட், ஓட்டம் என்று விளையாட்டுக்கு ஏற்ப ஷூக்கள் விதவிதமாக வடிவமைக்கப்படுகின்றன)
- விலை ஏராளமாய்க் கொடுத்தாலும் ஜீன்ஸைப் போல், சற்றே பழைய களை வரும்போதுதான் ஸ்னீக்கர்ஸ் ஃபாஷன் உலகில் முழு மதிப்பெண் பெறுகிறது!

வண்ணப்படம் : யோகா

நெடுஞ்சாலை



வையவன்

லாங்பஜாரில் அரிசி மண்டி ஓரமாக லாரியை நிறுத்தினான் ஏழுமலை. திரும்பிப் பார்த்தான். அவன் மனசுக்குச் சவால் விட்டவாறு மண்டியில் சேகர் உட்கார்ந்திருந்தான்.

சின்னச் சின்னக் கிண்ணங்களில் சாம்பிள் அரிசி வைத்த மேஜை. பின்னால் கை வைத்த இரும்பு நாற்காலியில் கழுத்தில் மைனர் செயின். கையில் புகையும் சிகரெட்.

''இன்னாபா ஏய்மலை... வண்டியை கொடவுனாண்டே எடுத்துனு பூடக் கூடாது?''

சேகர் முகத்தில் மிடுக்கு. முதலாளியாய் விட்ட தோரணை.

ஏழுமலைக்குத் தன்னையறியாமல் பெரிய முதலாளி முதலியார் ஞாபகம் வந்தது.

''வாடா மைனர்'' என்று கண்ணும் உதடும் ஒருசேரச் சிரிக்க, அவர் வரவேற்பார். பதினைந்து வருஷத்துக்கு முன்பு. ஏழுமலையின் அப்பா பெருமாள் சாமி லாரி ஓட்டி வரும் போது வேலூர் 'டிரிப்' அடித்தால் இளவரசன் மாதிரி அப்பா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு இவன் வருவான். முதலியார் மண்டிக்குப் போவது என்றால் தனிப் பிரியம்.



அப்போது சேகரும் அவனும் விளையாட்டுத் தோழர்கள். சம வயது. இருவருக்கும் படிப்பு வரவில்லை. பணம் சேகரையும் லாரி ஏழுமலையையும் பள்ளிக்கூடத்தில் தங்க விடவில்லை.

முதலியார் கை தாழ்ந்து விட்டது. சாம்ராஜ்யம் மாறி ஐந்து வருஷமாகிறது. முதலியார் வீட்டில் முடங்கி விட்டார். சர்க்கரை, ரத்த அழுத்தம். என்னென்னவோ. இந்த மருத்துவர்கள் ஊதிய அபாயச் சங்கு.

ஏழுமலை கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்தான்.

''டேய் சோமாறி! அந்த மஞ்சா பையை எடுறா'' என்று கிளீனர் வேலுவுக்குக் கட்டளையிட்டான்.

''இன்னா... சொல்றது காதுலே வுழுவலே'' என்று சேகர் தன் முதலாளி ஸ்தானத்தை அவனுக்கு நினைவூட்டுகிற மாதிரி ஜபர்தஸ்தாகச் சொன்னான்.

''கொடவுன் தெருவுலே ஒரு வண்டி கூட நொய்ய முடியாது. வர்சையா வண்டிங்க நிக்குது. காலியாவட்டம். அப்றமா வர்றேன்'' என்று மிடுக்காகப் பதிலளித்தான்.

''இந்தா அண்ணாத்தே!'' என்று மஞ்சள் பையோடு வந்து பவ்யமாக நின்றான் கிளீனர் வேலு.

அதை இடது கையில் வாங்கிக் கொண்டு, வலது கையில் ஜேப்பியைத் தடவி, ஒரு இருபது ரூபாய் நோட்டை உருவிக் கிளீனர் முன் நீட்டினான்.

''பிரியாணி துன்னுடா! தண்ணி அடிச்சே.. லாட்ரி சீட்டு வாங்கினே.. மவனே பெண்டு எடுத்துருவேன்.''

அலட்சியமாக சேகரைப் பார்த்துக் கொண்டே நடந்தான் ஏழுமலை.

''டேய் பொடிப்பையா! நான் கூட முதலாளிதான். என் கீழேயும் ஒரு தொழிலாளி உண்டு. பார்த்துக்கோ'' என்கிற மாதிரி சேகரின் அகம்பாவத்தை ஒரு செதுக்குச் செதுக்கி விட்டு அவன் நடந்தான்.

''சத்திமா அதெல்லாம் செய்ய மாட்டேன் அண்ணாத்தே!'' கிளீனர் நெளிந்தான்.

அவன் தப்புச் செய்ய மாட்டான். ஏழுமலைக்கும் தெரியும். செய்து விடக் கூடாது. இன்னும் வளர வேண்டியவன்.

இறக்கை இன்னும் முளைக்க வேண்டும். அப்புறம் இருக்கிறது வானம்!

தன் மாதிரியே லாரி ஓட்டி, தன் மாதிரியே சொந்த லாரி வாங்கி சந்தனமும் தோலும், வேர்க்கடலையும் வெல்லமுமாக இந்த நெடுஞ்சாலையில் கிளீனர் வேலு அடிக்க வேண்டிய லோடுகள் எத்தனையோ!

''பிரியாணி துன்னுட்டு வந்து வீட்லே படுத்துக்கினு இரு... வந்துடறேன்.''

கைப்பை கனக்க விறுவிறுவென்று நடந்தான் ஏழுமலை.

தான் போகிற இடம் எதுவென்று தெரிந்தால் சேகருக்கு ரசிக்காது.

''அவன்லாம் என்னடா புள்ளெ. முதலியாரு தலை எய்த்து புள்ளை உருவிலே வந்துருக்கு!'' என்று ஏரை ஓட்டிக் கொண்டே புகையிலையை 'கிக்'கென்று ஏழுமலையின் அப்பா துப்புவது சேகருக்காகவா என்று நினைக்கத் தோன்றும்.

பெருமாள்சாமி லாரியை விட்டு இறங்குகிற வயசு எதுவென்று தெரிந்து இறங்கியவர்.

''போதுண்டா சக்கரம் சுத்தினது!'' என்று கிராமத்து நிலத்தில் ஏரை ஓட்டத் தொடங்கியவர் அவர். இன்றும் அவர் ஓயவில்லை.

''கட்டை சாஞ்சாத்தாண்டா ஓயணும்! பாவம் மொதலியாரோ கல்லாப்பெட்டியும் அரிசி மண்டியும் கழட்டி விட்டதும் ஒடுங்கிப்பூட்டாரு. இந்தா... நம்ப ஊரு மக்காச்சோளமும் கடலைக்காயும் அவருக்கு உசுரு. அப்பா குடுத்தனுப்பிச்சாங்கன்னு சொல்லு. சந்தோஷப்படுவாரு.'' வரும் போது கொடுத்தார், வேலூர் டிரிப் என்று தெரிந்ததால். வாங்கிய ஏழுமலைக்கு கேட்க இரண்டு கேள்விகள் இருந்தன.

''அவருக்குச் சர்க்கரையாச்சேப்பா!''

கேட்கவில்லை.

முதலியாரின் சர்க்கரையும் ரத்த அழுத்தமும் கிராமத்து மண்ணின் மக்காச் சோளத்துக்கும் பச்சை வேர்க்கடலைக்கும் எதிரிகள்தான். ஆனால் அவை எங்கிருந்து வருகின்றன என்ற பின்னணி, முதலியாரின் மனசுக்கு மருந்து... அமிர்தத் துளி.

இன்னும் முதலியார் நினைக்கப்படுகிறார். நேசிக்கப்படுகிறார். இந்தக் குதூகலத்தை மிஞ்சிய மருந்து உண்டா?

ஏழுமலை வேலூருக்கு வரும் போதெல்லாம் முதலியார் பாம்பே ஹல்வாவும் முந்திரிப் பக்கோடாவும் வாங்கி வரச் சொல்வார்.

பெருமாள் சாமி லோடு இறக்கும் போது முதலியார் ஏழுமலையை ஸ்டூலில் உட்கார வைத்து அவன் தின்னுவதை ரசிப்பார்.

ஏனோ ஏழுமலையை அவருக்குப் பால்யத்திலேயே பிடித்தது. ஏன்? ஏன்? பெருமாள் சாமியைப் பிடித்தது. அவன் தன் பையனை லாரியில் அழைத்து வருவது பிடித்தது. ஒரு ஜீவனை இன்னொரு ஜீவனுக்குப் பிடிக்கிறது. இதைவிடப் பெரிய காரணம் வேறு வேண்டுமா?

''அப்பாவே தான் கொடுத்தனுப்பிச்சதா இருக்கட்டுமே! அவரு குடுத்தா என்ன நான் குடுத்தா என்ன?''

ஏழுமலை சாலை கடந்து தோட்டப் பாளையத்தை நோக்கி நடந்தான்.

''சாலையில் ஓடும் சக்கரங்களைப் பார்த்தான். அடடே... நாளுக்கு நாள் 'டிராபிக்' ஜாஸ்தியாயிக்கினே போவுது'' என்று தனக்குள் முனகிக் கொண்டான்.

இப்போது முதலியாரிடம் கேட்க வேண்டிய கேள்வி ஒன்று அவனுள் உதித்தது.

முதலியாரிடம் என்ன கேட்பது? சரியா தப்பா என்றா! இல்லை கேட்பதற்கு ஒன்றும் இல்லை. முடிவைச் சொல்லப் போகிறேன். அவர் கேட்டுக் கொள்ளட்டும். காதில் வாங்கினாலும் சரி, கேள்வி கேட்டாலும் சரி. அவர் கேட்டுக் கொள்ளட்டும்.

அவன் சாலையைக் கடந்து அருகந்தம் பூண்டித் தெருவுக்குள் நுழைந்தான். நல்ல





''மன்னா! சற்று யோசித்துப் பாருங்கள். நாடு இருக்கும் நிலைமையில் IMF இல் கடன் வாங்கியேனும் புலவர்களுக்குப் பரிசு கொடுத்துத்தான் ஆக வேண்டுமா?''

- ஞா. ஞானமுத்து

வெய்யில் தொண்டையை வறட்டிற்று. தெரு முனையில் குளிர்பானக் கடை.

''ஒரு ஜூஸ் குடுப்பா!''

''ஐஸ் போடட்டுமா?''

''வேணாம்''

யந்திரம் சாத்துக்குடி பிழியத் தொடங்கியது. உற்றுப் பார்த்தால் அது கூடச் சக்கரம்தான்.

''இன்னாபா ஏய்மலை! எங்கே இம்மாந் தொலவு?''

பரிச்சயமான குரல். திரும்பினான். காதர் பாட்சா. அவனும் லாரி ஓட்டுகிறவன்.

''அரிசி லோட் ஏத்தியாந்தேன்... ஆமா நீ எங்கே?''

''மாங்கா லோடு.''

''வண்டி எங்கே?''

''மாங்கா மண்டியாண்டே கீது!''

''ஒரு ஜூஸ் குடி!''

''வாணாம்பா... ஜல்பு புடிக்கக்கிது''

''ஜல்பு தானேய்யா. புடிச்சிக்கிட்டம், அப்பாலே போவட்டம். ஏம்பா இவருக்கும் ஒரு ஜூஸ் போடு.''

காதர்பாட்சாவின் ஆட்சேபணை ஏழுமலையின் அதிகாரக் குரலில் அடிபட்டுப் போய் விட்டது.

''ஐஸ் போடவா?'' கடைக்காரனின் கர்ம சிரத்தை.

''போடு'' என்றான் காதர் பாட்சா.

''ஆமா... இந்தத் தெருவுலே ஆரு கீறது?''

''பழைய மொதலாளி''

''கையிலே இன்னாப்பா பையி?''

''அப்பா குடுத்துட்டு வரச் சொன்னாரு...''

ஜூஸை நீட்டினான் கடைக்காரன்.

''நேத்து ராத்திரி ஒரு மலை லோடு ஏய்மலை. தில்லே இஸ்துகிச்சு.''

''ஏன்?''

''மை மாதிரி இருட்டு. சும்மா ஒரு குன்ஸாலே ஏர் பின் பெண்டு ஏர் பின் பெண்டா எறங்கி வந்தேன்.''

''இன்னா லோடு?''

''சந்தனக் கட்டை.''

''திருட்டு லோடா?''

''சே... அந்த ஊராத் வேலை நம்முளுக்கு வேணாம்பா. டிப்போ லாரி ரிப்பேர்னு ரேஞ்சரு கூட்டியாரச் சொன்னாரு''

''ஜவ்வாதா, ஏலகிரியா?''

ஏழுமலையும் அங்கே லோடு அடித்திருக்கிறான். இரண்டு தடவை முயல் அடித்திருக்கிறான். ஒரு சமயம் ஒரு நரி.

ஜூஸை அவன் வாங்கிக் கொண்டான்.

''இந்தப் பொளைப்பே போதும்பா ஏய்மலை.. எங்கியாவது துபாயோ, சவுதியோ பூட்லாமான்னு பார்க்கிறேன்.''

''பாஸ்போர்ட் வாங்கிட்டியா?''

''இந்தக் கிண்டல்தானே வாணாங்கிறது!''

''நெஜம்மா கேக்கறேன் காதர்!''

''ஓ... வாங்கிட்டேன்''

''அங்கே போயி என்னா தொளில் பண்ணப் போறே!''

''லாரிதான்!''

''அதுக்கு இங்கியே ஓட்டறது''

ஜூஸை முடித்து விட்டு நோட்டை நீட்டியவாறே கேட்டான் ஏழுமலை.

''மால் ஜாஸ்தி'' என்று பணம் கண்டுவது போல் ஆட்காட்டி விரலையும் கட்டு விரலையும் சிமிட்டிக் காட்டினான் பாட்சா.

''எவ்வளவு மால் வந்து இன்னா ரொம்பப் போவுது'' என்று கடைக்காரன் கொடுத்த சில்லறையை எண்ணாமல் சட்டையில் போட்டவாறே சொன்னான்.

''நீ பெரிய முனிவர் மாதிரி பேசுவே'' என்று பாட்சா ஒரு சிகரெட் பற்ற வைத்தான்.

''அப்ப போவப் போறே!''

''காரண்டியா''

''நான் வண்டி ஓட்டறதை நிறுத்திக்கிலாமான்னு யோசிக்கிறேன்.''

''சேட்டுக்கு ஆரு கடன் கட்டறது?''

''நீ கட்றியா சொல்லு... வண்டியை உம்பேருக்கு மாத்தி வுட்டுடறேன்.''

''இன்னா ஏய்மலை... வெள்ளாட்றியா?''

''மெய்தாம்பா...''

காதர் பாட்சா சிகரெட் புகையை ஊதி விட்டுச் சிரித்தான்.

''கெவனம் கிவனம் மாறிப் போச்சா! நீ வண்டியிலேர்ந்து எறங்கிட்டா ஆம்பூர் பிரியாணி, வாணியம்பாடி சேமியா பாயா... திருப்பத்தூர்ல ஐயரு ஹோட்டலு அவியலு... எல்லாம் மறுபடியும் உன்னை

இஸ்தாந்துரும்.''

''பாட்சா... துன்றதத் தவிர வேற எதுவுமே உனக்கு நியாபகம் வராதா?''

''எத்தினியோ வர்து. சடக்னு ஒன்னு சொன்னேன். ரோட்டு மேல போன ஒடம்பு சும்மா வுட்டா ராவுலே தூக்கம் வராது கன்னு.''

''சரி... நீ வண்டி எப்போ எடுப்பே?'' என்று பேச்சை மாற்றினான் ஏழுமலை.

தீர்மானம் தீர்மானம்தான். அதைப் பஞ்சாயத்துக்கு விட்டுப் பைசல் பண்ண வேண்டுமா என்ன? காதர் பாட்சாவுக்குப் புரியாது.

''ஆறு மணியாவும்.''

''லாரி ஸ்டாண்டிலே பார்க்கலாம்.''

அவன் கத்திரித்துக் கொண்டு தெருவிற்குள் நுழைந்தான்.

சேகர் மாதிரி சில்லறைப் பயல்களுக்கு லாரி ஓட்டி வர வேண்டுமா என்ன?

சக்கரம் தொட்டால் ராஜா மாதிரி தொட வேண்டும். முடியவில்லை. வளைந்து குனிந்து நெளிந்து குழைய முடியவில்லை.

திண்ணை மீதே முதலியார் குந்திக் கொண்டிருந்தார். கைக்குத் தலையை முட்டுக் கொடுத்து, கண் எங்கேயோ பார்த்தது. இயலாமை தெரியும் பார்வை. முடமாகிய பார்வை.

''இன்னாப்பா சௌக்கியமா?''

''ஆரு?'' அவர் மெல்ல எழுந்து உட்கார்ந்தார். ஏழுமலை அடையாளம் சொல்லுமுன்பே பேர் சொல்லிக் கூப்பிட்டார்.

''ஏய்மலை.''

''ஆமாப்பா... நான்தான்.''

''சவுக்கியமா?''

''கிறேன்பா.''

''பெருமாள்சாமி?''

''சவுக்கியமா கிறாரு.'' ‵தைக் கொடுத்தனுப்பிச்சாரு.''

''என்னாது?''

''மக்காச்சோளம்.. வேர்க்கடலை.''

பையை அவர் வாங்கிக் கொண்டார். கண்கள் மின்னின. அழுகையா.. மனக்கரை ததும்புகிறதா? அவனுக்கு மனசில் ஏதோ கன்றுக்குட்டி முட்டுவது போல் விம்மல்.

''பெருமாளா குடுத்தனுப்பிச்சான்?''

''ஆமாப்பா'' அவர் பையை வாங்கி நெஞ்சில் அணைத்துக் கொண்டார்.

கொஞ்ச நேரம் தெருவைப் பார்த்தார். ஏதோ நினைவு. அதை மறக்கிற, அதன் சூட்டை ஆற்றுகிற முயற்சி.

உள்ளே திரும்பி, ''அம்புஜம்... ஏய்மலை வந்துகிறான் மோர் கொண்டா'' என்றார்.

''வாணாப்பா... இப்பதான் ஜூஸ் குடிச்சேன்''

''மோர்தானே.. பரவால்லே.''

இருவரும் சில விநாடிகள் பேசவில்லை.

''ஏய்மலை... ஒங்கிட்டே ஒரு விஷயம் கேக்கணும்!''

''சொல்லுப்பா!''

''தா மொனையிலே ஒரு சின்னக் கடை கொடக்கூலிக்கு வருது. நாலு மூட்டை அரிசி வாங்கினு அங்கே குந்திடலாமான்னு பார்க்கிறேன். இன்னா சொல்றே?''

''இனிமேவா... இவ்ளோ பொளைச்சுப் பேரு வாங்கினப்பறமா?''

''அட போடா! என்னமோ பேரு வாங்கறதுக்காகப் பொழச்ச மாதிரி.. மிஷினு ஓயக் கூடாது. ஓயறது சாவுடா. பாரு... பெருமாள்சாமி லாரியை வுட்டான். ஏரைப் பிடிச்சுகிட்டான். கையிலே தொயிலே வச்சிகினு கிறான்! தப்பிச்சிட்டான். நான் இன்னா பண்ணட்டும் சொல்லு!''

என்ன பதில் சொல்வது?

''முடியுமாப்பா!''

''பாத்தாத் தெரியுது. சும்மாப் போட்டுப் புகைஞ்சுகினு இருக்க முடியாது.''

''செய்ப்பா.''

வீட்டினுள்ளிருந்து மோர் வந்தது. குடித்தான். இரண்டொரு வார்த்தை பேசினான். அதுவே போதும் போல, மனசு தெப்பென்று குளம் நிறைந்து ததும்புவது போல நிறைந்து விட்டது.

அவன் முதலியாரிடம் கேட்க இனி ஒன்றுமில்லை. அதற்கு முந்தி அவர்தான் கேட்டு விட்டாரே! பிள்ளையாகப் பிறந்ததால் சேகருக்கு அவர் தொழிலைப் பறிக்கிற உரிமை இல்லை. தனக்கும் அவருக்கு ஆட்சேபம் சொல்லும் உரிமை இல்லை.

அவன் திரும்பி நெடுஞ்சாலைக்கு நடந்தான். சக்கரங்கள். ஓயாது ஒழியாது ஓடும் சக்கரங்கள். அவற்றின் கீதம் இப்போது ஒரு புதிய பொருளில் அவனுக்குப் புரிந்தது.

தலைவர் : தொண்டர்களிலேயும் தம்மை மாதிரி 'புகழ் விரும்பிகள்' இருக்கத்தான் செய்யறாங்க.

உதவியாளர் : எப்படிச் சொல்றீங்க...?

தலைவர் : '40-வது பிறந்தநாள் காணும் தலைவரே நீர் வாழ்க!'ன்னு சின்னதாப் போட்டு, தன்னோட பேரைப் பெரிசா அச்சடிச்சிருக்கார் பாருங்க!

- சீர்காழி வி. ரேவதி



சிவகாமியின் சபதம்

ஐம்பதாம் அத்தியாயம்
சிவகாமியின் சபதம்

உட்கார்ந்திருந்த சிவகாமி, சட்டென்று எழுந்து நின்றாள். அவளுடைய உதடுகள் துடித்தன; புருவங்கள் மேலேறின. கண்களிலிருந்து மின்னல் கிளம்பிப் புத்த பிக்ஷுவைத் தாக்கின.

''கள்ள பிக்ஷுவே! எதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்கிறீர்? எனக்கு என்ன அபசாரம் செய்தீர்?'' என்ற சொற்கள் சீறிக்கொண்டு பாயும் அம்புகளைப் போலச் சிவகாமியின் வாயிலிருந்து புறப்பட்டன.

பிக்ஷு திகைத்துப் போனார். தவறாக எதையோ சொல்லி விட்டோம் என்ற உணர்ச்சியினால் ஏற்பட்ட தடுமாற்றத்துடன், ''ஆம், சிவகாமி! நான் உனக்குப் பெருந் தீங்குதான் செய்து விட்டேன். எல்லாம் விவரமாகச் சொல்ல வேண்டும். அவசரமாக இரண்டொரு வார்த்தையில் சொல்லக்கூடிய விஷயம் அல்ல. தயவு செய்து சற்றுச் சாவதானமாக உட்கார்ந்து கேள்!'' என்றார்.

''ஐயா! விவரமாக எல்லாம் சொல்லுவதற்கு முன்னால் ஒரு விவரம் சொல்லும். நீர் யார்? கருணாமூர்த்தியான கௌதம புத்தரின் சங்கத்தைச் சேர்ந்து சர்வ பரித்யாகம் செய்த துறவியா? அல்லது வஞ்சக நோக்கத்துடன் க ா வி த் து ணி வேஷம் தரித்த சளுக்க குலத்துச் சக்கரவர்த்தியா? சிற்ப சித்திரக் கலைகளிலும் பரதநாட்டியக் கலையிலும் உண்மை அபிமானங் கொண்ட பரதேசியா? அல்லது ஓர் ஏழைச் சிற்பி மகளைக் கெடுப்பதற்காகப் பிக்ஷு வேஷம் பூண்ட இராவண சந்நியாசியா? நீர் யார்? நாகநந்தியா? புலிகேசியா?''

இவ்விதம் கேட்டுச் சிவகாமி நிறுத்திய போது, வானமுகட்டில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் அதிர்ந்து நடுங்கும்படியாக மின்னல் மின்னி இடி இடித்து ஓய்ந்தது போலிருந்தது.

இவ்வளவு இடி மின்னல்களும் நாகநந்தியின் முகபாவத்தில் எவ்வித மாறுதலையும் உண்டு பண்ணவில்லை. அவர் அதிசயமான அமைதியுடன், ''அம்மா சிவகாமி! உன்னுடைய சந்தேகங்களுக்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. ஆனால், உண்மையிலேயே நான் உலகப் பற்றறுத்த புத்த பிக்ஷுதான். உன்னுடைய பரத நாட்டியக்கலைக்கு என் உள்ளத்தைப் பறிகொடுத்தவன்தான். விலங்கு இனத்தைச் சேர்ந்த மக்களின் முன்னால் தெரு வீதிகளில் உன்னை நடனமாடச் செய்த நிர்மூடப் புலிகேசி நான் அல்ல. பூர்வஜென்மத்தில் செய்த பாவத்தினால் அவனோடு உடன் பிறந்த துரதிருஷ்டசாலி நான். முன்னொரு சமயம், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் என் தம்பி புலிகேசியைக் கொலைகாரனிடமிருந்து காப்பாற்றுவதற்காக அவனுடைய உடையை நான் அணிந்து நடித்தேன். மறுபடியும் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பின் உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவ்விதம் செய்தேன். ஆம், சிவகாமி காஞ்சிக் கோட்டைக்கு வெளியே காட்டின் நடுவே எனக்கு முன்னால் நீ கைகூப்பி வணங்கி, 'என் தந்தையைக் காப்பாற்றுங்கள்!' என்று வேண்டிக் கொண்டாய். அதை நிறைவேற்றுவதற்காகத் துறவியின் காஷாயத்தைக் களைந்து விட்டுச் சக்கரவர்த்தியின் ஆடைகளை அணிந்து கொண்டேன்.....''

சிவகாமி பரபரப்புடன் பிக்ஷுவின் அருகில் ஓடிவந்தாள். மண்டியிட்டுக் கை கூப்பிய வண்ணம், ''சுவாமி! இந்த அபலைப் பெண்ணின் ஆத்திர மொழிகளை மன்னித்து விடுங்கள். என் தந்தையைத் தாங்கள் காப்பாற்றினீர்களா? அவர் உயிரோடிருக்கிறாரா? எங்கேயிருக்கிறார்? எப்படியிருக்கிறார்?'' என்று அலறினாள்.

''அம்மா! உன்னுடைய தந்தையின் உயிரைக் காப்பாற்றினேன். உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன். கொஞ்சம் அமைதியாக உட்

கார்ந்து கேட்டால் விவரங்களும் சொல்கிறேன்'' என்றார் பிக்ஷு.

சிவகாமி உட்கார்ந்தாள். புலிகேசியைப் போல் வேஷந் தரித்துச் சென்று, கையும் காலும் வெட்டப்படுவதற்கிருந்த ஆயனரைக் காப்பாற்றியதையும், ஆனால், அவர் தவறி மலை மீதிலிருந்து கீழே விழுந்ததையும், அதனால் கால் முறிந்ததையும், உணர்விழந்த நிலையில் அரண்ய வீட்டுக்குக் கொண்டுபோய் அங்கு அவருக்கு உணர்வு வந்த பிறகு விடைபெற்று வந்ததையும், புத்த பிக்ஷு சொல்லி வந்தபோது சிவகாமிக்கு அவரிடம் எல்லையற்ற நன்றி உணர்ச்சி உண்டாயிற்று. தான் அவரைக் குறித்துச் சந்தேகித்ததெல்லாம் எவ்வளவு தவறு என்று அடிக்கடி நினைத்துப் பச்சாத்தாபப்பட்டாள். நீர் ததும்பிய கண்களினால் பிக்ஷுவைப் பார்த்துச் சொன்னாள் : ''சுவாமி! என் அருமைத் தந்தையைக் கொடிய தண்டனையிலிருந்து மீட்டு அவருடைய உயிரையும் காப்பாற்றிய தங்களுக்கு என் ஆயுள் உள்ள வரையில் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அப்படியிருக்கும் போது தாங்கள் இங்கு வந்ததும் என்னிடம் மன்னிப்புக் கேட்டீர்களே, அது ஏன்? தங்களை அநியாயமாகச் சந்தேகித்ததற்காக நான் அல்லவா தங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்! சளுக்க சக்கரவர்த்தியும் தாங்களும் ஒருவரேதான் என்று தவறாக எண்ணியதனால், தங்களைப் பற்றி அநியாயமாகச் சந்தேகப் பட்டேன். என்னை இந்த வாதாபிக்கு அழைத்து வந்தவரும் நாற்சந்தியில் நடனமாடச் செய்தவரும் தாங்கள்தான் என்று எண்ணிக் கோபம் கொண்டிருந்தேன். சுவாமி! என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்று சிவகாமி கூறியபோது, அவளுடைய கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது.

''சிவகாமி! நான் உன்னை மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையிலே நீ தான் என்னை மன்னிக்க வேண்டும். உனக்கு நான் பெரிய துரோகம் செய்திருக்கிறேன். இன்று இந்தத் தூரதேசத்தில் நீ தன்னந்தனியாகச் சிறைப்பட்டிருப்பதற்குக் காரணம் நான்தான்! என்னை மன்னித்துவிடு!''

இவ்விதம் புத்த பிக்ஷு உணர்ச்சியினால் கம்மிய குரலில் கூறிய போது, சிவகாமி தன் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நாகநந்தியின் முகத்தை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

''ஆம், சிவகாமி! நான் சொல்வது சத்தியம், வாதாபிச் சைனியம் காஞ்சியின் மீது படையெடுத்து வருவதற்கே காரணமாயிருந்தவன் நான்தான். என் சகோதரன் புலிகேசிக்கு முதலில் அந்த உத்தேசம் இருக்கவில்லை. வாதாபிச் சைனியம் முழுவதும் வேங்கியை நோக்கிப் போவதாயிருந்தது. வாதாபிச் சைனியத்தை இரண்டாகப் பிரித்துப் புலிகேசியைக் காஞ்சிக்கு விரைந்து வரும்படி கூறியவன் நான்தான். வேங்கி ராஜ்யத்தின் மீது படையெடுக்கத் தம்பி விஷ்ணுவர்த்தனனை அனுப்பினால் போதும் என்றும் எழுதினேன்... அதன் பலன் என்ன விபரீதமாயிற்று, தெரியுமா? விஷ்ணுவர்த்தனனுடைய பத்தினி இன்று விதவையாகியிருக்கிறாள். அவளையும், அவளுடைய சின்னஞ் சிறு புதல்வனையும் இன்றைய தினந்தான் இந்நகரில் பத்திரமாய்க் கொண்டு வந்து சேர்த்தேன்....''

''சுவாமி! இத்தனை நாளும் இந்த நகரில் தாங்கள் இருக்கவில்லையா?'' என்று சிவகாமி கேட்டாள்.

''இல்லை, சிவகாமி! இருந்திருந்தால் உன்னுடைய தெய்வீக நடனக்கலை இப்படி சந்தி சிரிப்பதற்கு விட்டிருப்பேனா? கலை உணர்ச்சியில்லாத நிர்மூடப் புலிகேசி இப்படிச் செய்துவிட்டான்! அவன் இவ்விதம் செய்வான் என்று தெரிந்திருந்தால் வடபெண்ணைக் கரையில் உன்னை அவனிடம் ஒப்படைத்திருக்க மாட்டேன்....''

பிக்ஷு வடபெண்ணைக் கரையைப் பற்றிக் கூறியதும் அன்றொரு நாள் இரவு, சிவகாமி கண்ட கனவுத் தோற்றம் அவள் நினைவுக்கு வந்தது. ''வடபெண்ணைக் கரையில் என்னை விட்டு விட்டுப் போனீர்களா? அது எப்படி? உங்களைக் காஞ்சிக்குப் பக்கத்தில் அல்லவா நான் பார்த்து வரம் கேட்டேன்?'' என்றாள்.


''சக்கரவர்த்தி வேஷம் பூண்டு உன் தந்தையைக் காப்பாற்றிய பின் உடனே என் வேஷத்தைக் கலைத்துவிடவில்லை, சிவகாமி! அதே வேஷத்தில் மகேந்திர பல்லவனுடன் போரிட்டேன். மணி மங்கலத்தில் அவனை முறியடித்துவிட்டு உன்னைத் தொடர்ந்து வந்தேன். பொன்முகலி நதிக் கரையில் நீ என்னைப் பார்த்து, சிறைப்பட்ட பல்லவ நாட்டுப் பெண்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்று வரங்கேட்டாய். வாதாபிக்கு நீ மனத்திருப்தியுடன் வருவதாய் இருந்தால் அவர்களை விடுதலை செய்வதாகச் சொன்னேன். நீயும் சம்மதித்தாய். அப்போது உன்னை

அமரர் கல்கி

யும் நான் விடுதலை செய்து உன் தந்தையிடம் சேர்ப்பித்திருக்கலாம். அப்படி நான் செய்யவில்லை. உன்னை வஞ்சித்து வாதா பிக்குக் கொண்டு வந்தேன்!.... ஆனால், நான் இல்லாத சமயத்தில் இந்த மூடன் புலிகேசி இப்படி உன்னை அலங்கோலப்படுத்துவான் என்று மட்டும் நினைக்கவேயில்லை. உன்னிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது ஏன் என்று தெரிகிறதா, சிவகாமி!'' என்றார் பிக்ஷு.

''தெரிகிறது, சுவாமி! இதற்குமுன் எனக்குக் குழப்பம் அளித்துக் கொண்டிருந்த இன்னும் பல விஷயங்களும் விளங்குகின்றன. ஆனால், ஒரே ஒரு சந்தேகம் மட்டும் இன்னும் தீரவில்லை. எதற்காக இவ்வளவெல்லாம் நீங்கள் செய்தீர்கள்? எதற்காக இவ்வளவு சூழ்ச்சிகளும் பிரயத்தனங்களும் செய்து, இந்த அபலைப் பெண்ணை இங்கே கொண்டுவந்து சேர்த்தீர்கள்? உலகத்தைத் துறந்து பிக்ஷு விரதம் பூண்ட தங்களுக்கு இந்த ஏழைப் பெண்ணால் என்ன உபயோகம்?.... கால் ஒடிந்து ஆதரவற்றுக்கிடக்கும் என் தந்தையிடமிருந்து என்னைப் பிரித்துக் கொண்டு வந்ததில் தாங்கள் என்ன லாபத்தைக் கண்டீர்கள்? என்ன பலனை உத்தேசித்து என்னை இங்கே சிறைப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்?.....''

''சிவகாமி! சொல்கிறேன், கேள்! என் சொற்படி காலமல்லாத காலத்தில் காஞ்சி மேல் படையெடுத்த காரணத்தினால் வாதாபியின் வீரசைனியத்தில் பாதிக்கு மேல்





அழிந்துவிட்டது. வேங்கியை வென்று சென்ற வருஷம் மகுடம் சூடிய விஷ்ணு வர்த்தனன் அந்த வெற்றியை நிலைநாட்டிக் கொள்ள முடியாமல் மாண்டான். இந்த விபரீதங்களுக்கெல்லாம் காரணமானவன் நீதான்! உன்னை முன்னிட்டுத்தான் இதையெல்லாம் நான் செய்தேன். ஏன் என்று சொல்லுகிறேன், கேள்!''

இந்தப் பூர்வ பீடிகையுடன் நாகநந்தி பிக்ஷு தமது கதையைக் கூறத் தொடங்கினார். அஜந்தா குகைகளில் தாம் கழித்த இளம் பிராய வாழ்க்கையைப் பற்றிக் கூறினார். அஜந்தா குகைச் சுவரில் தாம் பார்த்த பரதநாட்டியப் பெண் சித்திரத்தைக் குறித்தும், அதைப்பற்றித் தாம் கண்ட மனோராஜ்யக் கனவுகளைக் குறித்தும் சொன்னார். தென்னாட்டின் நிலைமை எப்படியிருக்கிறதென்று அறிந்து கொள்ளத் தாம் யாத்திரை வந்தது பற்றியும், அப்போது ஆயனர் வீட்டில் அஜந்தா சித்திர கன்னிகை உயிர் பெற்று வந்து நடனமாடிய காட்சியைக் கண்டு பிரமித்தது பற்றியும் உணர்ச்சி ததும்ப விவரித்தார்.

''சிவகாமி! அன்று முதல் நான் ஒரு புது மனிதன் ஆனேன். சளுக்க சாம்ராஜ்யத்தின் மகோன்னதத்தைப் பற்றி அதுவரை நான் கட்டிக் கொண்டிருந்த ஆகாசக் கோட்டைகள் தகர்ந்து விழுந்தன. இந்தப் பரந்த பரதகண்டம் முழுவதையும் புத்த சங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்றும், அப்பேர்ப்பட்ட மகா புத்த சங்கத்துக்கு நான் தலைமைப் பிக்ஷு ஆகவேண்டும் என்றும் நான் கொண்டிருந்த மனோரதங்களும் மறைந்தன. 'சாம்ராஜ்யங்களும் புத்த சங்கங்களும் எப்படியாவது போகட்டும். உன்னை நடனமாடச் சொல்லிப் பார்த்துக் கொண்டே என் வாழ்நாளைக் கழித்து விடுவது' என்று சங்கல்பம் செய்து கொண்டேன். அதற்குப் பிறகு உன்னை எப்படி இந்த வாதாபிநகருக்குக் கொண்டு சேர்ப்பது என்பது ஒன்றே என் மனக்கவலை ஆயிற்று. அதற்காக என்ன வெல்லாமோ சூழ்ச்சிகள் செய்தேன்; எத்தனையோ உபாயங்களைக் கையாண்டேன்.....''

இப்படிப் பிக்ஷு சொல்லி வந்தபோது, சிவகாமியின் உள்ளத்தில் ஏற்கெனவே குடி கொண்டிருந்த பெருமிதமான கர்வமும் பரிதாப உணர்ச்சியும் சேர்ந்தாற்போல் பொங்கிக் கொண்டு வந்தன. 'ஆகா! இந்த ஏழைச் சிற்பியின் மகள் காரணமாக இரண்டு பெரிய சாம்ராஜ்யங்கள் சண்டைபோட நேர்ந்ததல்லவா?' என்ற பெருமித கர்வத்தை அடுத்து, 'ஐயோ! காஞ்சியிலிருந்து வாதாபி வரும்போது நான் பார்த்த அத்தனை கொடுமைகளும் என் காரணமாக ஏற்பட்டனவா?' என்ற பரிதாப உணர்ச்சியும் மேலிட்டு வந்தது.

''சிவகாமி! உன்னுடைய கலையின் மேல் நான் கொண்ட மோகத்தினால் ஒரு பெரிய யுத்தத்தையே உண்டு பண்ணினேன். பயங்காளியும், கோழையுமான அந்த அற்பன் மாமல்லனிடமிருந்து உன்னைக் காப்பாற்ற இவ்வளவு பிரம்மப் பிரயத்தனங்களும் செய்தேன். ஆனால் அவ்வளவும், இப்போது நிஷ்பலனாயின. நான் இல்லாத சமயத்தில் உன்னைத் தெரு வீதிகளின் நாற்சந்தியில் ஆடச்செய்து, உன்னையும் உன் கலையையும் நிர்மூடன் புலிகேசி கேவலப்படுத்திவிட்டான். சிவகாமி! என்னை மன்னித்துவிடு. நீ பட்ட அவமானத்திற்கும் நீ அடைந்த துன்பத்திற்கும் பரிகாரம் செய்து விடுகிறேன். உன்னை உன் தந்தை வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட ஏற்பாடு செய்கிறேன். சக்கரவர்த்தியிடம் போராடி இதற்கு அனுமதியும் பெற்று வந்துவிட்டேன்.''

இதைக் கேட்டதும் சிவகாமி நியாய

நாற்பது ஆண்டுகளாக நாடகங்கள் மூலம் நற்பணிகள்!

வேலூரிலுள்ள சங்கீத சபா, இப்போது வெறும் கடைகளாகவும் வியாபார ஸ்தலமாகவும் மாறி விட்டதில் எழுபது வயதாகும் டி. கோவிந்தசாமிக்கு ரொம்பவும் வருத்தம். 'இளங்கோ நாடக மன்ற'த்தை நடத்தி வரும் கோவிந்தசாமி 52-ல் தமது முதல் நாடகத்தை அரங்கேற்றி நடித்தார். அன்றிலிருந்து இன்று வரை நாடகங்களின் மூலம் வசூலான பணத்தை அப்படியே நற்பணிகளுக்குக் கொடுத்து வருகிறார் என்பது பலரையும் ஆச்சரியப்படச் செய்யும் விஷயம்!



மாகத் துள்ளிக் குதித்துக் குதூகலமடைந்திருக்க வேண்டுமல்லவா? விதி வசத்தினாலோ அல்லது விசித்திரக் கோணல்கள் நிறைந்த பெண் மனோபாவத்தினாலோ, சிவகாமி அவ்விதம் மகிழ்ச்சியடையவில்லை. மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

''சிவகாமி! ஏன் பேசாமலிருக்கிறாய்? எப்போது புறப்படலாம், சொல்! உன்னைப் பல்லக்கில் ஏற்றித் தக்க பாதுகாப்புடன் அனுப்பிவைக்கிறேன். உனக்குப் பணிவிடை புரியப் பணிப்பெண்களையும் உன்னைப் பாதுகாப்பதற்கு வீரர்களையும் அனுப்பி வைக்கிறேன். பொன்முகலி ஆறு வரையில் உன்னைக் கொண்டு போய் விட்டுவிட்டு அவர்கள் திரும்புவார்கள்....'' என்று புத்த பிக்ஷு கூறி வந்தபோது, அதுகாறும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த சிவகாமி சட்டென்று எழுந்து நின்று, ஆவேசம் ததும்பிய குரலில் பின்வரும் பயங்கர மொழிகளைக் கூறினாள்:

''அடிகளே! கேளுங்கள். இந்த வாதாபி நகரத்தை விட்டு நான் எப்போது கிளம்புவேன், தெரியுமா? பயங்கொள்ளி என்று நீங்கள் அவதூறு சொல்லிய வீர மாமல்லர் ஒரு நாள் இந்நகர் மீது படையெடுத்து வருவார். நரிக்கூட்டத்தின் மீது பாயும் சிங்கத்தைப்போலச் சளுக்க சைனியத்தைச் சின்னா பின்னம் செய்வார். நாற்சந்தி மூலைகளில் என்னை நடனம் ஆடச்செய்த பாதகப் புலிகேசியை யமன் உலகத்துக்கு அனுப்புவார். தமிழகத்து ஸ்திரீ புருஷர்களைக் கையைக் கட்டி ஊர்வலம் விட்ட வீதிகளில் இரத்த ஆறு ஓடும். அவர்களை நிறுத்திச் சாட்டையால் அடித்த நாற்சந்திகளிலே வாதாபி மக்களின் பிரேதங்கள் நாதியற்றுக்கிடக்கும். இந்தச் சளுக்கர் தலைநகரின் மாட மாளிகை, கூட கோபுரங்கள் எரிந்து சாம்பலாகும். இந்த நகரம் சுடுகாடாகும். அந்தக் காட்சியை என் கண்ணால் பார்த்துவிட்டுப் பிறகுதான் இந்த ஊரைவிட்டுக் கிளம்புவேன். சளுக்கப் பதர்களை வென்று வெற்றி மாலைசூடிய மாமல்லர் என் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு போவதற்கு வருவார். அப்போதுதான் புறப்படுவேன். நீர் அனுப்பிப் போக மாட்டேன். பல்லக்கில் ஏற்றி அனுப்பினாலும் போகமாட்டேன். யானைமீது வைத்து அனுப்பினாலும் போக மாட்டேன்!''

இந்தப் பயங்கரமான சபதத்தைக் கேட்ட நாகநந்தியின் முகத்திலே புன்னகை தோன்றியது. தம்முடைய சூழ்ச்சி மீண்டும் பலித்து விட்டது என்று எண்ணி அந்தப் பொல்லாத பிக்ஷு உள்ளுக்குள் உவகையடைந்தார் போலும்!

(தொடரும்)

அருள்வாக்கு



தேவை என்று ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு விட்டோமானால், அப்புறம் அதைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஓயாத பிரயாசை ஏற்படத்தான் செய்கிறது. இது திருப்திக்கும் சாந்திக்கும் பங்கம்தான். போதுமென்ற மனமே பொன்னான திருப்தியைத் தருவது. சமீப காலம் வரை படாடோப (luxury) வஸ்துக்களாக இருந்த ரேடியோ, ஃபான் மாதிரியானவற்றைக் கூட இப்போது அவசியமாக்கிக் கொண்டு (necessaries), இவை கிடைக்கவில்லையே என்று தாபப்படுவதும், அதிருப்திப்படுவதுமாக இருக்கிறார்கள். தேவையை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுத்திக் கொள்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு சாந்தி குறையும்; சௌக்கியம் குறையும்; நிம்மதியும் திருப்தியும் குறையும்; தரித்திரம், துக்கம் உண்டாகும். Standard of living என்பதை 'வாழ்க்கைத் தரம்' என்று மொழி பெயர்ப்பதே சரியல்ல. 'வாழ்க்கைத் தரம்' என்பது மிகவும் உயர்ந்த விஷயம். நல்ல குணங்களுடன், ஈசுவர பக்தியுடன் வாழ்கிற வாழ்வே 'தரமான' வாழ்வு. வாழ்க்கைத் தரத்தை Quality of life என்று சொல்ல வேண்டும். தற்போது பொருளாதாரத் தேவைகளை அதிகமாக்கிக் கொண்டே போவதைத்தான் 'வாழ்க்கைத் தரம்' என்கிறார்கள். இதைவிட மனசினால் உயர்ந்து, வாஸ்தவமாகவே வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதைத்தான் பெரிதாக எண்ண வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ப்ரமோஷன்

வெறிச்சோடிக் கிடந்த சுபத்ரா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் கேண்டீன், மதியம் பன்னிரெண்டு மணிக்கு நிரம்பி வழிய ஆரம்பித்தது.

வாஷ்பேசினில் கை கழுவிக் கொண்டு வந்த பிரதிமா, தான் கொண்டு வந்திருந்த டிபன் பாக்சை எடுத்து மேஜை மீது வைத்தாள்.

''வாடியம்மா. உனக்காகத்தான் காத்திருக்கிறோம்'' என்றாள் கல்யாணி.

''ஏன் லேட்டு?'' என்று கேட்டாள் நூர் ஜஹான்.

பிரதிமா பதில் சொல்வதற்கு முன் அவளையும் முந்திக் கொண்டு, ''ஹூம்... வழக்கமான டிஸ்கஷன்ல மாட்டிக்கிட்டிருப்பா'' என்றாள் ரோஸி.

''ஆமாண்டி. டெல்லிக்கு அனுப்பப் போற கன்சைன்மென்ட் பற்றி டிஸ்கஸ் பண்ண எம்.டி. கூப்பிட்டிருந்தார். அதான் லேட் ஆயிடுச்சி'' என்றாள் பிரதிமா.

''சரி, சரி. பசி வயிற்றைக் கிள்ளுது.''

அரட்டை அடித்துக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தனர்.

''ஏண்டி, பிரதி! வர்ற ஜனவரில யார் யாருக்கு ப்ரமோஷன் கிடைக்கப் போகுது?''

''என்னைக் கேட்டால்? நானா எம்.டி.?''

''நீ எம்.டி. இல்லேன்னாலும், அவர் உன்னோடதானே பல விஷயங்களையும் டிஸ்கஸ் பண்றார். அதனால உனக்குத் தெரியுமோன்னு கேட்டேன்... மத்தவங்களுக்கு ப்ரமோஷன் கிடைக்குதோ இல்லையோ, உனக்கு நிச்சயம் கிடைக்கும். இல்லையா?''

''அதெப்படிடீ நான் சொல்ல முடியும்?''

''ஏன், கம்பெனிக்காக நீ எப்படி உழைக்கிறே? எம். டி. உன் மேல் நம்பிக்கை வெச்சிருக்கிறார். கண்டிப்பா உனக்கு ப்ரமோஷன் கொடுத்துத்தான் ஆகணும்.''

''கொஞ்சம் விட்டா எனக்காக நீ உண்ணாவிரதம் கூட இருப்பே போலிருக்கே?''

''அய்யய்யோ... அது மட்டும் என்னால் முடியாதப்பா'' என்றவாறு டிபன் பாக்சை காலி செய்தாள் ரோஸி.

ரோஸி சொன்ன வார்த்தைகள் அடிக்கடி பிரதிமாவின் காதில் அலையடித்தன.

அவள் வார்த்தைகளில்தான் எத்தனை உண்மை?

மலர்மதி



சேல்ஸ் அசிஸ்டென்ட்டாய்ச் சேர்ந்த பிரதிமா கம்பெனிக்காகப் பேயாய் உழைத்தாள். எம். டி. யோடு டிஸ்கஷனில் கலந்து கொண்டால் நேரம் போவதே தெரியாது. எத்தனையோ சமயங்களில் எம். டி. யே அவளைத் தன் காரில் கொண்டு போய் அவளை வீட்டில் விட்டிருக்கிறார்.

அவளின் சஜஸ்ஷன்ஸ், பிஸினஸில் புதிய புதிய உத்திகள், கம்பெனியை 'கிடு கிடு'வென உயர்த்தின.

எம். டி. அசந்து போனார்.

சேல்ஸ் மானேஜர் ராகவன் கூட இருக்கிறார். பத்து வருட பழுத்த அனுபவம். நாலாயிரத்துச் சொச்ச ரூபாய் வாங்குகிறார். என்ன பிரயோஜனம்?



'நேற்று வந்தவள் இந்த பிரதிமா. இவளின் ஆலோசனைப்படி நடந்தால் கம்பெனிக்கு ஏகப்பட்ட லாபம் கிடைக்கிறது. இது எப்படி சாத்தியம்? இது போன்ற ஐடியாக்கள் தனக்குத் தோன்றாதது ஏன்? ஒரு பெண் பிள்ளைக்கு இவ்வளவு திறமையா? இப்படியே விட்டால் தன்னையே தூக்கிச் சாப்பிட்டுவிட மாட்டாள்? இவளை இப்படியே விடக் கூடாது. விட்டால் தன்னுடைய சேல்ஸ் மானேஜர் பதவிக்கே ஆபத்தாக அல்லவா முடியும்?'

ராகவன் தீவிரமாய்ச் சிந்தித்தார்.

எம். டி. கூப்பிட்ட குரலுக்கு மானாய்த் துள்ளி ஓடுவதும், டிஸ்கஷனில் படு சுறுசுறுப்பாய்க் கலந்து கொள்வதும், எம். டி. அவள் மீது பிரியமாய் இருப்பதையும் கண்டு உள்ளூர எரிச்சல்பட்டார் ராகவன்.

சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தார்.

''மேடம்! உங்களை எம். டி. வரச் சொன்னார்!'' என்று பியூன் வந்து சொன்னதும் எழுந்து ஓடினாள் பிரதிமா.

''பிரதிமா! ஒரு குட் நியூஸ்.''

''என்ன சார்?''

''நீ கொடுத்த ஐடியாப்படி நடந்ததில் புதிய பார்ட்டியை மடக்கி ஆச்சு. ஐம்பது லட்சத்துக்கு ஆர்டர் கொடுத்திருக்காங்க.''

''ஓ, ஐ. ஸி...'' என்றவாறு சந்தோஷ மிகுதியில் - எம். டி. யின் எதிர் சீட்டில் ராகவன் அமர்ந்திருப்பதைக் கூட பொருட்படுத்தாமல் - கையை நீட்டி விட்டாள் பிரதிமா.

எம். டி. அவள் கையைப் பற்றிக் குலுக்கினார்.

''கன்கிராஜுலேஷன்ஸ் பிரதிமா! கீப் இட் அப்!''

எம். டி. யும், பிரதிமாவும் கை குலுக்கிக் கொண்ட விஷயம் கம்பெனியில் காட்டுத் தீ போல் பரவியது. பரப்பியவர் சாட்சாத் ராகவன்தான்.

'ஹூம். இன்னைக்குக் கையைக் கொடுத்திருக்கா. நாளைக்கு என்ன கொடுப்பாளோ?''

''மார்ச் மாதம் பிறந்துட்டாலே, வெளியே தலைகாட்ட முடியலை.''

''ஏண்ணே...! வெய்யில் கடுமையா இருக்கா?''

''உம்... டார்ஜெட்டுக்கு ஒரு லட்சம் குறையுது, ரெண்டு லட்சம் குறையுதுன்னு பாங்க் மானேஜர்களெல்லாம் நச்சரிக்கிறாங்கப்பா....!''

- சீர்காழி வி. ரேவதி



'சீனியர் சேல்ஸ் மானேஜர் போஸ்ட் காலியா இருக்கு. ராகவன் சாரையும் மீறி இவளுக்கு அந்தப் பதவி கிடைக்கலை என் பேரை மாத்தி வெச்சுக்கிறேன்.'

'எப்படியோ எம். டி. யையே மடக்கிப் போட்டுக்கிட்டா, படா கில்லாடி ஆள் தான்.'

- கம்பெனியின் மூலை முடுக்கெல்லாம் இதே பேச்சு.

டிசம்பர் கடைசி வாரம்.

கம்பெனி ஏக பரபரப்பில் இருந்தது.

காரணம் -

இந்த வாரத்தில்தான் ப்ரமோஷன் பட்டியல் வெளியாகும். சம்பந்தப்பட்டவர்களை அழைத்து எம். டி. ப்ரமோஷன் ஆர்டர்களைக் கொடுப்பார்.

பிரதிமாவுக்கு உள்ளூரப் படபடப்பாய் இருந்தது. இந்தச் சின்ன வயதில் தனக்கு ஒரு பெரிய பதவி கிடைக்கப் போகிறதை நினைக்கும்போதே பெருமையாய் இருந்தது.

ஆனால்...

நடந்ததே வேறு.

ப்ரமோஷன் பட்டியலில் பிரதிமாவின் பெயர் வரவில்லை.

ஏன்?

நொறுங்கிப் போனாள்.

தனக்கு 'சீனியர் சேல்ஸ் மானேஜர்' ப்ரமோஷன் கிடைத்த பூரிப்பில் எல்லோருக்கும் ஸ்வீட் விநியோகித்துக் கொண்டிருந்த ராகவனைப் பார்த்து ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது பிரதிமாவுக்கு.

இது என்ன அநியாயம்?

கம்பெனியின் முன்னேற்றத்திற்காக மாடு மாதிரி உழைத்து என்ன பிரயோஜனம்?

தண்டச் சம்பளம் வாங்கிக் கொண்டு தூங்கி வழிகிற சேல்ஸ் மானேஜருக்கு மேலும் ஒரு ப்ரமோஷன்.

பற்களை 'நறநற'வெனக் கடித்தாள்.

நேரடியாக எம். டி. யிடமே போய்க் கேட்டுவிட வேண்டியதுதான்.

புறப்பட்டவள் 'சட்'டென நின்றாள்.

வேண்டாம். எம். டி. யிடம் எதுவுமே கேட்க வேண்டியதில்லை. கேட்டு ஒரு காரியமும் ஆகப் போவதில்லை.

இனி...

நாசுக்காய் ஒதுங்கி விட வேண்டியதுதான். டிஸ்கஸ் பண்ணக் கூப்பிட்டால், 'சீனியர் சேல்ஸ் மானேஜர் இருக்காரே அவரிடம் பண்ணுங்க சார். எனக்குத் தலைவலி' என்று சால்ஜாப்பு சொல்ல வேண்டியதுதான்.

அவள் தீர்மானித்து விட்டாள்.

அன்று மாலை.

செக்ஷன் காலியானது.

பிரதிமாவும் தன் ஹேண்ட் பேக், டிபன் பாக்ஸ் முதலியவற்றை எடுத்து ஒழுங்குபடுத்திக் கொண்டு புறப்படுவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த நேரத்தில், பியூன் வந்து நின்றான்.

''அம்மா. உங்களை எம். டி. வரச் சொன்னார்.''

''எதுக்கு?''

''தெரியலீங்க?''

ஆவேசமாய் உள்ளே நுழைந்தாள்.

''வா பிரதிமா! ப்ளீஸ் சிட்டெளன்.''

எதிர்த்த இருக்கையில் அமர்ந்தாள்.

''நீ கம்பெனிக்காக எப்படியெல்லாம் உழைக்கிறேன்னு எனக்கு நன்றாகவே தெரியும். நியாயமாய்ப் பார்க்கப் போனால் உனக்குத்தான் ப்ரமோஷன் கிடைத்திருக்கணும். ஆனால், வேண்டுமென்றே ராகவனுக்குக் கொடுத்தேன். கொஞ்ச நாளா நானும் பார்க்கிறேன். என்னையும் உன்னையும் இணைச்சி கம்பெனில 'கிசு,கிசு' பரவியிருக்கிறது. நீ என் பொண்ணு போல. என்னால உன் எதிர்காலம் பாதித்துவிடக் கூடாதே என்ற கவலையில்தான் உனக்கு ப்ரமோஷன் கொடுக்கலை. ராகவனுக்குப் ப்ரமோஷன் கொடுத்தது தண்டம்தான். இன்னும் ரெண்டு வருஷத்தில் ரிடையர் ஆகப் போகிறவர். பொழைச்சிக்கிட்டும். ஆனால் உனக்கு ப்ரமோஷன் கொடுக்காதது என் மனசை உறுத்திக்கிட்டே இருந்தது. அதனால நேத்து நடந்த போர்டு டைரக்டர்ஸ் மீட்டிங்ல உன்னைப் பற்றி விளக்கமாப் பேசினேன். என்னோட முடிவை டைரக்டர்ஸ் 'அப்ருவ்' பண்ணிட்டதில் எனக்கு ரொம்பச் சந்தோஷம்.''

''..............''

''உன்னோட நேடிவ் பெங்களூர். அம்மா அப்பாவை விட்டுத் தனியா வந்து இந்தச் சென்னையில் தங்கி ஏன் அல்லல் படணும்? அதனால யூ வில் பி டிரான்ஸ்ஃபர் டு அவர் பெங்களூர் பிராஞ்ச் வித் ப்ரமோஷன்.''

''சார்...! நீங்க என்ன சொல்றீங்க?''

''ஆமாம்மா. உனக்கு சேல்ஸ் மானேஜர் ப்ரமோஷன் கொடுத்து டிரான்ஸ்ஃபர் பண்றேன். ஆனா, இது யாருக்கும் தெரிய வேணாம் வெறும் டிரான்ஸ்ஃபர் என்றே சொல்லி வை. பிஸினஸில் கொஞ்சம் 'டல்'லாயிருக்கிற பெங்களூர் பிராஞ்ச்சை நீ முன்னுக்குக் கொண்டு வருவேன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. ப்ரமோஷன் பேப்பர்சில் சைன் பண்ணு. ஆல் த பெஸ்ட்!''

நெகிழ்ந்து போன பிரதிமா, அவருடைய கையைப் பற்றிக் கொண்டு ''தாங்க் யூ வெரி மச் சார்!'' என்றாள்.

''யூ ஆர் வெல்கம்!'' என்றார் எம். டி. சிரித்துக் கொண்டே.

"நல்வாழ்வு நம் கையில்"— 'சோலை' இயக்கம் சொல்கிறது!

வேலூரில் சற்றே ஒதுக்குப்புறமாக இருக்கிற இடத்தில், அழகான குடில்கள். கூரையின் ஓலைகள் தாறுமாறாக நீட்டிக் கொண்டிராமல், முனைகள் ஒழுங்காக மடித்து வைக்கப்பட்ட நேர்த்தி... பச்சைப் பசேல் என்று மூலிகைச் செடிகள். வரிசையாகக் கற்றாழைகள், கர்ப்பூரவல்லிகள்...

''இந்தக் குடிலுக்குள் வாருங்கள்!'' என்று உள்ளே அரையிருட்டாக இருந்த குடிசைக்குள் அழைத்துப் போனார் ஆர். டி. ராஜன். குளுகுளுவென்றிருந்தது குடில். தொட்டியில் அடுக்கடுக்காகக் காளான்கள் பூத்துக் குலுங்கின! வெள்ளை வெளேரென்று, பூவின் இதழ் போலக் காளான்கள்.

''இவை எல்லாம் சமையலுக்கும், சாப்பாட்டுக்கும்தான். கிராமப்புற விவசாயிக்கு ஏற்ற காளான். நிலமில்லாத ஏழை விவசாயிகள் கூட இதுபோன்ற குடிசைகளை அமைத்துக் கொண்டு எளிதில் உற்பத்தி செய்யலாம். ஒரு நாளைக்கு எண்பது ரூபாய் கிடைக்கும். இதில் புரோட்டீன் அதிகம். 'கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்தும். நீரிழிவுக்கு எதிராக வேலை செய்யும்!'' என்றவர், ஒரு பாக்கெட் காளான் பொடியைக் கையில் தந்து, ''இது காளான் சூப் பவுடர். அப்படியே வெந்நீரில் கலந்து குடிக்கலாம். சைனஸ் கோளாறுகளுக்குப் பிரமாதமான மருந்து கூட!'' என்று சொன்னவர், ''கிராமப்புற மக்களில் 68 சதம் பேருக்குப் புரதச் சத்துக் குறைவால் வரும் நோய்கள்தான் அதிகம். அந்த நிலையை இந்தக் காளான் உணவுப் பழக்கம் மாற்றி விடும். இதே போல் சத்துணவுக் கூடத்தில் முட்டை சாப்பிடாத சைவக் குழந்தைகளுக்கு இந்தக் காளானை வழங்கினால், அந்தக் குழந்தைகளும் பயனடைவார்கள்; காளான்களை வளர்க்கும் கிராமப்புற ஏழை மக்களும் பயனடைவார்கள்!'' என்கிறார்.

இந்த ராஜன் கொஞ்சம் வித்தியாசமான மனிதர். திண்டுக்கல்காரர். காந்தி கிராமத்தில் சுகாதாரப் படிப்புப் படித்தவர். சர்வோதய ஊழியராக, பூமிதான இயக்கத்தில் இணைந்து, சமூகப் பணி ஆற்றத் தொடங்கியவர். 81 ஆம் வருடம், தமது சமுதாயச் சேவையின் 25 வருடப் பணியை நினைவுகூர, இந்திய சமூக வாழ்க்கை மேம்பாட்டு இயக்கம் துவங்கினார். (Social Life Animation India. இதைச் 'சோலை இயக்கம்' என்று வேலூரில் சொல்லுகிறார்கள்.)

எப்படி திண்டுக்கல்லிலிருந்து வேலூர் வந்தார்?

''சி. எம். சி. யில் அழைத்தார்கள் சமூகப் பணியாற்ற. சிறிது காலத்துக்குப் பிறகு எனக்கே தோன்றியது, 'ஓர் இயக்கத்தை உருவாக்காமல், 'இயக்கம்' என்கிற பெயரில் ஒரு நிறுவனத்தை அல்லவா நாம் மறுபடி உருவாக்குகிறோம்' என்று. அதிகார வர்க்கச் செயல் முறையில் எனக்கு விருப்பமில்லை. அந்த அழுத்தமும் புழுக்கமும் இல்லாத சூழ்நிலையில் கிராம மக்களின் நல வாழ்வுக்கும், சமுதாயப் பணிக்கும் ஏற்ற ஒரு புது இயக்கம் உருவாக்க நினைத்தேன்.

''நேபாளத்தில் சமுதாய நலவாழ்வுத் திட்டப் பயிற்சி அளிக்கச் சென்ற மூன்று பேரில் நானும் ஒருவன்... ஜப்பானிலும் பயிற்சி பெற்றிருக்கிறேன். தைவான், பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ்... இங்கே எல்லாம் மத்திய தரத் தலைமையில், மக்கள் சார்ந்த இயக்கமாக இப்படிப்பட்ட சமுதாயத் திட்டங்கள் இயங்குவதைப் பார்த்த போது, 'நலவாழ்வு நம் கையில்'

☛ மூலிகை மருந்து தயாரிக்கும் பெண்கள்





☛ உடல்நலத்தைக் கெடுக்காத தின்பண்டங்கள் விற்பனை

என்ற உறுதியும், தெம்பும் ஏற்பட்டன!'' என்று பின்னணியை விளக்குகிறார் ராஜன்.

முதலில் காட்பாடியில்தான் ஆரம்பித்தாராம். பிறகு நவம்பர் 81-ல், பரமக்குடியில். அதற்கடுத்தபடி கோவையில். குடும்பத்தில் சாதகமான சூழ்நிலை இருந்ததால், சம்பளம் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை இவர்.

ராஜனின் நோக்கம் எல்லாம், கிராமப்புறப் பெண்கள்/தாழ்த்தப்பட்ட மக்கள்/கிராம ஏழைகளின் முன்னேற்றம்தான்!

அன்றாட நல வாழ்க்கைக்குத் தேவையான நூல்கள் வெளியிடுகிறார் ராஜன். மூலிகைத் தோட்டத்தைப் பராமரிக்கிறார். மருந்துகள் தயாரிக்கிறார். மக்கள் 'ஞானப் பந்தி' நடத்துகிறார்.

அது என்ன ஞானப் பந்தி?

''கிராமவாசிகளைக் கூட்டி, அவர்களைப் பேச விடுவதுதான் அது! 70 சதவிகித கிராம - நோய்களுக்கு மூலிகைகளே போதுமே! அவர்களுக்குத் தெரியும் சாதாரண மூலிகைகள் எல்லாம். இது குப்பை மேனி, இது ஆடாதொடை, இது தூதுவளை என்று லகுவில் சொல்லி விடுவார்கள். ஒரு பாடனி மாணவர் கூட இத்தனை சுலபமாக அடையாளம் கண்டு சொல்ல முடியாது! இத்தனை மூலிகைகளைப் புறக்கணித்து விட்டு எதற்காக ஆங்கில மருந்துகளை நாடி ஓட வேண்டும்? எனவே, மருந்தில்லாத மருத்துவம், விலையில்லாத மருத்துவம் கொண்டு வரப் பார்க்கிறோம். இங்கே காட்பாடியில் முதலில் மூலிகைத் தோட்டம் வைத்தோம். பிறகு சோளிங்கரில். முன்பு கோவில்கள் முன்பு மூலிகைச் செடிகள் போடுவார்கள். வளர்ந்து பயன்தரும். இந்த மூலிகைகளே 70 சத நோய்களைத் தீர்த்து விடும். இப்போதுதான் இல்லையே!'' என்கிறார் ராஜன் ஆதங்கத்தோடு.



☛ ஆர். டி. ராஜன்

ரத்த அழுத்தமா? நீரிழிவா? எல்லாவற்றுக்கும் மருந்துகள் வைத்திருக்கிறார். எல்லாமே மூலிகைகளிலிருந்து! பயிற்சி பெற்ற பெண்கள் தயாரிக்கிறார்கள்.

'சோலையோடு இணைந்த கிராம ஏழைப் பணியாளர் சங்கம், மகளிர் சங்கங்களின் தொகுப்பான 'உமா சங்கம்' இவற்றில் பணிபுரியும் பெண்கள், சுற்று வட்டாரத்திலுள்ள இருநூறு கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள பெண்களுக்கு ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கும் பயிற்சி, செயற்கை வைரங்களைப் பட்டை தீட்டும் பயிற்சி, மூலிகைகளிலிருந்து மருந்துகள் தயாரிக்கும் பயிற்சி, அச்சகப் பயிற்சி, விவசாயப் பயிற்சி என்று ஏராளமான பயிற்சிகளைத் தந்து அவர்களைச் சொந்தக் காலில் நிற்கச் செய்கிறார்கள்.

சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 350 குழந்தைகள் பீடித் தொழிலில் அடகு வைக்கப்பட்டிருக்கிற கொடுமையைச் சொல்லி நொந்து கொள்ளும் ராஜன், அவர்களை மீட்கவும் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார். ''நான்கு வயதுக் குழந்தை முதல் கல்யாணமான பெண் குழந்தைகள் கூட அடமானமாக இருக்கிறார்கள்!'' என்றபோது, அதிர்ச்சியாக இருந்தது.

உடலுக்கு நலன் அளிக்கும் பயறு வகைகள் சிலவற்றில் முறுக்கு, தேன் குழல், ஏன் - மிக்ஸர் கூடச் செய்து விற்பனைக்கு வைத்திருக்கிறார். (ராகியில் தேன் குழல் - முறுக்கு நறுக் நறுக்கென்று இருந்தது!) இதன் விற்பனையைக் கவனித்துக் கொள்ளும் எம். பி. ஏ. பட்டதாரிப் பெண்மணி ஸ்ரீமதி குமாரி ரமணய்யா, ஒவ்வொன்றின் பயனையும் விளக்கும் போது, 'அட இனி எதுக்கடா அரிசி முறுக்கும், ரவா லட்டுவும்?' என்று கூட ஒதுக்கி விடத் தூண்டும்!

- சித்தார்த்

ஹரி கிளம்பிச் சென்று வெகு நேரத்துக்குத் தோள்பட்டையில் அவன் கை பதிந்திருந்தது போல் இருந்தது. பார்வையற்ற இவன் தனக்கு இத்தனை ஆப்தமாகிப் போனது விந்தை என்று மீரா நினைத்துக் கொண்டாள். ஆனால் இவன் வந்திருக்கிறான் என்று தெரிந்த உடனேயே அம்மா அந்த நெருக்கடியான நிலையிலும் எரிச்சல் பட்டாள். மஹேஷ் மட்டுமே ஹரியை சகஜமாக எடுத்துக் கொண்டான். பஸ் ஸ்டாப்புக்குக் கூடச் சென்று பஸ்ஸில் ஏற்றிவிட்டு வந்தான்.

ஆஸ்பத்திரியிலிருந்து போன் வரும் என்று அவள் காத்திருந்தாள். சமைக்கப் பிடிக்காமல், மஹேஷ் பசிப்பதாகச் சொன்னதும் இருவரும் ப்ரெட்டை டோஸ்ட் செய்து பாலைக் குடித்தார்கள். எந்த ஆஸ்பத்திரி என்று கூடக் கேட்டுக் கொள்ளாமல் போனது மடத்தனம் என்று தன்னையே பல முறை சபித்துக் கொண்டு, திடீரென்று தோன்றிய யோசனையில், கும்பகோணத்துக்கு அத்தைப் பாட்டியின் நம்பருக்கு எஸ்.டி.டி. செய்தாள்.

பாட்டிதான் போன் எடுத்தாள். ''மெட்ராசிலேந்து மீரா பேசறேன்'' என்றதுமே பாட்டி பதறிப் போனாள், ''என்னடி குழந்தை, யாருக்காவது உடம்பு சரியில்லையா?'' என்றாள் தீர்க்க தரிசியைப் போல. பாட்டிக்கு உரத்த குரலில் ''அப்பாவிற்கு உடம்பு சரியாயில்லே. ஆஸ்பத்திரியிலே இருக்கார். நீங்களும் தாத்தாவும் வாங்கோ ப்ளீஸ்'' என்பதற்குள் தொண்டை அடைத்து மேலே பேச முடியாமல் போயிற்று.

''வரோம்டி குழந்தை, நாளைக்கே புறப்பட்டு வரோம்'' என்று பாட்டி சொன்னதும் கண்களிலிருந்து நீர் வழிந்தது. ஆண்டவனின் கருணைகளில் பாட்டி என்பதும் ஒன்று என்று மனசு நெகிழ்ந்தது. என்ன உடம்பு என்று கூட பாட்டி கேட்கவில்லை. தாத்தாவைக் கேட்டுச் சொல்றேன் என்று தயங்கவில்லை.

''பாட்டி, தாத்தா வராளா, ஹைய்யா!'' என்ற மஹேஷைப் பார்த்து இன்றைக்குச் சிரிக்கத் தோன்றவில்லை. கனிவு சுரந்தது. அவளுக்கும் அவனுக்கும் எட்டு வயது வித்தியாசம். இன்று குழந்தையாகத் தோன்றினான். 'தூக்கம் வந்தா தூங்கு மஹேஷ்' என்றதும் சோபாவிலேயே சுருண்டு படுத்தான்.

போன் ஒலித்ததும் அவள் உடனடியாகப் பதற்றத்துடன் எடுத்தாள். 'மீரா' என்ற அம்மாவின் குரல் கேட்டதும், ''உம் சொல்லு'' என்றாள் அவசரமாக. ''அப்பா எப்படியிருக்கார்?''

''இப்பத் தூங்கறார் மீரா'' என்ற குரல் தழுதழுத்துப் போயிற்று. ''இன்டென்ஸிவ் கேர் யூனிட்லே இருக்கார். கார்த்தாலெக்குள்ளே கொஞ்சம் ஸ்டேபில் ஆயிடும்னு டாக்டர் சொல்றார். நீ கவலைப்படாதே.'' அம்மா அழுகிறாள் என்று தோன்றிற்று. மீராவுக்கும் அழுகை வந்தது.

''நீ ஏன் இத்தனை நேரம் போன் பண்ணலே?'' என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க. ''நா பயந்து செத்துட்டேன். அத்தைப் பாட்டிக்கு போன் பண்ணினேன். நாளைக்கே கிளம்பி வரோம்னு சொன்னா.''

''போன் பண்ணியா? வயசானவங்களை ஏன் மீரா கலவரப் படுத்தணும்? சரி, வந்தா நல்லதுதான், வீட்டிலே உங்களுக்குத் துணையா இருக்கும்.''

''இப்ப நமக்கெல்லாம் மாரல் சப்போர்ட் வேணும். அவங்க வந்தா தைரியமா இருக்கும் போல இருக்கு. அம்மா, அப்பாவுக்கு என்ன உடம்பு?''

22 காதலெனும் வானவில்

''மைல்ட் ஹார்ட் அட்டாக்னு டாக்டர் சொல்றார்.''

அடிவயிற்றில் பயம் கவ்வ, ''அம்மா டாக்டர் நல்ல டாக்டராம்மா?'' என்றாள்.

''இந்த ஊரிலியே உசத்தியான வைத்தியம் இங்கே. எல்லா டாக்டர்களும் நல்ல படிப்புப் படிச்சவங்கதான். பகவான் அனுக்கிரகம் இருந்தா நல்லபடியா இருக்கும். பிரார்த்தனையைத் தவிர, எனக்கு வேற எதிலேயும் இப்ப நம்பிக்கையில்லே.''

இது ரொம்பவும் பலவீனமான வாதம் என்று மீராவுக்குத் தோன்றிற்று. அமெரிக்காவை விட்டு நாம் வந்திருக்கக் கூடாது என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது. அங்கிருக்கும் வைத்திய வசதி இங்கிருக்குமா என்று மனசு பதைத்தது. ஆனால் இப்போது இந்தக் கேள்வி கேட்டு ஒன்றும் லாபமில்லை என்ற சோர்வு அவளை ஆட்கொண்டது. பகவான் அம்மாவுக்கு இந்தியாவில் அதிக நெருக்கம் காண்பித்தார் என்று தோன்றிற்று.

''பரீட்சை எப்படிப் பண்ணினே?'' என்றாள் அம்மா திடீரென்று ஞாபகம் வந்ததுபோல.

''ரொம்ப நன்றாய்ப் பண்ணினேன்.''

''குட்! அந்தப் பையன் போயிட்டானா?''

''எந்தப் பையன், ஹரியா? அப்பவே போயிட்டானே?'' என்றாள் மீரா வியப்புடன். ''அவனாத்தான் என்னைப் பார்க்கணும்னு பஸ்லே வந்தான். உனக்கு ஏன் கோபம் வந்தது?''

''கோபமா?''

''ஓ.கே. எரிச்சல்.''

''ஸாரி. அப்ப நா ரொம்ப அப்செட் ஆகியிருந்தேன் மீரா.''

''எனக்குப் புரியறது. நா எப்ப அப்பாவைப் பார்க்க வரட்டும்?''

''கார்த்தாலே. டிரைவர் வந்த உடனே வா. அப்பாவுடைய ப்ரஷ், டூத் பேஸ்ட், ஒரு மாத்து உடுப்பு எல்லாம் கொண்டுவா. ஏதாவது சாப்பிட்டுட்டு வா. நீ இங்கேயே இருக்க வேண்டியிருக்கும். நா வீட்டுக்குப் போய் மத்தியானம் வரேன்.''

''ஃபைன். நீ எங்களைப் பத்திக் கவலைப்படாதே அம்மா. தைர்யமாயிரு. அப்பாவுக்குச் சரியாயிடும்.''

அம்மா சற்று நிதானித்து, ''பகவான் இருக்கார்'' என்றாள்.

''மாடி, கீழ்க் கதவையெல்லாம் சரியாத் தாழ்ப்பாள் போட்டுக்கணும் மீரா. ரொம்ப நேரமா போன் பண்ண முயற்சி பண்றேன். என்னவோ லைனே கிடைக்கல்லே.''

மறுபடி மறுபடி 'ஜாக்கிரதை ஜாக்கிரதை' என்று சொல்லி விட்டு அம்மா போனை வைத்தபோது, மனசின் பாரம் சற்று குறைந்து போனது போல் இருந்தது. ஆனால் அப்பா இன்டென்ஸிவ் கேரில் இருக்கிறார் என்பது வயிற்றைக் கலக்கிற்று. ஆண்டவனே இந்த ஊர் டாக்டர்கள் அப்பாவைச் சரியாக் கவனிக்கணுமே என்றிருந்தது. பகவான் அனுக்கிரகம் வேணும் என்கிறாள் அம்மா. நம்பிக்கை வேண்டும் என்கிறான் ஹரி. இரண்டும் கிட்டத்தட்ட ஒன்றுதான் என்று தோன்றிற்று. இரண்டின் தாத்பர்யமும் விளங்காமல் குழம்பிப் போயிற்று.

மாடிக் கதவையெல்லாம் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, உடுப்பை மாற்றிக் கொண்டு, கீழே வந்து, எல்லாக் கதவுகளையும் பரிசோதித்து விட்டு மஹேஷைக் கீழே இருந்த அப்பா, அம்மாவின் படுக்கை மீது கிடத்தினாள். விளக்கை அணைத்து அவன் அருகில் படுத்ததும் தலையணையில் அப்பாவின் வாசனை வந்தது.

தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள இயலாமல் தலையணையில் முகம் புதைத்து விசும்பினாள். ''ஒரு நாளைக்கு உன்னோடு நிறையப் பேசணும்மா'' என்று அவர் சொன்னது நினைவுக்கு வந்தது. பேசுவதற்குச் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடுமோ என்று பயம் ஏற்பட்டது. எத்தனையோ ரகசியங்களை அவர் மனசில் பதுக்கியிருப்பார் என்று தோன்றிற்று. அதுவே ஹார்ட் அட்டாக்காகப் பரிணமித்திருக்கும். என்னைப் பற்றி நிறையக் கனவுகளை வைத்திருப்பவர். என் சக்திக்கு உட்பட்டதை நிறைவேற்றுவேன். சாமி அவரைக் காப்பாத்து....



வாஸந்தி

காலையில் அழைப்பு மணி பலமாக ஒலித்ததும் அலறி அடித்துக் கொண்டு எழுந்தபோது அப்பாவும் அம்மாவும் வீட்டில் இல்லை என்று ஞாபகம் வந்தது. ஓடிச்சென்று வாசற் கதவைத் திறந்தாள். வீட்டு வேலை செய்யும் அம்புஜமும் பால்காரச் சிறுவனும் நின்றிருந்தார்கள்.

''அம்மா வீட்டிலே இல்லையா?'' என்றபடி உள்ளே நுழைந்த அம்புஜத்திடம் ''இல்லே'' என்று மட்டும் சொல்லி விட்டு எத்தனை பாக்கெட் பால் வாங்குவது என்று புரியாமல், சிறுவன் கொடுத்ததை வாங்கி ஃப்ரிஜ்ஜில் வைத்து, முகம் கழுவச் சென்றாள். காலையிலேயே தயாராகி ஆஸ்பத்திரிக்குக் கிளம்ப வேண்டும் என். கிற பரபரப்புடன் சமையலறைக்குச் சென்று, பாலைக் காய்ச்சி, மஹேஷை எழுப்பிப் பல் துலக்கச் சொல்லும் போது, இன்று தனக்குத் திடீரென்று ஒரு பொறுப்பு வந்து விட்டதை உணர முடிந்தது. அம்புஜத்தைத் துரிதப்படுத்தி, வேலையை முடிக்க வைத்து, மஹேஷையும் தயாராக்கிக் காலை உணவை இருவரும் முடித்த போது, அந்தப் பொறுப்பு மிக இயல்பாக அவள் மேல் அமர்ந்தது போலிருந்தது.

அவள் எதிர்பார்த்ததை விட ஆஸ்பத்திரி துப்புரவாக இருந்தது. ''ரொம்ப பினைல்' என்று மஹேஷ் மூக்கைச் சுருக்கினான். அப்பாவைப் பற்றின கவலை அவனது கண்களில் நிழலாடுவதைக் காலையில் கண்டு, அவனையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வர வேண்டியது அவசியம் என்று தோன்றிற்று. அமெரிக்காவை விட்டு வந்ததையே இன்னும் அவன் ஜீரணித்துக் கொள்ளவில்லை என்பதைத் தான் ஒருத்தியே புரிந்து கொண்டிருப்பதாக அவள் நினைத்தாள். காட், அப்பாவுக்கும் ஏதாவது ஆகிவிட்டால் தொலைந்தோம். அந்த எண்ணத்தை மனத்திலிருந்து அகற்றும் நோக்கத்தில் தலையை உகப்பிக் கொண்டு, இன்டென்ஸிவ் கேர் யூனிட்டைத் தேடிக் கொண்டு போகையிலேயே எ தி ர் த் தா ற் போல் அம்மா வந்தாள். இரவு முழுவதும் தூங்காத சோர்வு முகத்தில் தெரிந்தது. கண்களைச் சுற்றிப் புதிதாக ஒரு கரு வட்டம் தெரிந்தது.

''அப்பா எங்கே?'' என்று மஹேஷ் பீதியுடன் கேட்டான்.

அவனுடனேயே சேர்ந்து ''எப்படி இருக்கார்?'' என்றாள் மீரா.

''எனக்குச் சொல்லத் தெரியல்லே மீரா'' என்றாள் அம்மா துயரத்துடன். ஒரு கையால் மஹேஷை அணைத்து அவன் தலையை வருடி, ''ஸ்டேபிலா இருக்கார்' என்கிறார் டாக்டர்'' என்றாள். ''இப்படியே இருந்தா ஆபத்தில்லையாம். இப்பத் தூங்கறார். நீ இங்கேயே இரு. மத்தியானம் உனக்குச் சாப்பாடு எடுத்திண்டு வரேன். காலையிலே ஏதாவது சாப்பிட்டியோ?''

மஹேஷ் அப்பாவைத் தேடிக் கொண்டு லேசாகத் திறந்திருந்த ஒரு கதவின் வழியாகப் பார்ப்பதையும் அவன் முகம் கலவரப்பட்டுப் போனதையும் மீரா கவனித்தாள். விரைந்து அவனருகில் சென்றபோது, திறந்த கதவின் வழியாக அப்பா படுத்திருந்த கட்டில் தெரிந்தது. உடம்பு முழுவதும் ஒயர்கள் பொருத்தப்பட்டு பக்கத்தில் மானிட்டர் துள்ளிக் கொண்டிருந்தது. லேசாக உதடு பிரிய மூச்சு விட்டபடி அப்பா கண் மூடிப் படுத்திருந்தார். அவள் மஹேஷின் தோளில் கையை வைத்து, ''அப்பா தூங்கறார். இப்பத் தொந்தரவு செய்யக் கூடாது'' என்றாள் மெல்ல. ''நீ அவரைப் பார்க்க வந்தேன்னு நா சொல்றேன்.''

''இஸ் ஹி ஓ.கே?'' என்றான் அவன் சந்தேகத்தோடு.


''சரியாயிடுவார். நாளைக்கு நீ வரும் போது பேசுவார்'' என்று அவள் சமாதானப் படுத்தியும் கண்களில் சந்தேகம் நிழலாடிற்று.

அம்மாவும் மஹேஷூம் சென்றதும் அவள் அப்பா படுத்திருந்த கட்டில் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். யூனிட்டில் நிலவிய மௌனம் பீதியளித்தது. ஏழெட்டு நோயாளிகள் அப்பாவைப் போலவே ஏக ஒயர்கள் சூழப் படுத்திருந்தார்கள். மானிட்டர்களில் தென்பட்ட சலனத்தைத் தவிர எந்தச் சலனமும் இல்லை. அவளைப் போல் அமர்ந்திருந்தவர்கள் கூட உறைந்து போனவர்கள் போல் இருந்தார்கள். பயம் என்பது ஒரு தத்ரூபமான விஷயம் என்று தோன்றிற்று. மரணம் என்பது புதிராக இருப்பதாலேயே மற்ற எல்லா பயங்களைவிட இது பயங்கரம் என்று தோன்றிற்று. 'மேலே சித்திரகுப்தன் கணக்கிலே நமக்கு எத்தனை நாள்னு எழுதியிருக்கோ அத்தனை நாள்தான் நாம ஜீவிக்க முடியும். ஒரு மணி நேரம் கூட இருக்கேனென்னாலும் முடியாது' என்று ஒரு நாள் பாட்டி சொன்னபோது அது ஹாஸ்யம் போல் இருந்தது. இன்று பல விதப் பரிமாணங்களுடன் அச்சுறுத்திற்று. சித்திரகுப்தனின் ஏஜெண்ட் எந்த நிமிஷமும் இந்த யூனிட்டில் அமானுஷ்யமாய் நுழையலாம் என்று எல்லாரும் பயப்படுவது போல் இருந்தது.

அப்பா கண்ணைத் திறந்தார். அவள் விருக்கென்று எழுந்து, ''ஹாய், டாட்!'' என்று லேசாகப் புன்னகை செய்தாள்.

ரேஷன் கார்டு போலி; கண்டுபிடிப்பதே ஜோலி!

''நீங்கள் ரேஷன் கார்டு வைத்திருப்பவரா? அப்படியானால், உங்கள் ரேஷன் கார்டுக்காக ஒவ்வொரு மாதமும் அரசு அறுபது ரூபாயை மான்யமாக வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்!'' என்கிறார் வடார்க்காடு மாவட்ட வழங்கல் அதிகாரி தனவேல்.



''கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் வடார்க்காடு மாவட்டத்தில் 50,000 போலி ரேஷன் கார்டுகளைக் கண்டுபிடித்திருக்கிறோம். ஆக, இந்தப் போலி ரேஷன் கார்டுகளால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் என்பதை நீங்களே கணக்குப் போட்டுப் பாருங்கள்!'' என்கிறார்.

''போலி ரேஷன் கார்டுகளே அரசியல்வாதிகளின் செல்வாக்கால்தான் வருகிறது என்கிற நிலையில், உங்களின் பணிக்குக் குறுக்கீடுகள் வருமே?'' என்று கேட்ட போது, ''ரேஷன் கடைகளில் ஒழுங்கீனங்கள் நடந்தால், அது ஆட்சியிலுள்ள உங்களுக்குத்தான் கெட்ட பெயரைச் சம்பாதித்துத் தரும்; அதனால் இதில் நீங்கள் தலையிடாமல் இருப்பதே நல்லது! என்று உண்மையை விளக்கும் போது, தப்பித் தவறிச் சிபாரிசுக்கு வரும் அரசியல்வாதிகளும் பூரண ஒத்துழைப்புத் தருகிறார்கள்!'' என்கிறார் தனவேல்.

அவரது உலர்ந்த அதரங்களில் மெலிதான புன்னகை மலர்ந்தது. ''ஹாய்! அம்மா எங்கே?'' என்றார் மெல்லிய குரலில்.

''அம்மா வீட்டுக்குப் போயிருக்கா. மத்தியானம் வருவா. அதுவரை நா இருப்பேன். ஹௌ ஆர் யூ டாட்?''

தன்னைச் சூழ்ந்திருந்த ஒயர்களையும், மானிட்டரையும் பார்த்து, பலவீனமாகச் சிரித்தார்.

''என்ன ஆச்சு உங்களுக்கு, திமர்னு? முந்தா நாள் கூட தோட்டத்தைக் கொத்திண்டிருந்ததை நா பார்த்தேனே?''

''திடீர்னு வரல்லே'' என்றார் அவர் மெல்ல. ''எனக்கு இந்த மாதிரி அமெரிக்காவிலே ஒரு தடவை வந்தது.''

''எப்ப? எனக்குத் தெரியவே தெரியாதே?'' என்றாள் அவள் வியப்புடன்.

''நீங்கள் எல்லாம் இந்தியாவுக்கு வந்திருந்தபோது. நா தனியா இருந்தேன். இருபது நாள் ஆஸ்பத்திரியிலே இருந்தேன். யார் கிட்டயும் சொல்லல்லே. உங்கம்மாகிட்ட கூட மெள்ளத்தான் சொன்னேன்.''

''ஏன்?''

''பயந்துருவான்னுதான்... நானே பயந்து போனேன், தனியா இருந்ததாலே. நிஜம்மாவே திசை புரியாத இருட்டிலே இருக்கிற குருடன் மாதிரி இருந்தது.''

''உடனே எங்களை வரவழைக்கிறது தானே?''

''அட்ரெஸ் புக் டெலிபோன் நம்பர் எல்லாம் வீட்டிலே இருந்தது. என் சிநேகிதன் காண்டாக்ட் பண்ணப் பார்த்தான். நீங்கள்ளாம் ஊர் ஊராப் போனதாலே முடியல்லே. நானும் முயற்சி பண்ண வேண்டாம்னு சொல்லிட்டேன். ஆஸ்பத்திரியிலே ரொம்ப நல்ல கவனிப்பு இருந்தது.''

''அமெரிக்காவை விட்டு நீங்க வந்திருக்கக் கூடாது '' என்றாள் அவள் வருத்தத்துடன். ''அங்கே இருக்கிற வசதி இங்கே இருக்காது.''

''இங்கே இருக்கிற வசதி போதும்'' என்றார் அவர் பலவீனமாக. ''இங்கே இருட்டிலே நிற்கிற மாதிரி இல்லே. நம்ம மனுஷா நிறைய இருக்கா, ஓடி வந்து உதவி செய்ய.''

''பாட்டியும் தாத்தாவும் வரேன்னு சொன்னா. நேத்து நா போன் பண்ணினேன்.''

அவளை அவர் வியப்புடன் பார்த்துப் பிறகு கண்ணை மூடிக் கொண்டார். கண்களின் ஓரத்தில் கண்ணீர்த் துளி கட்டி நின்றது. அவள் அவர் கண்ணைத் தன் கைக்குட்டையால் துடைத்து, ''ரிலாக்ஸ் டாட்'' என்றாள். ''நீங்க அதிகம் பேசக் கூடாதுன்னு நினைக்கிறேன்.''

ஒரு முறை உடம்புக்கு வந்ததால் பயந்து கொண்டு இவர் இந்தியாவுக்கு மூட்டை கட்டிக் கொண்டு வந்தது இப்பவும் அவளுக்கு அபத்தமாகப் பட்டது.

''பேசறது சிரமமாயில்லே'' என்றார் அவர் மெள்ள. ''உங்கிட்ட நிறையப் பேசணும் மீரா. என்னைப் பேசவிடு.''

அவள் கவலையுடன் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

(தொடரும்)

வடார்க்காடு மாவட்ட கலெக்டர் ராமசுந்தரம், இப்போது அதிதீவிரமாக இறங்கியிருப்பது சிறுசேமிப்புக்கான குறியீட்டை அடைவதில்தான். ''கடந்த பத்தாண்டுகளாகவே இந்த மாவட்டம் சிறு சேமிப்புக்கான குறியீட்டை எட்டவில்லை. குறியீட்டை அடையும் ஒவ்வோர் ஆண்டும் அந்த மாவட்டத்திற்கு 75 லட்ச ரூபாய் கிடைக்கும். அந்த வகையில் பார்த்தால், கடந்த பத்தாண்டுகளில் இந்த மாவட்டத்திற்கு ஏழரைக் கோடி ரூபாய் நஷ்டம். அது கிடைத்திருந்தால் எவ்வளவோ பணிகளைச் செய்திருக்கலாமே! அதனால்தான் அதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறேன்!'' என்கிறார் ராமசுந்தரம்.

அடுத்தது மக்களின் வாழ்க்கைத் தரம். ''இந்த மாவட்டத்தில் நடக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூலமாக அறுநூறு கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆனால், அதில் முதலாளிகள்தான் பயனடைகிறார்களே



வைத்தியாசமான

தவிர, அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் தரம் அப்படியேதான் இருக்கிறது என்பது ஆச்சரியமான விஷயம். இதற்கும் ஒரு வழி கண்டாக வேண்டும்!'' என்கிறார்.

''இதற்கெல்லாம் மூலகாரணம் எழுத்தறிவின்மை. இந்தக் குறை நீங்கும்போதுதான் தங்களைத் தாங்களே புரிந்துகொண்டு செயல்படுகிற ஆற்றல் மக்களுக்கு உருவாகும் என்பதால் அந்தத் திட்டத்திலும் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறோம்'' என்கிறார் கலெக்டர்.

''வேலூரிலுள்ள சில சினிமாத் தியேட்டர்களில் பணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு - டிக்கெட்டே கொடுக்காமல் மக்களை அனுமதித்துக் கொண்டிருந்ததைக் கடந்த தீபாவளியின் போது நீங்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்த பிறகு சரியாக நடந்ததாகவும், இப்போது மீண்டும் அந்த ஏமாற்று வேலை ஆரம்பமாகியிருப்பதாகவும் சொல்கிறார்களே?''

''அவ்வப்போது நாங்கள் சோதனை விட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். இருப்பினும் மக்களின் ஒத்துழைப்பில்லாமல் இதை முழுமையாக ஒழிக்க முடியாது. படித்தவர்கள் கூட தியேட்டரில் டிக்கெட் வேண்டுமென்று கேட்டுப் பெறாமல் அமைதியாகப் படம் பார்த்து விட்டு வந்தால் நாம் என்ன செய்ய முடியும்? ஆயினும் இப்போது பரவாயில்லை. டிக்கெட் கொடுக்காத சமயங்களில் ஒரு சிலர், 'டிக்கெட் கொடுக்கிறீர்களா, இல்லை கலெக்டருக்குப் போன் செய்யவா?' என்று கூடத் தியேட்டர்களில் கேட்பதாக அறிகிறேன். இந்த விழிப்புணர்ச்சியைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். எந்த நடவடிக்கைக்கும் முழுமையான பயன் ஏற்படச் செய்வது இந்த விழிப்புணர்ச்சிதான்!''

முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் மாவட்டம் இது என்பதால், மற்ற மாவட்டங்களை விட இங்கு பிறப்பு விகிதம் சற்று அதிகம் என்பதில் கலெக்டருக்குச் சற்று வருத்தம்தான். ஆனாலும் அந்த வருத்தம் அவரது சுறுசுறுப்புக்கு இடைஞ்சலாக இல்லை என்பதற்கு ஓர் உதாரணம், நெடுஞ்சாலை விஷயத்தில் அவர் காட்டிய சமயோசிதம்.

சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ் சாலை வேலூருக்குள் நுழையும் இடத்தில் ஒரு சிறு பாலம் அமைக்க வேண்டும். அதற்குச் சுமார் ஐந்து லட்சம் அளவுக்குத் தான் செலவு பிடிக்கும் என்றாலும், தங்களது திட்டத்தில் அப் பாலத்திற்கு அனுமதியில்லை என்று சொல்லிப் பாலம் கட்ட வேண்டிய இடத்தை அப்படியே போட்டு விட்டுப் போய் விட்டார்கள், நெடுஞ்சாலைத் துறையினர்.

அது பற்றித் தில்லிக்குத் தகவல் அனுப்பி விட்டால் உடனே நடந்து விடுமா என்ன? பாலம் இல்லாததால் போக்கு வரத்து மிகவும் பாதிக்கப்பட்டது. பார்த்தார் கலெக்டர். நகராட்சியிடமிருந்து சிமெண்ட் குழாய்களைக் கேட்டுப் பெற்றார். மாணவர்களைத் துணைக்கு அழைத்தார். அவ்வளவுதான்.குழாய்களை அடுக்கி, அதன் மேல் ஜல்லியையும் மண்ணையும் போட்டு, இணைப்பின்றிக் கிடந்த நெடுஞ் சாலையைத் தாற்காலிகமாக இணைத்துப்

கலெக்டர்!

போக்குவரத்துக்கு வழிசெய்து விட்டார்!

''இதற்குக் கூட மாணவர்கள்தான் அதிக அளவில் வந்து உதவினார்களே தவிர, பெரியவர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டி வரவில்லை என்பதுதான் சங்கட மாக இருக்கிறது'' என்கிறார்.

வடார்க்காடு மாவட்டத்தில் சுற்று லாத் தலங்கள் என்று பெரிதாக ஏதும் இல்லையென்றாலும் இருக்கிற இடங் களைப் பிரபலப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறார் கலெக்டர். ஏலகிரி மலை வாசஸ்தலம் தவிர, காவேரிப்பாக்கம் ஏரி யில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் துடன் இணைந்து உல்லாசப் படகுச் சவா ரிக்கான வசதிகள் செய்யப்பட்டு வருகின் றன. ''கூட்டத்தைப் பொறுத்து, அங்கே தங்குவதற்கான காட்டேஜ் வசதி போன் றவை படிப்படியாக அமைக்கப்படும்'' என்கிறார். இவை தவிர, வடார்க்காடு மாவட்டத்தில் பிக்னிக் செல்லுவதற்கு ஏற்ற இடமாக இருப்பது அம்ருதி நீர் வீழ்ச்சி.

வேலூருக்கு அருகிலுள்ள கரிகிரி கிராமத்தில், மெருகிட்ட மண்பாண்டம் செய்யும் ஒரு புராதனக் கலை அழியும் நிலையில் இருப்பதை எடுத்துச் சொன்ன போது, தம்மால் ஆனதைச் செய்வதாகக் கூறினார்.


இதே போல் பீடித் தொழிலாளர்களின் நிலை. அவர்கள் தங்கள் குழந்தைகளை ஆயிரம், இரண்டாயிரத்திற்கு பீடி முதலாளி களிடம் அடகுவைக்கும் நிலை இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் குறிப் பிட்ட போது, ''பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரை கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து பீடித் தொழிலை ஆரம்பித்தால் அவர்களுடைய பிரச்னைக்குத் தீர்வு கிடைக்குமென்று நம்பு கிறேன். அதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்'' என்றார்.

அப்புறம் இளைஞர்கள். ''சாதாரண மாக எல்லா இளைஞர்களுமே அரசாங்க வேலை கேட்டுத்தான் வருகிறார்கள். அது வும் பட்டப் படிப்புப் படித்து விட்டால் போதும், அதுவே ஒரு பெரிய தகுதி என்று வருகிறார்கள். அவர்களெல்லாம் ஏன் சுய தொழில் பற்றிச் சிந்திக்கக் கூடாது? எல் லோருக்கும் அரசு வேலை அல்லது நாற் காலி வேலை என்பது எப்படிச் சாத்தியம் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதே யில்லை. அவர்களுக்கெல்லாம் என் னையே ஓர் உதாரணமாகச் சொல்கிறேன்... நான் எம்.எஸ்ஸி. முடித்து விட்டுப் போதும் என்று நினைத்திருந்தால், எனக்கு வேலை கிடைத்திருக்குமா என்பது கூடச் சந்தேகம்தான். இதை உணர்ந்துதான் நான் ஐ.ஏ.எஸ். எழுதி வெற்றி பெற்றேன். ஆக வேலையின்மையின் தீர்வு முயற்சியும் தன்னம்பிக்கையும்தான்!'' என்கிறார்.

கலெக்டருக்குப் பொது மக்களிடம் தான் நல்ல பெயர் என்பதல்ல. சக ஊழி யர்களிடமும் நல்ல பெயர். காரணம், ஊழி யர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கூடும் 'ஆபீ ஸர்ஸ் கிளப்' என்பதை மாற்றி, 'எம்ப் ளாயீஸ் ரெக்ரியேஷன் சென்டர்' என்று பெயரிட்டு, அதில் அலுவலக உதவியாளர் வரை அனைவரையும் உறுப்பினராக்கி யிருக்கிறார். மாதத்தின் முதல் திங்கட் கிழமையன்று அனைவரும் ஒன்று கூடுகி றார்கள். அப்போது கலெக்டரும் அவரிடம் பணியாற்றும் பியூனும் ஒன்றாகப் பழகுகி றார்கள். கூச்சப்பட்டு விலகி நிற்பவர் களைக் கூடத் தம்மோடு சமமாகப் பழக வைக்கிறார்!

இதுவரை இருந்த எந்தக் கலெக்டரும் இப்படிப் பழகாததால் சக ஊழியர்களுக்கு ஏக மகிழ்ச்சி!

- இளங்கோவன்



வேலூர்: சிப்பாய்க் கலகத்தின் முன்னோடி!

வேல மரங்கள் நிறைந்திருந்த காட்டுப் பகுதியில் உருவான ஊர் என்பதால் இதற்கு வேலூர் என்று பெயர் வழங்கலாயிற்று. இன்று மாவட்டத் தலைநகராக விளங்கும் வேலூர் 1920-ல் கூட ஒரு கிராமமாகத்தான் இருந்திருக்கிறது. ஆமாம்; வேலூரிலுள்ள லாங்கு பஜாரில் 1920-ல் கட்டப்பட்டிருக்கும் மணிகோபுரத்தில், '1914 முதல் 1919 வரை நடைபெற்ற முதல் உலகப் போருக்கு இக்கிராமத்திலிருந்து 277 பேர் சென்றனர். அவர்களில் 14 பேர் தங்கள் உயிரை ஈந்தனர்' என்று பொறிக்கப்பட்டிருப்பதே அதற்குச் சான்று.

அப்போது கிராமம்தான் என்றாலும் வேலூரிலுள்ள கோட்டை மிகவும் பிரசித்தி பெற்றது. தென்னிந்தியக் கோட்டைகளிலேயே மிகச் சிறந்த ராணுவக் கட்டுமானத்தோடு கட்டப்பட்ட கோட்டை இது. 16-ம் நூற்றாண்டில் இதைக் கட்டியவர், விஜயநகரப் பேரரசைச் சேர்ந்த பொம்மி ரெட்டி.

பிற்காலத்தில் கோட்டை கர்நாடக நவாபுகள் வசமான போது, ராபர்ட் கிளைவ் சூழ்ச்சியால் மெல்ல மெல்ல வேலூர்க் கோட்டை ஆங்கிலேயரின் பாசறையாகி விட்டது!

நான்காம் மைசூர்ப் போரில் திப்பு சுல்தான் வீழ்ச்சியுற்ற போது, அவருடைய உறவினர்களைப் பிடித்து வந்து வேலூர்க் கோட்டையில் சிறைவைத்தனர் ஆங்கிலேயர்கள். அவர்கள் சிறைக்குள் சும்மா இருக்கவில்லை! சிப்பாய்க் கலகத்தைத் தூண்டி விட்டனர்! எப்படி?

1806 ஏப்ரல், மே மாதங்களில் வேலூர்க் கோட்டையிலிருந்த சிப்பாய்களுக்குப் புதிய சீருடையை அமல்படுத்தினர் ஆங்கிலேயர். ஆனால் வேலூர்ச் சிப்பாய்களுக்கு அதனை ஏற்க மனமில்லை என்பதால் அவர்களைக் கடுமையாக நடத்தினர் வெள்ளை அதிகாரிகள். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, திப்புவின் உறவினர்கள் வேலூர்ச் சிப்பாய்களின் மனத்தில் கிளர்ச்சி விதைகளைத் தூவி விட்டனர்!

அதன் காரணமாக 1806-ம் ஆண்டு ஜூலை 10-ம் தேதி உதயமாகிக் கொண்டிருந்த போது, கோட்டைக்குள்ளிருந்த பல வெள்ளை அதிகாரிகள், சிப்பாய்களால் கொல்லப்பட்டனர். கோட்டை புரட்சியாளர்களின் கைக்கு வந்து விட்டது. ஆயினும் புரட்சியின் நோக்கத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாததால், அல்லது வழிநடத்திச் செல்ல சரியான தலைமை இல்லாததால், இந்தியச் சிப்பாய்கள் புரட்சியை மறந்துவிட்டுக் கொள்ளையடிப்பதில் தீவிரம் காட்ட ஆரம்பித்தனர்.

இந்தச் சூழ்நிலையால், வெளியிலிருந்து வந்த ஆங்கிலேயர் படை இந்தியச் சிப்பாய்களைச் சுலபமாகக் கொன்று, புரட்சியை முறியடித்து வேலூர்க் கோட்டையில் தங்களாட்சிக்கு முழுமையாக வித்திட்டனர்.

ஆக, இந்தியாவில் 1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தின் முன்னோடி, வேலூரில் நடந்த சிப்பாய்களின் கலகம் தான்!

- சாங்கிருத்தியாயன்

உலகக்

உலகக் கோப்பை அரை இறுதி ஆட்டம்... ஐம்பத்தைந்தே ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தாலும், நியூசிலாண்ட் நம் ஆட்களை ஆட விடாமல் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. ஸ்ரீகாந்திலிருந்து ஆரம்பித்து ஸ்ரீநாத் வரை ஆடியும் இருபதுக்கு மேல் ரன்கள் அசைந்து கொடுப்பதாக இல்லை. மார்டின் குரோவிடம் மாட்டிக் கொண்டு இந்தியா தவிக்க, இருப்பதோ ஒரு ஓவர். எடுக்க வேண்டியதோ முப்பத்தாறு ஓட்டம்...

இந்த கொடுமையான நிலையில் மைதானத்தில் 'பேட்'டும் கையுமாக, குஷியாகக் குதித்துக் கொண்டு குடியாத்தம் குப்பு சாமி (நான்தான் சார்!) நுழைகிறேன். ரசிகர்களின் ஏளனக் கூச்சல், கும்மாளங்கள். எப்படியும் நியூசிலாண்ட் ஜெயிப்பது உறுதி எனத் தீர்மானித்து, படம் முடியுமுன்பே முடிவை ஊகித்து விட்டு, தியேட்டரை விட்டு வெளியேறும் கூட்டம் போல் பலர் வெளியேற ஆரம்பிக்க, தீபக் படேல் வீசிய பந்தை, படேலென விளாசுகிறேன். கண் இமைக்கும் நேரத்தில் காணாமல் போன பந்து, எழுந்து செல்ல யத்தனித்த ஒருவரின் மண்டையைப் பதம் பார்க்க... ஆகா ஸிக்ஸர்!

தீபக் தொடையில் பாலிஷ் ஏற்றப்பட்ட அடுத்த பந்தையும் ஓர் அலட்சிய பாவத்துடன் தூக்குகிறேன். காட்டாறாய்ப் புரண்டு புறப்பட்ட பந்து போன இடம் தெரியவில்லை... அடுத்த ஆறு!

குரோ முகத்தில் ஈ ஆடவில்லை. வியூகத்தை மாற்றுகிறார். கிரேட் பேட்ச், லாதம், ஜோன்ஸ், ஸ்மித் எல்லோரும் என்னைப் பிடுங்கித் தின்னக் காத்திருக்கின்றனர். எல்லோர் முகத்திலும் மூன்றாம் பேஸ்து வழிய, அந்த மூன்றாவது பந்து நான் அடித்த அடியில் எங்கோ ஒரு மூலையில் போய் விழுகிறது. எல்லோரும் விரலை முதலில் மூக்கில் வைத்து, அடுத்தடுத்து நான் அடித்த ஸிக்ஸர்களுக்கு, நெற்றி, தலை என்று கையை வைத்துக் கொண்டே போய், கடைசிப் பந்தில் நான் அடித்த வின்னிங் ஸிக்ஸரில் முடியைப் பிய்த்துக் கொள்கின்றனர்!

நான், ஆறு பந்தில் முப்பத்தாறு அடித்ததில், அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா அட்டகாசமாக வெற்றிவாகை சூடுகிறது.

இங்கிலாந்துடன் இறுதி ஆட்டம்.

குடியாத்தம் குப்புசாமியான என் மேல் அபாரமான நம்பிக்கையில் ஓபனராக ஆடச் சொல்கிறார் அசார். அதற்குள் ஆஸ்திரேலியாவின் அத்தனை கிரிக்கெட் ரசிகர்களும் 'குப்புசாமி ரசிகர் மன்றம் ஆரம்பிக்காத குறைதான்...' ஸிக்ஸர் கிங் குப்பு', 'குப்பு - சூப்பர்மேன் ஆஃப் தி மேட்ச்', 'World cup says 'Take ME Kuppusamy'!' என்று எல்லாத் திசைகளிலும் பேனர்கள் பிடித்து ரசிகர்கள் குஷிப்படுத்த, நான் யாரையும் சட்டை செய்யாதவன் போல் மட்டையுடன் நிற்கிறேன்.

என்னைப் பார்த்ததில் வெலவெலத்துப் போன கிரஹாம் ஒருவித உதறலோடு வீசிய பந்து, அதே உதறலோடு என் மட்டையில் பட்டுத் தெறிக்க, ஓ...வென்று சுற்றிலும் சப்தம்... அட தெரிந்த கதைதானே,



கோப்பையிலே என் குடியிருப்பு!

ஸிக்ஸர் விழுந்திருக்கும் என்று அலட்சிய மாகத் திரும்பியவன், அதிர்ச்சியடைகி றேன். விழுந்திருப்பது ஸிக்ஸர் அல்ல, இரண்டு ஸ்டம்புகள்! எனக்குச் சாதகமாக அம்பயர் ஏதாவது சொல்வாரா என அல்ப பார்வை பார்க்கிறேன். 'ஒழிஞ்க போ கண் மறைவாய்' என்ற பாவனையில் அம்பயர் என்னை நோக்க, புஸ் புஸ் என்று பெரு மூச்சு விட்டபடி பெவிலியனை நோக்கி நகர்கிறேன். . அசார் என்னை அடிக்காத குறையாக முறைக்கிறார். கபில் முகம் கடுப்பேறுகிறது. என் மேல் இருக்கும் ஆத்திரத்தைப் பந்தின் மேல் எல்லோரும் காட்டியதில் ரன்கள் குவிகின்றன.



இங்கிலாந்துக்காரன் என்ன இளிச்ச வாயனா சொல்லுங்கள். மடமடவென அவர்களுக்கும் ரன்கள் குவிய, ஒரே ஒரு ரன் எடுத்தால் வின் என்கிற நிலைமை. வீழ்த்த வேண்டியதோ ஆறு விக்கட்டுக்கள். விக் கித்துப் போய் வீசிக் கொண்டிருக்கும் ராஜுவிடம் போய்ப் பந்தைப் பறித்துக் கொள்கிறேன். அடுத்த ஓவரை காடு வெட்டி மீசைக்கார முனியையும் (எங்க ஊர் காவல் தெய்வம்) பாக்யம் பக்கிரி பெற்ற சனி யையும் (என் தர்மபத்தினி) நினைத்தபடி ஆரம்பிக்கிறேன். ஒரு துளி ரன்தானே என்ற அலட்சியத்தில் ரீவ் நிற்க, என் பந்து அவரை நோக்கிப் பறக்க, அரக்கப் பரக்க அதை அவர் தடுக்கத் தடுமாறியதில் 'கிளீன்-போல்ட்'. 'பாத்தீங்களா பாத்தீங்களா' என்று என் டி-ஷர்ட்டின் தம்மாத்தூண்டு காலரை எடுத்து விட்டுக் கொண்டு நான் நிற்க, சக ஆட்டக்காரர்கள் என்னிடம் வந்து இரு கைகளையும் விரித்துக் கும்மி அடித்து விட்டுப் போகிறார்கள்.

அடுத்தது லூயிஸ்! ஃபாஸ்டா, ஸ்பின்னா, என்னவென்று இனம்காண முடி யாத என் பந்தை எதிர்கொண்ட லூயிஸ், எக்குத் தப்பாகத் தூக்க நானே ஓடி வந்து லபக்கென்று கவ்வுகிறேன். விண்ணே அதிர் கிறது - அத்தனை உற்சாகச் சப்தங்கள்... திரும்பவும் எல்லோரும் வந்து கும்மியடிக் கிறார்கள்.

ஸ்மால் வந்து நின்றவுடன் டமால்...!

திரும்பவும் கும்மி!

இல்லிங்வொர்த் வந்து நின்ற போது ஃபீல்டிங் பற்றி யாரும் கவலைப்படாமல் கும்மியடிக்க என்னைச் சுற்றிக் குழுமி விட்டனர். அடித்தும் ஆயிற்று.

அகிலா கார்த்திகேயன்



''தலைவர் ரொம்ப சந்தேகப் பேர் வழியா இருக்காருப்பா....''
''எப்படிச் சொல்றே...?''
''குண்டு துளைக்காத மேடை அமைச்சிருக்கோம்னு சொல்லியும் ஏ. கே. 47 கொண்டு போய் டெஸ்ட் பண்ணுங்கறாரு!''
- எம். ஜே. ஆர்.

பரமபதசோபன ஆட்டத்தில் ஒரே ஒரு தாயம் விழாதா எனத் தத்தளிக்கிற கணக்காய், இங்கிலாந்துக்காரர்களை இழுத்தடித்துக் கொண்டிருந்தேன்.

செமை உதறலுடன் டிஃப்ரெட்டஸ் கடைசி ஆளாக வந்து நிற்கிறார். ஆனாலும் விக்கட் கீப்பர் கிரன்மொரேவுக்கு இப்படி ஓர் அலட்சியம் ஆகாது. பின்னே என்ன கையுறைகளைக் கழற்றி எறிந்து விட்டு, விக்கெட்டைக் காக்காமல் அவருமா கும்மியடிக்க என்னிடம் வந்து நின்று கொள்ள வேண்டும்? இந்த சூப்பர் அலட்சியத்தில் டிஃப்ரெட்டஸ் கருண்டிருக்க வேண்டும்... அதனால்தானோ என்னவோ என் பந்து பாதி தூரத்தில் பறக்கும்போதே பீதி யடைந்தவராய் ஒரே ஓட்டம் எடுத்து விடுகிறார், பெவிலியனை நோக்கித்தான்!

ஆக... உலகக் கோப்பை இந்தியாவின் கையில்... என் கையில் இந்தியா!

சீக்ரெட் ஆப் மை எனர்ஜி எது என்று புரியாத ஜனத்திரள், மைதானத்தில் மொய்க்க, நான் சிக்கிக் கொண்டு தவிக்கையில், யாரோ இங்கிலாந்து அனுதாபி என் மண்டையில் ஏதாலோ தாக்க, ''ஆ ஐயோ.. மண்டை, மண்டை போச்சு'' என்று அலறியபடி திடுக்கிட்டு எழுகிறேன்.

சேரில் உட்கார்ந்தபடி டீ.வி. பார்த்துக் கொண்டே கண் அயர்ந்து விட்ட என்னை நிஜமாகவே தாக்கி விட்டுக் கீழே விழுந்திருந்த அந்த வஸ்துவைப் பார்க்கிறேன். கரண்டி! 'போலர்' பூமா அடுப்படியிலிருந்து கத்துவது காதில் விழுகிறது.

''ராத்திரி பன்னிரண்டு மணி, விடிகார்த்தால மூணு மணின்னு என்ன எழவு கிரிக்கெட்டோ தெரியலே எப்பப் பார்த்தாலும்... இதிலே பித்தம் தலைக்கேறி தூக்கத்திலே பெனாத்தல் வேறயா...! சகிக்கலை...! எழுந்து பல்லைத் தேய்ச்சிட்டுப் போய், பாலை வாங்கிட்டு வர்ற வழியைப் பாருங்க.''

அடிப்பாவி! இந்தியனைக் கனவு காணக் கூட விட மாட்டேன் என்கிறாயே!

பொறுப்புணர்வுடன் ஒரு பட்டியல்!

முழு உண்மை!

◆ பட்ஜெட்டை மேலோட்டமாய்ப் பார்த்தால் ஜோரான 'பட்ஜெட்டாகத் தெரியும்; கூர்ந்து கவனித்தால் 'ஜோக்கான' பட்ஜெட்டாகத் தெரியும் என்று கூறிய தலையங்கம் முற்றிலும் உண்மை.

பொள்ளாச்சி - 2, ஏ. சி. பிரபு.

சூப்பர்ச் சிரிப்பு!

◆ அசாருதீன் உலகக் கோப்பை பற்றிய கார்ட்டூன் சூப்பர்ச் சிரிப்பை வரவழைத்தது!

விஜயமங்கலம், குணசீலன்.

சாதனை தொடர்கிறது...!

◆ 'ஒன்பது மாதங்களில் ஒரு டஜன் துப்பாக்கிச் சூடுகள்' என்ற தலைப்பில் ப்ரியன் எழுதிய செய்தித் துணுக்குகளை இவ்வாரக் கல்கியில் படித்தேன். விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்ியது; காவிரி நீர்ப் பிரச்னையில் நிலையான கொள்கையில் தீர்மானமாகப் பேசுவது; மத்திய அரசிடமிருந்து தேவையான நிதி உதவியை வாதாடிப் பெற்றுத் தந்தது. இப்படி பல விஷயங்களில் ஜெ. யின் சாதனை தொடர்ந்து கொண்டுதான் வருகிறது.

இலால்குடி, எம். இராஜேந்திரன்.

இதுதான் பொறுப்புணர்வு!

◆ ''ஜெ''யின் ஒன்பது மாத ஆட்சியில் பன்னிரெண்டு முறை துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது என்பதைப் பட்டியலிட்டுக் காட்டியது கல்கியின் பொறுப்புணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கொணவட்டம், கே. ஆர். தேவேந்திரன்.

ஓவியப் போட்டியா?

◆ ஓவியர்களுக்குள் ஏதேனும் போட்டி வைத்துள்ளீரா, ஒவ்வோர் ஓவியமும் போட்டி போட்டுக் கொண்டு மனத்தில் இடம்பிடிக்கின்றனவே!

தேத்தாகுடி தெற்கு, எஸ். தேவேந்திரன்.

காப்பியடித்த ஜோக்!

◆ 25-31 அக். 91 குங்குமத்தில், உபாத்தியாயரும் மாணவப் பையனும் பேசுவதாக நான் எழுதிய ஜோக்கை அப்படியே காப்பியடித்து, 15.3.92 கல்கியில் (பக்கம் 60) எழுதியிருக்கிறார் இ. ராஜு என்பவர்.

பெங்களூர் - 47, டி. பார்த்திபன்.

கவனிக்க வேண்டியவை!

◆ ''ஜெயிப்பதற்காக ஆடும் போது உத்வேகம் அதிகரிக்கிறது. ஏற்கெனவே வென்றுள்ள பட்டத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணத்துடன் ஆடும் போது, அந்தக் கவலையே ஆட்டத்தைப் பாதிக்கிறது'' என்ற நியாஸ் ஷாவின் கூற்றில் இன்றைய இளம் ஆட்டக்காரர்கள் கவனிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன!

மொரட்டுப்பாளையம், கே. கஸ்தூரி.

நான்கும் அற்புதம்!

◆ அசோக்ராஜாவின் மௌன விலங்கு, திருவையாறு பாலுசாமியின் ஆளில்லாத் தீவு, திருவாரூர் பாபுவின் மாநூல் மாணிக்கம், சோம. வள்ளியப்பனின் மனஊஞ்சல் ஆகிய நான்கு கதைகளுமே ஒவ்வொரு விதத்தில் சிறப்பாக இருந்தன. இந்த நான்கு எழுத்தாளர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

சென்னை - 91, கண்ணன் மகேஷ்.

பயனுள்ள டிப்ஸ்!

◆ முதுகு வலிக்கு முன்னெச்சரிக்கையாகத் தாங்கள் கொடுத்த 'டிப்ஸ்' மிகவும் பயனுள்ளதாக இருந்தது!

முத்துப்பேட்டை, தஞ்சைத்தரணியன்.

இந்தக் காலத்திலும் இப்படி...

◆ இரண்டு ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் செய்து விட்டு, விளம்பரத்தினாலேயே புகழைத் தேடிக் கொள்ளும் இந்தக் காலத்தில், எழுநூறுக்கும் மேற்பட்டோருக்கு மணவாழ்வை அமைத்துத் தந்திருக்கும் The Social Aid Charitable Trust அமைப்பை மனம் திறந்து பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

கடலூர், அனில்ப்ரியா.

ஒரு யோசனை!

◆ அரசாங்கம், மாதச் சம்பளம் பெறுகிற அரசு ஊழியரிடம் ஆண்டு வருமானத்தைக் கணக்கிட்டு, ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் வருமான வரியைச் செலுத்தினால்தான் சம்பளம் என்கிற கெடுபிடியை வைத்திருக்கிறது. ஒன்று - அரசாங்கமே நிர்ணயித்துக் கொடுக்கிற சம்பளம் என்பதால் அரசு ஊழியர்களுக்கு வருமான வரியிலிருந்து முழு விலக்களிக்க வேண்டும். அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையை வருமான வரியாக மாதா மாதம் பிடித்தம் செய்திட வேண்டும். ஒட்டுமொத்தமாக ஒரே மாதத்தில் நூற்றுக்கணக்கான ரூபாய்களை வருமான வரியாகவோ, சேமிப்புப் பத்திரங்கள் மூலமோ செலுத்துவதென்பது மிகுந்த கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

கெங்கவல்லி, பூங்குழலி.

திரும்பிப் பார்க்கிறேன் - 26

புரட்சித் தலைவர் நடிக்கப் பொருத்தமான கதை!

டான்ஸ் மாஸ்டர் தங்கப்பனிடம் அன்று உதவியாளராகப் பணியாற்றி, இன்று புகழ் ஏணியின் உச்சியில் இருப்பவர்:

கமல்ஹாசன்!

முதல் சஸ்பென்ஸை உடைத்தாகி விட்டது. இனி இரண்டாவது சஸ்பென்ஸுக்கு வருகிறேன்.

எம். ஜி. ஆரை வைத்துப் படம் டைரக்ட் செய்ய வேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆசை. ஆனால் சரியான கதை சிக்காமல் தள்ளிக் கொண்டே போனது. ஒரு கட்டத்தில் புரட்சிகரமான கருத்துக்கள் கொண்ட ஓர் இளைஞனின் கதை மனத்தில் துளிர் விட்டது. அது வளர்ந்து, வளர்ந்து ''அன்று சிந்திய ரத்தம்'' என்ற திரைப் படமாக என் மனத்தில் உருவெடுத்தது. அதில் ஹீரோவாக எம். ஜி. ஆர். நடித்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றும் கருதினேன்.

எம். ஜி. ஆரை அன்று வரை எனக்கு நேரடியாகப் பரிச்சயம் கிடையாது. 'யார் மூலம், எப்படி அணுகுவது?' என்று யோசித்தேன். கடைசியில், 'வந்தது வரட்டும்' என்று ஃபோனில் நேரடியாக நானே தொடர்பு கொண்டேன். அன்று புகழின் உச்சியில் இருந்த அவர், வெகு இயல்பாகவும் சகஜமாகவும் பேசி, தோட்டத்தில் தன்னை வந்து நேரில் சந்திக்குமாறு சொல்லி, தேதி நேரம் குறிப்பிட்டார்.

''நான் இயக்கவிருக்கும் படம் ஒன்றில் நீங்க நடிக்கணும்னு ஆசை.'' - குசலம் விசாரிக்கும்விதமாக மரியாதைக்குச் சில வார்த்தைகள் பேசியதும் இப்படி நேரடியாக விஷயத்துக்கு வந்தேன்.

''ஓ தாராளமாய் நடிக்கிறேனே'' என்றார்.

''கதை கூடத் தயாராகி விட்டது'' என்றதும், 'கதையைக் கூறலாம்' என்பது போல் தலையாட்டிப் புன்னகை புரிந்தார்.

'அன்று சிந்திய ரத்தம்' படத்தின் கதையை நான் கூறக் கேட்டு விட்டு, ''நல்ல கதை; என் கேரக்டரும் பிரமாதம்'' என்றார்.

நான் ரொம்ப சந்தோஷத்துடன் நன்றி கூறினேன். 'விஷயம் இவ்வளவு சுலபமாக முடிந்து விட்டதே' என்று அதிசயித்தேன். ''உங்கள் வசதிப்படி கால்ஷீட் கொடுங்கள்'' என்று கேட்டேன். அவர் எவ்வளவு பிஸியான நடிகர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தானே. சம்பிரதாயப்படி 25,000/- ரூபாய்



அட்வான்ஸ் தர முற்பட்ட போது, ''லாயிட்ஸ் ரோடில் அண்ணனைப் பார்த்துக் கொடுத்து விடுங்கள்'' என்றார். பெரியவர் சக்கரபாணியைச் சந்தித்து விவரங்களைக் கூறி, அட்வான்ஸ் தந்து விட்டுத் திரும்பினேன்.

பூஜை முடிந்தது. சில நாட்களுக்குப் பின், இரண்டு மூன்று நாட்களுக்குக் கால்ஷீட் தந்தார் எம். ஜி. ஆர். நானூறு, ஐந்நூறு இளைஞர்கள் குழுமியிருக்க, அவர்களுக்கு மத்தியில் புரட்சிகரமான கருத்துக்களை எம். ஜி. ஆர். ஆவேசமாகப் பேசுவது போல் காட்சி. இதற்கென்று நகரின் பல கல்லூரிகளுக்கும் வேன் அனுப்பி மாணவர்களை அழைத்து வரச் செய்தேன். காட்சியும் எடுத்து முடிக்கப்பட்டது.

அவ்வளவுதான். அதன்பின் ஷூட்டிங்குக்குக் கால்ஷீட் கிடைக்கவேயில்லை! ஒரு நாள் வேறு ஒரு பட ஷூட்டிங்கின் இடையில் எம். ஜி. ஆரைச் சந்தித்தேன். அவரது

கால்ஷீட் கிடைக்காததால் படப்பிடிப்பு தாமதமாகிக் கொண்டே போவதை நான் குறிப்பிட்டதும் எம். ஜி. ஆர்., நீண்ட பட்டியல் ஒன்றை என்னிடம் தந்தார். ''இதோ பாருங்க, இத்தனையும் நான் ஒப்புக் கொண்டுள்ள படங்கள். இத்தனை புரொட்யூசர்களும் என்னை நம்பித்தான் இருக்கிறார்கள்'' என்றார்.

27 படங்கள் அடங்கிய அந்தப் பட்டியலை ஒரு நோட்டம் விட்டு விட்டு நான் சிரித்தேன்.

''என்ன சிரிக்கிறீங்க?'' என்றார் எம். ஜி. ஆர்.

''இந்த லிஸ்ட்டின் படி நாகிரெட்டி, ஏ.வி. எம்., தேவர் முதலிய சிரமத்திலிருக்கும் தயாரிப்பாளர்கள் உங்களை நம்பி இருக்கும் போது, நான் உங்களிடம் கால்ஷீட் கேட்பது நியாயம் இல்லைதான்!'' என்றேன்.

எம். ஜி. ஆர். பதில் பேசவேயில்லை. அதற்குப் பின் கால்ஷீட்டுக்காக நானும் அவரை அணுகவில்லை.



பலமுறை நாங்கள் சந்தித்துக் கொண்டோம். ஆனால் நின்று போன 'அன்று சிந்திய ரத்தம்' பற்றி இருவருமே பேச வில்லை. ஆயினும் அவர் அன்பாகவும் பாசத்துடனும்தான் என்னிடம் பழகிவார்.

எம். ஜி. ஆர். என் படத்துக்குக் கால்ஷீட் தராததற்குக் காரணம் என்னுடைய தவறுதான் என்பது எனக்குப் பின்னால் தான் புரிந்தது! அது என்ன தெரியுமா? ''காதலிக்க நேரமில்லை', 'அன்று சிந்திய ரத்தம்' ஆகிய இரண்டு படங்களையும் ஒரே சமயத்தில் அறிவித்து, ஒரே நாளிதழின் ஒரே பக்கத்தில், எதிரெதிராக விளம்பரப்படுத்தியிருந்தேன். 'காதலிக்க நேரமில்லை' விளம்பரத்தில் அது கலர்ப் படம் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். 'அன்று சிந்திய ரத்தம்' விளம்பரத்தில் அத்தகைய குறிப்பு இல்லை. இதைப் பார்த்து விட்டுத்தான் எம். ஜி. ஆர். 'அப்செட்' ஆகியிருக்க வேண்டும். ஆனால், 'எம். ஜி. ஆரே அவ்வளவு பெரிய 'கலர்ஃபுல் பர்சனாலிடி'யாக இருக்கும் போது அவர் படத்துக்குக் கலர் எதற்கு?' என்பது என்னுடைய எண்ணப் போக்காக இருந்தது. அதனால்தான் 'வண்ணம் வேண்டாம்' என்று தீர்மானித்திருந்தேன். அந்த நாளில் கலர்ப் படம் எடுப்பது ரொம்ப 'காஸ்ட்லி' என்பதையும் சமூகப் படங்களில் 'காதலிக்க நேரமில்லை'தான் முதல் கலர்ப் படம் என்பதையும் நினைவில் கொண்டால், என் கருத்தைப் புரிந்து கொள்ள முடியும். எம். ஜி. ஆரின் வருத்தத்தையும் உணர முடியும்!

நான் செய்த தவறு என்னவென்றால், என் கருத்தை எம். ஜி. ஆரிடம் விளக்கிச் சொல்லி அவர் அனுமதி பெறாததுதான். கூறியிருந்தால் அவரும் பெருந்தன்மையுடன் என் கருத்தை ஏற்றுச் சம்மதம் தெரிவித்திருப்பார். அவ்வாறின்றி எதிரெதிரே வந்த இரு விளம்பரங்களைத் திடீரென்று பார்த்ததும் தம்முடைய ஸ்டேட்டஸ்ஸைக் குறைத்துப் புதுமுகங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது போல், அவை அமைந்து விட்டன என்பதாக அவர் கருதியிருக்கக்கூடும் தானே!

சினிமா உலகில் இதுபோல் எத்தனையோ விசித்திரங்கள்! என் இயக்கத்தில் வெளியான முதல் படம் 'கல்யாணப் பரிசு' தொடங்கி, என் படங்கள் எதுவானாலும் சென்னையைப் பொறுத்த மட்டில் காஸினோ தியேட்டரில் ரிலீஸ் ஆகும். இதைப் பார்த்து விட்டுப் பலர் என்னிடம், ''என்னங்க, காஸினோ தியேட்டரை விலைக்கு வாங்கிட்டீங்களா?'' என்று கூடக் கேட்டிருக்கிறார்கள்.

இப்படி ஒரு பேச்சு ஏன் வந்தது? காஸினோ தியேட்டர் மீது எனக்கென்ன பிடிமானம்? அடுத்த வாரம் சொல்கிறேன். அத்துடன் நான் எடுத்த அடுத்த படமான 'கலைக் கோயில்' பற்றியும் ஒரு ரசமான சம்பவத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம்!

டைரக்டர் ஸ்ரீதர்

கோடைச் சிரிப்பு!

"பழங்காலத்து ஃபிரிஜ் ஒன்று; சீப்பா ஆயிரம் ரூபாய்க்கு வருது'' என்றார் மெகானிக். ''கி. மு. வா? கி. பி. யா?'' என்றேன். ''ஓல்ட் இஸ் கோல்ட்'' என்று பதில் கிடைக்கவே எனக்கும் நப்பாசை : 'கோடையில் குளுகுளுவென்று ஐஸ் வாட்டர், மோர், ஐஸ்கிரீம்...'

ஃபிரிஜ் வந்தது. மாவு மிஷின் மாதிரி சத்தம்! ''வெட்கிரைண்டர் வாங்கிட்டாப் பலே இருக்கே'' என்று பக்கத்து வீட்டு மாமி வேறு...! மத்தியானம் ''இட் இஸ் டைம் ஃபார் ஐஸ்கிரீம்!'' என்று என் மனைவி டீவி விளம்பர பாணியில் கூறி, ஃபிரிஜ்ஜைத் திறக்க, ஷாக்! பால் பாலாகவே இருந்தது! அதுவும் இளம் சூடாக!

மெக்கானிக்கை அழைத்து வர, "Old is Gold'னுதானே சொன்னேன்; Coldன்னா சொன்னேன்?'' என்று ஜோக் அடித்து விட்டு, ஷேவிங் சோப்பும் பிரஷ்ஷும் கேட்டார். ''வீட்டிலேயே க்ஷவரத்தை முடிச்சுண்டு வரக் கூடாதா?'' என்று நான் கேட்க, அவர், ''காஸ் லீக் ஸார், டெஸ்ட் பண்ணக் கேட்கிறேன்'' என்றார். கைதேர்ந்த நாவிதரின் திறமையோடு இயங்கினார். அப்படியும் காஸ் லீக் தெரியாது போக, ஃபிரீஸர் காயிலைக் கழற்றி டிரம் தண்ணீரில் சிறிது சிறிதாக முக்க, ஓரிடத்தில் குமிழ்கள்! மொத்தத்தில் மேலும் இருநூறு ரூபாய் விழுங்கி விட்டுப் பதினைந்து நாள் நன்கு ஓடியது மாவு மிஷின்.

பதினாறாம் நாள் ஓடும் சத்தம் வரவில்லை! ''கம்ப்ரஸர் போயிடுச்சு; ஆயிரத்து ஐந்நூறுதான் ஆவும்'' என்று ஆரம்பித்த மெக்கானிக்கை நான் பார்த்த பார்வையே விரட்டி விட, பிளக்கைக் கழற்றி விட்டு ஃபிரிஜ்ஜை பீரோவாக மாற்றி விட்டேன். 1200 ரூபாய்க்கு பீரோ எங்கே கிடைக்கும் சொல்லுங்கள்!

ஒரே ஒரு கஷ்டம். வெட்கிரைண்டர் போன்ற அந்தச் சத்தம் இல்லாமல் தூக்கம் வர மாட்டேனென்கிறது!



பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்க நகைப் பரிசு பெறுபவர்:	ராஜா, ஃபிளாட் 5, ராஜேஷ் அபார்ட்மெண்ட், 280, எம். கே. என். சாலை, சென்னை - 600 016.



வெயிலுக்கு இதம்; வயிற்றில் எரிச்சல்!

நாலு தவலைத் தண்ணீரைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து டிரம்மை நிரப்பி விட்டு, ஐந்தாவது தவலைக்குக் குழாயடிச் சண்டை போட்டு வெற்றி பெற்றுத் திரும்பினால், நான் நிரப்பி விட்டுப் போன அத்தனை தண்ணீரையும் என் பையன் மொண்டு மொண்டு தலைக்குக் குளித்து விட்டு என்னைப் பார்த்துச் சிரிக்கிறான்! அவனுக்கு வெயி

லுக்கு இதம்; எனக்கு வயிற்றில் எரிச்சல்! நாலு சாத்துச் சாத்த, அவன் அழுகை ஓய்வதற்கு முன் அப்போதுதான் ஊரிலிருந்து வந்த என் தந்தை, ''இவ்வளவு தண்ணீர்க் கஷ்டத்தில், வீட்டை அலம்பி விடாட்டா என்ன? பெருக்கித் துடைத்தால் போதாதா?'' என்று கேட்க, கோபத்தை மீறிச் சிரிப்புத்தான் பொங்கியது!

- திருமதி ஸ்ரீனிவாசன், ஆவடி.

சூடான ஜோக்!

இரவு சாப்பிடும் போது மின்வெட்டு. பரிமாறிக் கொண்டிருந்த அம்மா சட்டென்று 2 - 3 மெழுகுவர்த்திகளை ஏற்றினாள்; சூடாகச் சாப்பிட்ட அப்பா, ''வியர்த்துக் கொட்டுது ஃபேனைப் போடு'' என்றார். அம்மாவோ, ''வேண்டாம் காற்றில் மெழுகுவர்த்தி அணைஞ்சுடும்'' என்றாள்.

ஒருகணம் மௌனமாய் இருவர் சொற்களையும் ஜீரணித்தோம். அடுத்தகணம் எழுந்த அட்டகாசச் சிரிப்புக்குப் பயந்து லைட்டே எரிய ஆரம்பித்து விட்டது!

- ஆர். ராஜலக்ஷ்மி, கரூர்.

வெண்ணெய் வழிய...

ரிடையர் ஆன என் கணவர் காலை பதினோரு மணி அளவில் சில நண்பர்களைப் பார்த்து வருவதாகக் கூறி, தமது அருமை ஸ்கூட்டரில் புறப்பட்டார். 'வெண்ணெய் வேண்டும்' என்று நான் சொல்லியிருந்தது நினைவு வர, அரை கிலோ வாங்கி ஸ்கூட்டர் பாக்ஸில் வைத்து விட்டு, மாலை மூன்று மணி வரை தம்மை மறந்து நண்பர்களுடன் அரட்டை. டிபன் நேரத்தை வயிறு உணர்த்த, வீடு புறப்பட்டவர், ஸ்கூட்டரி



லிருந்து ஆயில் லீக் ஆகக் கண்டு பதறிப் போய், கண்ணான ஸ்கூட்டரை மெக்கானிக்கிடம் கொண்டு போய் விட்டார்!

''என்னங்க ஸ்கூட்டரில் நெய் வாசனை ஜமாய்க்குது!'' என்று மெக்கானிக் கேட்டதும்தான், அரை கிலோ வெண்ணெய்யும் உருகி ஓடி விட்டதை உணர்ந்தார். ''ஹி, ஹி'' என்று வெண்ணெய்யுடன் முகத்தில் அசடும் வழிய, வீடு வந்து சேர்ந்தார். நடந்ததைக் கேட்டதும் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அதைப் பார்த்து அவரும் சிரிக்க, பண நஷ்டம் கூட மறந்தே போய் விட்டது, போங்கள்.

- சாரதா வேங்கடராமன், கோவை - 11.



குளிரக் குளிரக் குளிப்பாட்டு!

''வெயில் கொளுத்துது, குழந்தையைக் குளிரக் குளிரக் குளிப்பாட்டு'' என்று கூறி விட்டு ஆபீஸ் போய் விட்டார் என் கணவர்.

எனக்கு ஒரே எரிச்சல். 'இருப்பது ஒரு பக்கெட் தண்ணீர். துவைக்க அம்பாரமாய்த் துணிமணிகள். குளிரக் குளிரக் குளிப்பாட்டுவதாமே!'

''போடி! தண்ணீரை வேஸ்ட் பண்ணாம குளிச்சுட்டு வா'' என்று அதட்டினேன்.

கால் மணி நேரம் ஆயிற்று. இன்னும் குளியல் ஓயவில்லை. பக்கெட் என்ன, தண்ணீர் சுரபியா? ஆச்சர்யப்பட்டுக் கொண்டே போய்ப் பார்த்தால், என் மகள் ஒரு பக்கெட்டுக்குள் நின்று கொண்டு இன்னொரு பக்கெட்டிலிருந்து தண்ணீர் மொண்டு விட்டுக் கொண்டிருந்தாள். அப்புறம் பக்கெட் மாறி நின்று மறுபடி குளியல்! ''அப்பா சொன்னபடி குளிரக் குளிரக் குளிச்சுட்டேனே!'' என்றாள். சிரித்தேன். ஈரமென்றும் பாராமல் கட்டி அணைத்தேன்!

- ரூபி ஜெபகுமார், தூத்துக்குடி.



தெலுங்கு தேசம் கட்சி உடைந்தது பற்றி...?

● கே. ஆர். தேவேந்திரன், கொண வட்டம்.
? எம். ஜி. ஆரின் வள்ளன்மைக்கும் ஜெயலலிதாவின் வள்ளல் தன்மைக்கும் என்ன வித்தியாசம்?
! வலது கை கொடுத்ததை இடது கை அறியாவண்ணம் வழங்கியவர் எம்.ஜி.ஆர்.!

● நா. நாச்சிமுத்து, போடிநாயக்கனூர்.
? கோட்டையில் முதல்வர் எல்லோருடைய குறைகளையும் பொறுமையாகக் கேட்டு அசத்தி விட்டாரே?
! நான்கு மணி நேரத்தில் ஐயாயிரம் பேர் என்கிறார்கள். அதாவது 240 நிமிஷத்தில் 5000 பேர். அதாவது ஒருவருக்கு மூன்று வினாடிகளுக்கும் குறைவு. ரொம்ப ரொம்பப் பொறுமைதான்!

● வ. தே. பா., சென்னை.
? முதல்வரின் உருவத்தைப் பச்சை குத்திக் கொண்ட மந்திரிகளுக்குப் பதவி நிரந்தரம் தானே?
! பச்சை நிரந்தரம் என்பதில் சந்தேக மில்லை!

● வி. அரங்கநாதன், விளாப்பாக்கம் ❑
? கண்ணகி சிலை அருகே ஸ்கூட்டரில் சென்ற தம்பதியரைத் தாக்கிய போக்கு வரத்துத் துறை போலீஸ் பற்றிய தங்கள் கருத்து?
! முதல்வரின் பாதுகாப்பு என்ற பெயரில் நடக்கும் அதிகார துஷ்பிரயோகங்களில் இதுவும் ஒன்று. இதனால் முதல்வருக்கு ஏற்படக்கூடிய அவப்பெயர், போலீஸுக்கு ஏற்படுவதை விட அதிகம் என்பதை உணர்ந்து, போலீஸ் உயர் அதிகாரிகள் அடுத்த மட்ட அதிகாரிகளை நல்வழிப் படுத்த வேண்டும். நிதானம் முக்கியம்.

● இராஜ. சண்முகானந்தம், செம்பராய நல்லூர்.
? பட்டிமன்றங்களால் பயன் இருக்கிறதா? இல்லையா?
! தூர்தர்ஷனுக்கு நேரத்தைப் போக்க ஒரு நிகழ்ச்சி கிடைக்கிறது என்பது ஒரு பயன்தான்! நிற்க, அறுபத்து மூவர் உற்சவத்தையொட்டி மயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் நடைபெறும் ஒரு பட்டிமன்றத்தின் தலைப்பைப் பாருங்கள் : ''பெரிய புராணத்தில் மிகுந்து நிற்பது அடியார் பெருமையா? ஆண்டவன் பெருமையா?'' எதிர்வாதம் புரிவோர் ஆண்டவன் பெருமையையும் அடியார் பெருமையையும் குறைத்துக் கூற நேர்வது வரவேற்கத்தக்கதா? யோசியுங்கள்!

● கே. பி. சாரதி, வேலூர்.
? பாட்னா சாலைகளில் பயணம் செய்வது, 'ஹேமமாலினியின் கன்னங்களில் ஸ்கேட்டிங் செய்வது போலிருக்கும்' என்கிறாரே பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், உவமை எப்படி?
! உவமையில் விரசம் இருக்கிறது; உண்மை இல்லை. இதைவிட பீகார் இனக் கலவரங்களில் மக்கள் குற்றுயிரும் கொலையுயிருமாக அவதிப்படுவதற்கு ஓர் உவமை கூறலாமே அவர்!

● எஸ். ராம்கோபால், சென்னை - 33.
? தென்கச்சி சுவாமிநாதனின் 'இன்று ஒரு தகவல்' எப்படி?
! எளிமை + சுவை + ஹாஸ்யம் + புதிய விஷயம். தோழமையுடன் பேசும் நடை காரணமாக விஷயம் மனசில் பதிந்து போகிறது. அதனாலேயே சில தகவல்கள் மறு ஒலிபரப்புச் செய்யப்படும் போது அலுப்பு உண்டாகிறது.

● எஸ். எஸ். டி. ராஜன், சிறுதையூர்.
? ஆலய நிர்வாகக் குழு உறுப்பினர்களாக அ. இ. அ. தி. மு. க. வினர் நியமிக்கப்படுவது சரியா?
! நியமிக்கப்படுவதும், நியமித்ததற்

நீங்கள் கேட்டவை - தராசு



☛ வள்ளன்மையில்...



☛ ...வித்தியாசம்?



☛ உவமை எப்படி?



☛ கவிஞன் தேவையில்லை?

காகப் புரட்சித் தலைவிக்கு நன்றி தெரிவித்து அவர்கள் நாளிதழ்களில் விளம்பரம் செய்வதும், அழகாயில்லை என்பதுடன், நோக்கங்களைச் சந்தேகத்துக்குரியதாக்குகிறது. முதல்வர் என்னதான் விளக்கங்களைக் கூறினாலும் நடைமுறையில் மிகுந்த எச்சரிக்கை தேவை. இதற்கு அந்த அந்த ஊர் மக்கள், குழு அமைத்து விழிப்புணர்ச்சியுடன் இருந்தால்தான் உண்டு.

● மஸ்கெலியா இலங்கேஸ்வரன், வேலூர்.

? கிரிக்கெட்டில் நம் தோல்விக்கு முழுப் பொறுப்பு யார்?

! கண் காணாமல் மறைந்து விட்ட இருவாளர் 'டீம் ஸ்பிரிட்'!

● கே. ஸ்ரீனிவாசன், பெங்களூர்.

? போஃபர்ஸ் விசாரணை மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறதே?

! மறுபடி தலையெடுக்க விடாமல் ஒரேயடியாகச் சமாதி கட்டத்தான் மீண்டும் விசாரணை ஆரம்பமாகிறது.

● சுபாஷ் சந்திரபோஸ், செட்டிகுளம்.

? நியூஸிலாந்து அணி குறித்து?

! எதிர்பாராத ஆச்சர்யம்!

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? 'திரைப்படப் பாட்டு எழுத ஒரு கவிஞன் தேவையில்லை' என்று வைரமுத்து கூறியது சரியா?

! இன்றையச் சூழலில் 'தேவை யில்லை' என்பது சரி. என்றாலும் கவிஞனாகவும் இருந்தால் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது பாடலில் இலக்கிய நயத்தைக் கொண்டு வருவது சாத்தியமே என்பதையும் மறப்பதற்கில்லை. அடியோடு ஒன்றுமில்லாமல் போவதற்கு இது மேலல்லவா?

● கே. ஏ. காளிமுத்து, ராணிப்பேட்டை.

? தெலுங்கு தேசம் கட்சி உடைந்தது பற்றி...?

! தேர்தலின் போது என். டி. ஆர்., ''நமது மாநிலக்காரர் பிரதமராக வரணும்'' என்று கூறி எதிர் வேட்பாளரை நியமிக்காமல் விட்டார். இப்போது (அதற்குள்) ''எதிர்த்து வோட்டுப் போட்டுப் பிரதமரைப் பதவியிலிருந்து இறக்கு'' என்கிறார். தெலுங்கு தேச எம்.பிக்கள் சிலர் இதை எதிர்த்து, தனி அணியாகப் பிரிந்து போனதில் வியப்பில்லை. கட்சி உடைந்ததற்கு என். டி. ஆரின் இந்தத் தடுமாற்றமும், கட்சியைத் தமது குடும்பச் சொத்தாக எண்ணும் மனப்பான்மையும்தான் காரணமே தவிர, அவர் குற்றம் சாட்டுவது போல் பிரதமர் எம்.பிக்களை விலைக்கு வாங்கி விட்டார் என்று கருத இடமில்லை. ஆட்சியைக் கவிழ்க்க இது ஏற்ற தருணமல்ல என்பதைச் சற்று யோசித்திருந்தால் என். டி. ஆர். சுலபமாகப் புரிந்து கொண்டிருக்கலாம். கட்சி உடைவதும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

● க. ஜெகன் செல்லையா, புதுதில்லி.

? மயிலாடுதுறையில் கள்ளச் சாராயச் சாவுகள் குறித்து?

! ரொம்பப் பரிதாபம்தான். ஆனால் இது மதுவிலக்கு ரத்துக்கு வாதமாகி விடக் கூடாது. மது தண்ணீராக ஓடும் மாநிலங்களிலும் கள்ளச் சாராய மரணங்கள் நிகழ்கின்றன. சமீபத்தில் கூட நடந்திருக்கின்றன. செய்ய வேண்டுவன : 1. கட்சிக்காரர்களைக் கண்டித்து வைப்பது, 2. மதுவிலக்கு போலீஸை பலப்படுத்துவது, 3. பிரசாரத்தைத் தீவிரப்படுத்துவது, 4. ஃபைலில் கையெழுத்துப் போடத் தாமதமானதால் கள்ளச் சாராய மன்னர்கள் தப்ப வழி ஏற்பட்டது போன்ற அசம்பாவிதங்கள் மறுபடி நிகழாமல் முதல்வர் எச்சரிக்கையுடன் செயலாற்றுவது.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
வி. அரங்கநாதன்,
சாவடித் தெரு,
விளாப்பாக்கம் (அஞ்சல்),
ஆர்க்காடு (வட்டம்) - 632 521.

கணிதத்தில் டியூஷன்

பி. எஸ்ஸி. கணிதம் முதல் வகுப்பில் தேறி, தற்போது எம். எஸ்ஸி கணிதம் தபால் மூலம் OSMANIA பல்கலைக் கழகத்தில் படித்து வருகிறேன். நல்ல மதிப் பெண்களுடன் தேற விருப்பம். நுங்கம் பாக்கம், மாம்பலம் அல்லது மயிலாப் பூரில் டியூஷன் எடுக்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். தக்க டியூஷன் ஃபீஸ் தரத் தயாராக உள்ளேன்.

- வை. சுப்பிரமணியன்,
34, நாகேஸ்வரா சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை - 34.

கடினமான தேர்வு

ஐ. ஏ. எஸ். தேர்வு எழுத விண்ணப் பித்துள்ளேன். இந்தக் கடினமான தேர்வு பற்றி விவரம் அறிந்தவர்களுடன் தபால் மூலமோ, நேரிலோ தொடர்பு கொண்டு பலன் பெற விரும்புகிறேன். உதவுங்கள்.

- பி. பாலகுமார்,
டி. என். ஆர். நகர்,
தொண்டாமுத்தூர்,
கோவை - 641 109.

புத்தகச் செல்வம்

புத்தகச் செல்வங்களைச் சேமிப்பது என் விருப்பம். உங்களுக்குத் தேவையில் லாத, படித்து முடித்த புத்தகங்களைப் பரணில் போடுவதற்குப் பதில், எனக்கு அனுப்பலாமே. எந்த சப்ஜெக்டானாலும்



பாலம்

சரி, வரவேற்கிறேன்.

- அ. அன்பழகன்,
16, மாணிக்கம் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

சம்பாதிக்க வழி

வேலையற்ற இளைஞர்கள், ஓய்வு பெற்றோர் மற்றும் பெண்மணிகள் குறைந்த முதலீட்டில் மாதம் ரூ 1000க்கு அதிகமாகச் சம்பாதிக்க வழிமுறைகள் தெரி விக்கப்படும். அலுவலக வசதி, தொலை பேசி போன்றவை கட்டாயமில்லை.

- எஸ். ராமச்சந்திரன்,
8/26, இந்திரா காந்தி சாலை,
முதல் மாடி, பல்லாவரம்,
சென்னை - 600 043.

எல்லோருக்கும் கல்வி

'எல்லோருக்கும் கல்வி' என்ற அமைப்பு, பள்ளிக்குச் செல்ல முடியாத, ஆனால் வேலைக்குச் செல்லும் பத்து வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்கு ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுக்கிறது. இதற்கு தினமும் ஒரு மணி நேரம் ஒதுக்கி இலவசமாகப் பணியாற்றக்கூடிய அன்பர் கள் தொடர்பு கொள்ள முகவரி :

- "எல்லோருக்கும் கல்வி"
பிளாட் 1, 8வது தெரு,
பாலாஜி நகர், நங்கநல்லூர்,
சென்னை - 600 061.

வாழைப்பழ ஏற்றுமதி

வாழைத் தார்களை அரபு நாடு களுக்கோ அல்லது மற்ற வெளிநாடு களுக்கோ வியாபார ரீதியில் ஏற்றுமதி செய்ய விருப்பம். ஏற்றுமதி வர்த்தகம் சம்பந்தமான எல்லா விவரங்களையும் கற்றுத் தந்து அறிவுரை வழங்கக் கூடிய வர்களை நாடுகிறேன்.

- த. ராமச்சந்திரன்,
58 F, யாதவர் நடுத் தெரு,
வள்ளியூர் - 627 117.
நெல்லை (மாவ)

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியா லயம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்க இய லாது.)

குடும்பத்தலைவிகளுக்கு ஓர் நற்செய்தி!

ANS

சுவைமிக்க, உயர்ந்தரக பருப்பு வகைகள் வருடாந்திர தேவைக்கு வாங்க இதுதான் சமயம்

துவரம் பருப்பு (TOOR DAL)

3 ரோசஸ், அமுதம், அழகு பிராண்ட்

தரத்திற்கு 1 வருடம் உத்திரவாதம்

உளுத்தம் பருப்பு (ORID DAL)

பாக்யம் பிராண்ட்

தரத்திற்கு 6 மாதம் உத்திரவாதம்

அரிசி

காமதேனு, பொன்னி பச்சரிசி

25 கிலோ, 50 கிலோ பாக்கெட்டுகளிலும் கிடைக்கும்



தேவைக்கு அணுகவும் :

ஏ. என். சீனிவாசக நாடார் அண்ட் சன்ஸ்,
45A, அச்சரப்பன் தெரு, சென்னை 600 001.
தொலைபேசி : 526529/526555/526556

யுனைடெட் இந்தியா தால் கம்பெனி,
176, அண்ணாபிள்ளை தெரு, சென்னை 600 001.
தொலைபேசி : 526936

பாக்யம் அண்ட் கம்பெனி,
5, தெற்கு உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை 600 017.
தொலைபேசி : 445327

தக்க சமயத்தில் கிடைத்த உதவி

'வட்டிக்குக் கடன் வாங்கி அட்டிகை வாங்கியவள் அந்த அட்டிகையையே விற்று வட்டி கட்டினாள்' என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? கிட்டத்தட்ட இதே போன்ற ஒரு நிலைமை எனக்கு ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் எனக்கு மதி மந்திரியாய் - நிதி மந்திரியாய் விளங்கி உதவியவள் என் மனைவி.

விவரம் இதுதான்:

எல்லா நடுத்தரக் குடும்பத்தினரையும் போலவே எங்களுக்கும் ஒரு லட்சியம் - சொந்தமாக ஒரு வீடு வேண்டும் என்று. எனவே, வீடு கட்டக் கடனுதவி வழங்கும் சங்கம் ஒன்றில் கடனுதவி பெற்று வீடு கட்டத் தொடங்கினோம்.

அப்போது என் மனைவி ஒரு யோசனை சொன்னாள். 'ஸ்ரீராமில் சீட்டுச் சேர்ந்து விடுங்கள். சமயத்தில் தள்ளி எடுத்து அந்தப் பணத்தை உபயோகப் படுத்திக் கொள்ளலாம்' என்று அவள் அப்போது சொன்ன அந்த யோசனையை நான் கேட்கவில்லை. அதன் விளைவு, வீடு முடிவுறும் சமயத்தில் ஏகப்பட்ட சிரமம் ஏற்பட்டு விட்டது.

நண்பர்களை அணுகி, வட்டிக்குக் கடன் வாங்கி ஒரு வழியாக வீட்டைக் கட்டி முடித்தேன். அதன் பிறகுதான் சமாளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. வீட்டுச் செலவுகள், வீடு கட்ட வாங்கிய கடனுக்கான மாதத் தவணை, நண்பர்களிடம் வாங்கிய கடனுக்கான வட்டி.... பளு கூடியது. என்ன செய்வது, ஏது செய்வது என்று புரியாத நிலை.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தாள் என் மனைவி. நான் முன்பு புறக்கணித்த அதே யோசனையைச் செயல் படுத்தினாள். நுழைவுப் படிவங்களில் என்னிடம் கையெழுத்து வாங்கி ஸ்ரீராமில் சீட்டுச் சேர்ந்தாள். பின் என்னிடம் கூறினாள்:

''மூன்று மாதங்கள் கழித்து ஏலத்தில் தள்ளி எடுங்கள். அந்தப் பணத்தைக் கொண்டு நண்பர்களிடம் வாங்கிய கடனை அடைத்து விடுங்கள். மாதா மாதம் சீட்டுக்கு எப்படிப் பணம் செலுத்துவது என்கிற கவலை வேண்டியதில்லை. இப்போது கொடுக்கும் வட்டியில் பாதியளவு தான் சந்தாத் தொகை இருக்கும். செலவுகளை இழுத்துப் பிடித்து அந்தத் தொகையைச் செலுத்தி விடலாம்.''

அப்படியே செய்து விட்டேன். கடனும் அடைந்து விட்டது. ஆலோசனை வழங்கிய என் மனைவியையும் தக்க சமயத்தில் உதவிய ஸ்ரீராமையும் என்னால் மறக்கவே முடியாது.

— கே. எம். பத்மநாபன்,
சென்னை - 600 045.



"என் மனைவி- நிதி மந்திரியும் கூட!"



வேலூரின் வளர்ச்சிக்கு இவரது முயற்சி



''தொழில் ரீதியாக எடுத்துக் கொண்டால், வேலூர் நகரத்தில் ஏதுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதனால்தான் இம் மாவட்டத்தின் மற்ற இடங்களில் பதனிடப்படும் தோல்களைப் பயன்படுத்தும் விதமாக ஒரு ஷூ தொழிற்சாலையையும், நூற்பு ஆலை ஒன்றையும் அரசு துவங்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறேன்!'' என்கிறார் வேலூர்த் தொகுதி எம். எல். ஏ. (இ. காங்.) ஞானசேகரன்.

''எனது தொகுதியில் உள்ள பாலமதி, செங்காநத்தம் போன்ற இடங்களில் யாதவர்கள் அதிகம். அவர்கள் பயனுறும் விதமாக ஆடு, மாடுகள் வளர்ப்பு பற்றி விஞ்ஞானபூர்வமாக விளக்கிச் சொல்லி ஊக்குவிக்க, ஒரு கல்லூரி அமைந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்றும் அரசிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ராணிப்பேட்டையிலுள்ளது போல் வேலூரில் ஒரு தொழிற்பேட்டையும் வேண்டும். நிதிவசதி காரணமாகத்தான் இவையெல்லாம் தள்ளிக் கொண்டே போகிறது...'' என்கிறார்.

''வேலூரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் வரும் வாய்பிருக்கிறதா? நீங்கள் அதற்கு முயற்சி எடுத்திருக்கிறீர்களா?''

''சட்டசபையிலேயே இது பற்றிப் பேசினேன். அமைச்சர் முதலில் ஒப்புக் கொள்ள மறுத்தாலும் முதல்வரின் வேண்டுகோளின் பேரில், இந்த ஆண்டு செயல்படுத்தப்பட இருப்பதாக உறுதிமொழி கொடுத்திருக்கிறார்.''

''வேலூர் பஸ் நிலையம் மிகுந்த இடநெருக்கடியில் இருப்பதால், பஸ்கள் ஒரே இடத்தில் இயங்காமல், மூன்று இடங்களில் நிறுத்தப்பட்டு, பொது மக்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறதே?''

''உண்மைதான். இப்போதிருக்கும் பஸ் நிலையத்தைக் கோட்டைக்கு ஒதுக்குப்புறமாக உள்ள இடத்திற்கு மாற்றும் உத்தேசம் இருக்கிறது. அப்படி மாற்றப்பட்டால்தான் இடநெருக்கடி குறையும். அதோடு இப்போதைய பஸ் நிலையம், அதை ஒட்டியுள்ள மார்க்கெட்டின் விஸ்தரிப்புக்கும் இடம் தரும்.''

இங்குள்ள பீடித் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை முதலாளிகளிடம் அடகு வைக்கும் நிலை மாற வேண்டுமானால், கேரளாவில் செய்யப்படுவது போல், இங்கும் தொழிலாளர்களைக் கொண்டு கூட்டுறவு முறையில் பீடித் தொழிற்சாலையை ஆரம்பிப்பதுதான் நிரந்தரத் தீர்வு என்பதில் எம். எல். ஏ. வும் உறுதியாக இருக்கிறார்.

கடைசியாக, வேலூரை ஒட்டியிருக்கும் துத்திப்பட்டு கிராமத்தில், கணவனால் கைவிடப்பட்டுக் கூலி வேலை செய்து பிழைத்து வரும் மல்லிகா நமக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பற்றி எம். எல். ஏ. விடம் சொன்னோம்.

ஆறாம் வகுப்புப் படித்து வரும் தமது ஒரே மகனுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலை மல்லிகாவுக்கு. சி. எம். சி. மருத்துவமனையில் அதற்குச் சுமார் 35,000 ரூபாயாவது செலவாகும் என்று சொல்ல, தமிழக முதல்வருக்கும் ஆளுனருக்கும் உதவி கேட்டு மனு மேல் மனுவாக எழுதியும் பயனில்லாமல் போகவே, நமக்கு எழுதியிருந்தார். அதைத்தான் எம். எல். ஏ. விடம் சொன்னோம். ''அந்தப் பெண்மணி உங்கள் தொகுதிக்குள் வரவில்லையே என்று கருதாமல், ஆவன செய்யுங்கள்!'' என்றோம்.

''எந்தத் தொகுதியாக இருந்தால் என்ன! நான் உடனடியாக ஆளனுப்பி முழு விவரங்களையும் தெரிந்து கொண்டு வந்து, அந்தச் சிறுவனின் இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து பணம் வாங்கித் தர ஏற்பாடு செய்கிறேன். அது இனி என் பொறுப்பு!'' என்றார் ஞானசேகரன்.

- சார்ல்ஸ்

பம்பாய்க் கடிதம் :

பஸ் ஏற வந்த புலி!

பம்பாய்ப் புறநகர்ப் பகுதியில் உள்ள காட்டிலிருந்து தவறி வந்த சிறுத்தைக் குட்டியொன்று, காலை 9 மணியளவில் மகாகாளி பஸ் டெர்மினஸில் நின்றிருந்த ஒரு பஸ்ஸின் கீழ் படுத்துக் கொண்டு, அந்த வட்டாரத்தையே அல்லோலகல்லோலப்படுத்தியது. பீதியடைந்த மக்கள் போலீஸையும், தீ அணைப்புப் படையையும் கூப்பிட, எதற்கும் மசியவில்லை அந்த சிறுத்தைக் குட்டி! பின்னர் ஒரு மிருக வைத்தியர் வரவழைக்கப்பட, மயக்க மருந்து அடங்கிய ஊசி ஒன்றை அதன் மீது அவர் 'சுட்டார்'. புலி மயங்கியதும் கோணியில் குண்டுக்கட்டாகக் கட்டிக் காட்டில் கொண்டு போய் விட்டனர்.

முதியோருக்குச் சலுகை :

பம்பாய் லோகல் எலக்ட்ரிக் டிரெயினில் பயணிப்பது இளைஞருக்கே பிரம்மப் பிரயத்தனம். முதியோருக்குக் கேட்கவே



☛ பஸ்ஸின் அடியில் சிறுத்தைக் குட்டி

வேண்டாம்! மேற்கு ரயில்வே, அவர்கள் கஷ்டம் உணர்ந்து, மதியம் 12 முதல் 3 மணி வரை 65 வயதுக்கு மேலானவர்களுக்குத் தனியிடம் ஒதுக்கியிருக்கிறது. இந்த கோச்சுக்கு வெளியே ''சீனியர் சிடிஸன்ஸ் கம்பார்ட்மெண்ட்'' என்ற அறிவிப்பு இருக்கும்.

போதை மருந்துக்கு எதிர்ப்பு :

சுனில்தத், முன்னாள் ஷெரீஃப் நானா சுதாசமா, நடிகை மீனாட்சி சேஷாத்ரி, நடிகர் அஸ்ரானி போன்றோர் போதை மருந்துக்கு எதிரான இயக்கம் ஒன்றைத் துவக்கியுள்ளனர். ''அரசின் செயலால் மட்டும் இக்கொடுமையை ஒழிக்க முடியாது. குடும்பத்தில் பாசம், பிணைப்பு இவை இருந்து ஒருவருக்கொருவர் அன்பு காட்டினால் இளைஞர்கள் வெளியுலகில் போதை மருந்துகளை நாட மாட்டார்கள்'' என்றார் சுனில்தத். இந்தியாவில் போதை மருந்தின் ஆதிக்கம் அதிகம் உள்ள நகரம் பம்பாய்!

தானாவில் தட்டம்மைக் கொடுமை

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பம்பாய் தானாவில் தட்டம்மையின் பின்விளைவுகளால் பாதிக்கப்பட்டு 35 குழந்தைகள் மாண்டிருக்கின்றன. குழந்தைகளுக்குப் பிறந்த 9 மாதத்திற்குள் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தாலும் இப் பகுதியில் உள்ள மலைவாழ் மக்களின் எதிர்ப்பினாலும், அரசாங்க மருத்துவர்களின் மெத்தனத்தினாலும் இந்த மரணங்கள் நேர்ந்துள்ளன. காலங் கடந்து அரசாங்கம் இப்போது விழித்துக் கொண்டு தடுப்பு ஊசி போடுவதில் தீவிரம் காட்டுகிறது. குழந்தைகட்கு போஷாக்கு தரும் உணவுகள் கொடுப்பதற்கும் முக்கியத்துவம் தர வேண்டும்.

– ராஜீவி நரசிம்மன்

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.

"பேண்டீ லைனரா? எதுக்கு?"

''ஏன் கூடாது! பேண்டீயில் கறை படுவதை நீ விரும்புவாயா?''



''ஃப்ரெஷ்டேஸ் பேண்டீ லைனர் என் பேண்டீயை புத்தம்புதிதாக வைக்கிறது. முன்பெல்லாம் வெள்ளை பட்டு என் பேண்டீ ரொம்ப அழுக்கா இருக்கும். சில சமயம் வெளியூருக்கு போனாலோ, மற்றவர் வீட்டில் தங்கும்போதோ இம்மாதிரி கறை படிந்த பேண்டீக்களை, உலர்த்தும்போது எத்தனை தரம் சங்கடம் தெரியுமோ''.

''எப்போதாவதுன்னா சரி... தினமுமா?''

''ஏன் கூடாது? அந்த அசௌகரியமான உணர்வு எத்தனை பிரச்சினையாய் இருந்தது தெரியுமா? இப்ப எனக்கு புது தன்னம்பிக்கை கிடைச்சிருக்கு.''

''பேண்டீ லைனர் சௌகரியமா இருக்கா?''

நிச்சயமா. உண்மையில் அதை அணிந்திருக்கும் உணர்வே தெரியாது. அத்தனை சின்னதா, மெல்லிசா இருக்கும். ஒரு லைனிங் மாதிரிதான்!''

''அடடே! டியோடரண்ட் பற்றி சொல்லவே இல்லையே.''

''நீ சொல்றதிலும் விஷயம் இருக்கு. வாங்கிப் பார்க்கிறேன்''.



ஃப்ரெஷ்டேஸ் பேண்டீ லைனர்... எப்போதும் புத்தம்புதிய பேண்டீ அணிந்திருக்கும் உணர்வு.

வேலை செய்யும் போது, பயணத்தின் போது, உடற்பயிற்சியின் போது..கர்ப்பமாக இருக்கும் போதும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

Freshdays is a TM of J&J, U.S.A.

everest/91/JJ/283 tm

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka